
363

# சுதேச மித்திரன்

Vol-24 3.10.63 no-38

JL
0211,N30
N53·24.38
158876

# சுதேசமித்திரன்




"இதென்னடா வம்பாகப் போயிடுத்து, இந்தச் சோகக் காட்சி முடியும்வரை மேலேயுள்ளவரின் கண்ணீர் அடங்காது போலிருக்கே!"

# சுதேசமித்திரன்

## சந்தா விகிதங்கள்

★

### தினப்பதிப்பு

| | (இந்தியா, இலங்கை, தபால் மூலம்) | | சென்னை | | வெளிநாடு | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ | ரூ. | அ. | ரூ. | அ. |
| 1 வருடம் ... | 26 | 0 | 24 | 0 | 32 | 0 |
| 6 மாதம் ... | 13 | 8 | 12 | 8 | 16 | 0 |
| 3 மாதம் ... | 7 | 0 | 6 | 8 | 8 | 0 |
| 1 மாதம் ... | 2 | 8 | 2 | 4 | — | |

தனிப்பிரதி

ஞாயிறு மலர் ... விலை 2 அணா

இதர நாட்களில் ... விலை 1 அணா

### வாரப்பதிப்பு

| | ரூ. | அ. | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| 1 வருடம் ... | 13 | 0 | 16 | 0 |
| 6 மாதம் ... | 7 | 0 | 8 | 0 |
| 3 மாதம் ... | 3 | 12 | — | |

**தனிப் பிரதி அணா 4.**


சர்க்குலேஷன் மானேஜர்,
சுதேசமித்திரன்.

363


Vol XXIV] விஜய ஞு ஐப்பசிமீ 2உ (18—10—53) [No. 38


| | | |
|---|---|---|
| கடற்படை வளர்ச்சி | | 3 |
| காற்றுவாக்கிலே...... | சிரேயஸ் | 4 |
| குதர்க்கம் | தரளம் | 5 |
| போலிவைத்தியன் | தே. வீரராகவன் | 6 |
| பாக்ய சக்கரம் | ப. ரா. | 11 |
| உங்கள் காலபலன் | ராவ் | 19 |
| வாத்ஸல்யம் | குகப்ரியை | 24 |
| நல்ல பாம்பு | சி. ஆர். ராஜம்மா | 31 |
| சூரப்புலி | பிகில் | 35 |
| அனுமந்தன் குன்று | சந்தனு | 38 |
| சாரணர் உலகம் | சித்தார்த்தன் | 40 |
| தையற்கலை | எ. சுகுமார் | 41 |
| ஹிந்தி உலகம் | பண்டிதஜி | 42 |
| விளம்பரப் பெண் | சுகி | 44 |
| கலாமண்டபம் | | 47 |


'மித்திரன்' வாரப் பதிப்பில் கதைகளில் வெளியாகும் பெயர்கள் சம்பவங்கள் எல்லாம் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.



கடற்படை தினத்தையொட்டி பம்பாயில் நடந்த போர்க்கப்பல்களின் பவனி.



ஐக்கிய முன்னணிக்கு ஏற்பாடு

ஆந்திராவிலுள்ள கம்யூனிஸ்டுகள், சென்னையில் கிடைத்த தோல்விகளை லக்ஷியம் செய்யாமல் புது ராஜ்யத்திலும் ஐக்கிய ஜனநாயக முன்னணி ஒன்றை அமைக்கப்போகிறார்களாம். நாகிரெட்டி சொல்லுகிறார்!


வாழிய செந்தமிழ்

சுதேசமித்திரன் வாரப்பதிப்பு

வாழ்க நற்றமிழர்

Vol XXIV] விஜயஸு ஐப்பசிமீ 2உ ★ 1953ஸு அக்டோபர்மீ 18உ [No 38


# கடற்படை வளர்ச்சி

★

இந்நாடு யாருடனும் சண்டைக்குப் போக எண்ணவில்லை; பிறர் பூமியைக் 'கவரும் கருத்து நமக்கு எள்ளளவும் கிடையாது. எனினும் அத்தகைய துர்ப்புத்தி கொண்டவர்கள் ஒரு சிலரேனும் உலகில் உள்ளவரை இந்தியா தற்காப்புக்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு, துராக்கிரமிப்புக்காரர் எவரையும் எதிர்த்தடிக்கத் தயாராக இருந்தேயாக வேண்டும். இதற்கு ஒத்தவாறு நமது மூவ்வகைப் படைகளில் ஒன்ருன கடற்படை வளர்ச்சியடைந்து வருவது நம்மனைவருக்கும் மகிழ்ச்சியளிக்கக் கூடியது. அன்று கடற்படை தினத்தையொட்டிய விழாவின்போது அப்படையை பிரதம மந்திரி ஸகிதம் ஜனுதிபதி பார்வையிட்டார் அப்படையோடு பல வர்த்தகக் கப்பல்களும் அணி வகுத்து நின்ற காட்சியைக் குறித்து நம் ஜனுதிபதி விசேஷ மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். தேசத்தின் நல்வாழ்வுக்கு சண்டைக் கப்பல்களோடு வர்த்தகக் கப்பல்களும் போதியளவு இருப்பது அத்தியாவசியம். சாதாரண காலத்தில் நாட்டின் ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகம் பெருகப் பயன்படும் அக்கப்பல்கள் யுத்த சமயத்தில் இரண்டாந்தரமான காவல் கப்பல்களாகவும் உதவக்கூடும்.

கடற்படையைப் பற்றிய வரை, சமீப காலத்தில் அத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றி இந்தியா விசேஷப் பெருமை கொள்ள இடமுண்டு. கப்பலோட்டும் திறன் நமக்கு முற்றிலும் புதிதல்ல. இவ்வகையில் இந்தியர் முன்னணியில் இருந்து வந்ததற்கு சரித்திரத்தில் பல சான்றுகள் உண்டு. பின்னர் இந்நாடு வரவர அத்திறனை இழந்து வேறு பல வகையிலும் நம் சமூகம் பொலிவிழந்ததற்கான காரணங்களை இங்கு விஸ்தரிக்கத் தேவையில்லை. ஆனுல் சுயேச்சையைத் திரும்பப் பெற்றபின், இந்நாடு மற்ற துறைகளைப்போல் இவ்வகையிலும் துரிதமாக முன்னேறுவதற்கான சந்தர்ப்பம் எதையும் கைநழுவ விடவில்லை. நாம் விடுபடுமுன்பும் 'இந்தியக் கடற்படை என்ற பெயரில் ஒருசில கப்பல்கள் இயங்கி வந்ததுண்டு. ஆனுல் அது உண்மையில் பிரிட்டிஷ் கடற்படையின் ஒரு அனுபந்தமே. இரண்டாவது யுத்தத்தின் போது இந்த இந்தியக்கடற்படை இன்னும் சிறிது விரிவடைந்து பல கடல்களில் எதிரிகளுக்கு வேதனை உண்டாக்கி வந்தது அனைவருக்கும் தெரியும். அந்த யுத்த முடிவில் மற்ற தேசக் கடற்படைகளைப் போல் நமது கடற்படையும் சுருங்கியது மட்டுமில்லை. உடனடியாக தேசப் பிரிவினையைத் தொடர்ந்து அக்கடற்படையையும் கூறுபோட வேண்டியதாயிற்று. அதாவது அக்கடற்படையில் மூன்றில் ஒரு பங்கும், மூன்று முக்கியமான கடற்படை நிலையங்களும் பாகிஸ்தான் கைக்குப் போய்ச் சேர்ந்தன. இந்நிலையில் நமது கடற்படையை ஒரு சீரான அடிப்படையில் அமைத்து, அதை இந்திய மயமாக்குவதும், அதற்கு வேண்டிய நவீன யுத்த தளவாடங்கள் கிடைக்கச் செய்வதும் எளிய காரியங்களன்று. இவற்றை நமது சர்க்கார் கூடியவரை சிறக்கவே நிறைவேற்றி வந்திருக்கின்றனர்.

சென்ற ஐந்து ஆண்டுகளில் நமது கடற்படை கணிசமாக விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. நவீன கடற்படைக்கு இன்றியமையாத விமான படை வளர்ச்சியிலும் நம் அதிகாரிகள் தக்க கவனம் செலுத்தி வந்திருக்கின்றனர். இத்தகைய பலம் போதியளவு இல்லாததால்தான் சென்ற யுத்தத்தில் முதல்தரமான இரு பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களை ஜப்பானியர் எளிதில் மூழ்கடிக்க முடிந்தது. நமது கடற்படைக்குப் பல போர்க் கப்பல்கள் வாங்கிச் சேர்த்திருப்பதுடன், இப்படையினருக்கு வேண்டிய பயிற்சியை முற்றிலும் இந்தியாவிலேயே அளிக்க நம் அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருவதும் வரவேற்கத்தக்கது. நமது கடற்படைத் தலைவர் சுட்டிக்காட்டியிருப்பது போல், இப்படை வளர்ச்சியில் இதுவரை ஏற்பட்டுள்ள அபிவிருத்தி நமக்குத் திருப்தி அளிக்கக் கூடியதாயினும், இத்துறையில் எஞ்சியுள்ள வேலை அதிகம். இதுவும் விரைவில் பூர்த்தியாகி நமது கடற்படை முற்றிலும் இந்திய மயமான ஒரு முதல் தர தற்காப்புச் சாதனமாக விளங்கும் நாள் தூரத்திலில்லை என்றே நாம் எண்ணுகிறோம்.

# காற்றுவாக்கிலே...

பார்த்தீர்களா ராஜாஜியின் கபட நாடகத்தை? 'மந்திரி சபையை ஏன் விஸ்தரிக்க வேண்டும்? ஆந்திரா பிரிந்ததும் தான் வேலை குறைந்து விட்டதே, இப்போது இருப்பவர்களே போதாதா!' என்றெல்லாம் போக்குக்காட்டிவிட்டு மேலும் மூன்று பேரை நியமித்து விட்டார், மூன்றும் பேர் அறியாமல்!

ஆமாம், கடைசி நிமிஷம்வரையில் யாருக்குமே தெரியாமல் கப்சிப்பென்று முடிந்து விட்டது காரியம். ஆசாமிகளைப் பொறுக்கி,பதவியேற்புவைபவத்துக்கும் ஏற்பாடு செய்த பிறகு தான் சக மந்திரிகளிடமும் அவிழ்த்துவிட்டிருக்கிறார் ரகசியத்தை!... அட, அவர்களைத்தான் மதிக்கவில்லை; மாகாண காங்கிரஸ் தலைவரையாவது கலந்தாலோசித்தாரா? ஊஹூம், எனக்கென்னவோ அவர் அப்படிச் செய்திருப்பாரென்று தோன்றவில்லை. காமராஜரைக் கலந்திருந்தால் இப்படியா இருக்கும் 'ஸெலக்ஷன்.'?கட்சியிலேயே எவ்வளவோ மாமணிகள் இருக்க, வெளியிலிருந்து ஒரு பெண்மணியை நுழைக்க அவரா சம்மதித்திருப்பார்!

ஆனால் நேருஜி வந்தபோதே எனக்குத் தெரியும், இந்த மாதிரி தான் ஏதாவது நடக்குமென்று. அதுவும், டில்லிக்குப் புறப்படுகிற போது அவருக்கும் ராஜாஜிக்கு மிடையில் கோயம்புத்தூர் விமான நிலையத்தில் நடந்த சம்வாதம் இருக்கிறதே, அது இந்த சந்தேகத்தை இன்னும் உறுதிப்படுத்தி விட்டது. 'அடுத்தபடி என்ன?' என்று நேருஜி கேட்கவும் 'என் கடமையைச் செய்கிறேன்' என்று பதிலளித்தாராம் ராஜாஜி!

இதற்குஎன்னஅர்த்தம்?...எவ்வளவோ சொல்லலாம். பின்னால் நடந்திருப்பதைப் பொருத்திப் பார்த்தால் விதவிதமாக வியாக்யானம் கொடுக்கலாம். மாதிரிக்கு இரண்டொன்று சொல்கிறேன்; உங்களுக்கேதெரிந்துவிடும்.இந்த மூன்றே வார்த்தைகளில் எத்தனை டன் பொடி வைத்திருக்கிறார் ராஜாஜி என்று. "நான் என்ன சொன்னாலும் செய்தாலும் விபரீத அர்த்தங்கள் கற்பிக்கிறார்களே! ஒருபாவமும் அறியாதவனுச்சே நான்" என்று ஆதங்கப்படுகிறாரே, அதற்கு லவலேசமாவது ஆதாரமுண்டா என்பது பத்தாயிரம் பேர் நடுவே ஒற்றைக் கருப்புக் கொடி போல தானகவே துல்யமாகப் புலப்பட்டுவிடும் உங்களுக்கு.

முதலாவதாக, மந்திரிகளைப் போடுவதும் எடுப்பதும் சட்ட சபைக் கட்சித் தலைவராகிய தம்முடைய கடமையே, அது விஷயத்தில் பிரதேச காங்கிரஸ் தலைவரைக் கலக்கத் தேவையில்லை என்று சொன்னதாகக் கொள்ளலாம். அது மாத்திரமில்லை, 'ஒட்டைக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்பதைப் போல இதர மந்திரிகளுடனும் கூடிப் பேசித் தீர்மானிக்க வேண்டியதில்லை என்று சொன்னதாகவும் வைத்துக்கொள்ளலாம். மந்திரி சபையில் காங்கிரஸ்காரரைத்தான் போட வேண்டுமென்று கட்டாயமில்லை. சர்க்காரை நடத்துவது என் வேலை. வேண்டியதைச் செய்கிறேன். கவலை வேண்டாம், என்றுறென்றும் அர்த்தம் கொடுக்கலாம்.இல்லையோ, 'எல்லாரும் ஒத்துவந்தால் சரி, வராவிட்டால் திருவாங்கூர்–கொச்சியில் போல சட்டசபையைக் கலைக்கும் கடமையைச் செய்து விடுகிறேன் என்று தீர்க்குக் கட்டினர் என்றுகூடமையர்த்தம் செய்யலாம்.

எப்படியோ,விவகாரம் ஒருவழியாக–தற்போதைக்காகிலும்– தீர்ந்து விட்டது. ஆகவே எதை மனதில் வைத்துக்கொண்டு சொன்னார் என்று நாம் இப்போது மண்டையை உடைத்துக் கொள்ளத் தேவையில்லை. என்னவாக வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும் என்று விட்டு விடுவது தான் சரி.. ஆனால்அதற்காக புது மந்திரிகளை அவர் பொறுக்கியெடுத்திருக்கிற முறை பற்றி ஒன்றுமேசொல்லக்கூடாது, சொல்ல முடியாது என்று அர்த்தமில்லை. தாராளமாகச் சொல்லலாம், சொல்லவும் நிறைய இருக்கிறது.

உதாரணமாக ஒன்றேயொன்று: ஸ்ரீமதி ஜோதி வெங்கடாசலத்தைத் தேர்ந்தெடுத்ததைத் தான் சொல்கிறேன். வெறும் பெண்மணியல்ல அவர்,ஹரிஜனப் பெண்மணி. தாழ்த்தப்பட்டவர்களுக்கோ மாதருக்கோ பிரதிநிதித்வமில்லையென்று புகார் செய்தவர்களுக்கு இந்த மாதிரி ஒரே கல்லால் இரண்டு மாங்காய் அடித்து வாய்க்கரிசி போட்டது மட்டும் இதில் விசேஷமில்லை. இன்னொன்றும் இருக்கிறது–சில நாட்களாக ராஜாஜியின் பிரசங்கங்களைக் கேட்டோ, படித்தோ வந்தவர்களுக்குஇது சுலபமாகப் புரிந்து விடும். ஒவ்வொன்றிலும் திராவிட இயக்கங்களுக்கு எதிராக தாய்மாரை உசுப்பிவிட்டு வந்திருக்கிறார் அவர். அதற்கு இன்னும் உறம் கொடுக்கக்கூடுமல்லவா இந்த நியமனம்; ஒரு பெண்மணியை விட்டு இதர மாதுசிரோமணிகளைத் தூண்டுவதுதானே அதிக பலன் தரும்?

இன்னொரு சந்தேகம் கூட எனக்கு–திராவிடர்களும் வெளியிடங்களிலிருந்து குடியேறினவர்களே. ஆதிதிராவிடர்கள் தான், அதாவது ஹரிஜனங்களே தமிழ்நாட்டின் பூர்வீகக் குடிகள் என்பதை இந்த நியமனத்தின் மூலம் சொல்லாமல் சொல்கிறாரோ ராஜாஜி?

—சிரேயஸ்

158876



# குதர்க்கம்

'உலகமே ஒரு எறும்புப் புற்று. திராவிடக் கழகங்கள் எறும்புக்குச் சமானம். அவைகளை ஒழித்துக் கட்டியே தீர வேண்டும்'

—ராஜாஜி மணிவாசகங்கள்

'ஆமாமாம்! தன் வழியே போக வேண்டிய எறும்புகள் இந்த ஆசாமி நடுவில் இருக்கிறானே இவனைக் கடித்துத்தான் பார்ப்போம்' என்று 'கொடுக்கை காட்டி'னால் ஒழித்துத்தானே தீர்க்க வேண்டும்' என்று இந்த யோசனையைப் பலமாக வரவேற்கிறார் ஸ்ரீமான். பொது ஜனம்!

* * *

மீன்களைத் தூண்டிலில் சிக்க வைப்பதற்காக, மீன்கள் கேட்டு மயங்கி தானகவே வந்து தூண்டிலில் அகப்பட்டுக்கொள்ளும்படி ஒருவகை சங்கீதத்தை ஜப்பானியர் இசைக்கின்றனர்!

—டோக்கியோ செய்தி.

பலே! இவர்கள் 'மீன் பிடிப்பவர்களாக மட்டு மல்லாமல், 'காக்காய் பிடிப்பவர்'களாகவும் இருக்கிறார்கள் போலிருக்கிறதே!

* * *

காரைத் தீவு கிராமத்தில் இரு பள்ளிக்கூட ஆசிரியர்கள் கைகலப்பில் ஈடுபட்டிருந்ததைக் கண்ட போலீசார் அவர்களைக் கைது செய்து, வழக்கு பதிவு செய்துள்ளனர்.

—கல்முனை செய்தி.

'விசாரணை முடிந்தபின், இவர்களுக்கு என்ன தண்டனை விதிப்பது என்று நீதிபதி யோசித்துக்கொண்டிராமல், கோர்ட் கலையும்வரை ஏதாவது ஒரு 'பெஞ்சியின்மீது' 'ஏற்றி இறக்கி' விட்டால் அதுவே போதும்!' என்று அருமையான யோசனை கூறுகிறான் இங்கொரு மாணவ சிகாமணி.

* * *

யாத்திரீகர் ஒருவரிடமிருந்து 2000 ரூபாய் கரன்ஸி நோட்டுள்ள மணிபர்ஸை ஜேப்படி செய்த ஒரு குரங்கு ஒரு மரத்தின் மேலேறி அத்தனை நோட்டுகளையும் அதற்குரியவர் எடுத்துக் கொள்ளும் வகையில் ஒவ்வொன்றாகப் போட்டு விட்டுச் சென்றது!

—காசி செய்தி

கடன் வாங்கியதைக் கூடத் திருப்பிக் கொடுத்தறியாத தற்கால பகுத்தறிவு மனிதரைக் காட்டிலும் மனித வர்க்கத்தின் மூதாதையான குரங்கு எவ்வளவோ கருணையுள்ளது என்று நிரூபித்துக் காட்டிவிட்டது என்று அகமகிழ்கிறார் இங்கொரு சரித்திர ஆசிரியர்!

# ரயில் நேரங்கள்

## சென்ட்ரல் ஸ்டேஷன்

### புறப்படும் நேரம்

| | |
|---|---|
| கல்கத்தா மெயில் | இரவு 8—5 |
| கிராண்டிரங் எக்ஸ்பிரஸ் | காலை 8-45 |
| பூரி பாஸஞ்சர் | இரவு 7-10 |
| பெஜவாடா பாஸஞ்சர் | காலை 6-35 |
| பம்பாய் மெயில் | இரவு 9—0 |
| பம்பாய் எக்ஸ்பிரஸ் | காலை 7-35 |
| ரெய்ச்சூர் பாஸஞ்சர் | காலை 9-10 |
| ரேணிகுண்டா பாஸஞ். | மாலை 5-30 |
| ,, ,, | —— |
| பெங்களூர் மெயில் | இரவு 8-45 |
| பெங்களூர் எக்ஸ்பிரஸ் | பகல் 12-15 |
| பெங்களூர் பாஸஞ்சர் | காலை 6-10 |
| பெங்களூர் பாஸஞ்சர் | இரவு 9—5 |
| அரக்கோணம் பாஸஞ்சர் | காலை 7-55 |
| ,, ,, | மாலை 2—5 |
| ,, ,, | மாலை 6-47 |
| ,, ,, | இரவு 9-35 |
| மங்களூர் எக்ஸ்பிரஸ் | இரவு 7-30 |
| கொச்சின் எக்ஸ்பிரஸ் | மாலை 6-10 |
| நீலகிரி எக்ஸ்பிரஸ் | இரவு 8-10 |
| ஜோலார்பேட்டை பாஸஞ். | காலை 11-25 |
| விசாகை பாஸஞ்சர் | இரவு 10-45 |
| ஜனதா எக்ஸ்பிரஸ் 3-வது வகுப்பு-மட்டும் சென்னை-பம்பாய் (பிரதி வியாழன் மட்டும்) | பகல் 2—0 |
| டெல்லி-சென்னை ஜனதா எக்ஸ்பிரஸ் (3-வது வகுப்பு மட்டும்) பிரதி வியாழன் | மாலை 12-30 |

### வரும் நேரம்

| | |
|---|---|
| கல்கத்தா மெயில் | காலை 7-20 |
| கிராண்டிரங் எக்ஸ்பிரஸ் | மாலை 5-50 |
| பூரி பாஸஞ்சர் | காலை 9—0 |
| பெஜவாடா பாஸஞ்சர் | இரவு 8-30 |
| பம்பாய் மெயில் | காலை 5-50 |
| பம்பாய் எக்ஸ்பிரஸ் | இரவு 7-20 |
| ரெய்ச்சூர் பாஸஞ்சர் | மாலை 3-25 |
| ரேணிகுண்டா பாஸஞ்சர் | காலை 9-48 |
| ,, ,, | இரவு 9—0 |
| அரக்கோணம் பாஸஞ்சர் | காலை 8-50 |
| ,, ,, | மாலை 4-25 |
| ,, ,, | —— |
| ,, ,, | மாலை 7-50 |
| பெங்களூர் மெயில் | காலை 6-25 |
| பெங்களூர் எக்ஸ்பிரஸ் | பகல் 2-55 |
| பெங்களூர் பாஸஞ்சர் | இரவு 8-10 |
| பெங்களூர் பாஸஞ்சர் | காலை 6-50 |
| மங்களூர் எக்ஸ்பிரஸ் | காலை 7-30 |
| கொச்சின் எக்ஸ்பிரஸ் | காலை 8-25 |
| நீலகிரி எக்ஸ்பிரஸ் | காலை 7-10 |
| ஜோலார்பேட்டை பாஸஞ். | பகல் 1-20 |
| விசாகை பாஸஞ்சர் | காலை 5—0 |
| ஜனதா எக்ஸ்பிரஸ் (3-வது வகுப்பு-மட்டும்) சென்னை-பம்பாய் (பிரதி திங்கள் மட்டும்) | பகல் 3-20 |
| டெல்லி-சென்னை ஜனதா எக்ஸ்பிரஸ் (3-வது வகுப்பு மட்டும்) பிரதி செவ்வாய் | மாலை 5-20 |

## எழும்பூர்

### புறப்படும் நேரம்

| | |
|---|---|
| மெயின் லைன் | |
| செங்கோட்டை பாஸஞ்சர் | காலை 7-40 |
| இந்தோ-சிலோன் எக்ஸ். | இரவு 8—0 |
| திருவனந்தபுரம் பாஸஞ்சர் | இரவு 9-40 |
| விருதுநகர் பாஸஞ்சர் | இரவு 10-15 |
| விழுப்புரம் பாஸஞ்சர் | மாலை 3-50 |
| கார்டு லைன் | |
| திருவனந்தபுரம் எக்ஸ். | இரவு 8-20 |
| தனுஷ்கோடி பாஸஞ்சர் | காலை 11-20 |
| திருநெல்வேலி எக்ஸ்பிரஸ் | இரவு 7-15 |
| தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் | இரவு 9-55 |
| பீச் | |
| காஞ்சிபுரம் பாஸஞ்சர் | மாலை 5-32 |
| ,, ,, | மாலை 6—1 |

### வரும் நேரம்

| | |
|---|---|
| மெயின் லைன் | |
| செங்கோட்டை பாஸஞ்சர் | இரவு 7—5 |
| இந்தோ-சிலோன் எக்ஸ். | காலை 7-25 |
| திருவனந்தபுரம் பாஸஞ்சர் | காலை 5-20 |
| விருதுநகர் பாஸஞ்சர் | காலை 5—0 |
| விழுப்புரம் பாஸஞ்சர் | காலை 11-15 |
| கார்டு லைன் | |
| தனுஷ்கோடி பாஸஞ்சர் | மாலை 3—5 |
| திருவனந்தபுரம் எக்ஸ். | காலை 6—0 |
| திருநெல்வேலி எக்ஸ்பிரஸ் | காலை 7—0 |
| தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் | காலை 5-40 |
| பீச் | |
| காஞ்சிபுரம் பாஸஞ்சர் | காலை 9-26 |
| ,, ,, | காலை 9-52 |

பாகிஸ்தான் பஞ்சாபிலுள்ள ஜில்லா கோர்ட் ஒன்றில் எலிகளின் தொல்லை பொறுக்க முடியாமலிருப்பதால் அங்கே ஒரு பூனையை அமர்த்தி, அதற்குமாதம் நான்கு ரூபாய் பராமரிப்புச் செலவும் அளிக்கவேண்டும் என்று 'பூனை உத்தியோக'த்திற்கு சிபாரிசு செய்துள்ளார் ஒரு அதிகாரி!

—லாகூர் செய்தி.

இருந்தாலும், இந்த ஜம்பமெல்லாம் அங்கேயிருக்கும் 'பழைய பெருச்சாளி'களைப் பாதிக்கவே முடியாது என்பது மாத்திரம் நிச்சயம்!

* * *

'பெண்கள் அழகிகளாக விளங்க வேண்டுமானால் பணத்தைக் கரியாக்கி வேஷம் போட்டுக்கொள்ள வேண்டும் என்பதில்லை. ஒவ்வொருவரும் தான் தான் உலகத்திலேயே மிகவும் அழகு என்று நினைத்துக் கொண்டால் அதுவே அவர்களை அழகாக்கி விடும்' என்று ஒரு பிரபல மேக்-அப் நிபுணர் கூறினார்

—லண்டன் செய்தி

அழகுதான்! அப்படியே அவர்கள் நினைத்துக் கொள்வதானால் இந்த ஆணங்குகளை நம்பிப் பௌடர், ஸ்னோ வகையறாக்களை ஏகத்தாறாக ஸ்டாக் செய்திருக்கும் வியாபாரிகளின் நிலைமைதான் என்னவது என்று நமக்குப் பெருங் கவலையாகவே இருக்கிறது!

—தரளம்

# போலி வைத்தியன் :: (ஒரு சிறு நாடகம்)

★

தே. வீரராகவன்

### நாடக உறுப்பினர்கள்

✯

| | | |
|---|---|---|
| ஜமீன்தார் | பெயர் | ஆசை |
| ஜமீன்தார் மகள் | ,, | ப்ரேமை |
| ப்ரேமையின் காதலன் | ,, | அறிவு |
| போலி வைத்தியன் | ,, | போதை |
| வைத்தியன் மனைவி | ,, | சண்டி |
| ப்ரேமையின் தோழி | ,, | ஜீவன் |
| போதையின் அண்டைவீட்டான் | ,, | குறுக்கீடு |
| ஜீவனின் கணவன் | ,, | சந்தேகம் |
| பேராசையின் வேலைக்காரன் | ,, | சோம்பல் |
| ஒரு குடியானவன் | ,, | அப்பாவி |
| குடியானவன் மகன் | ,, | அமிஞ்சி |

## காட்சி 1.

இடம்:—போதை வீடு

நாடக உறுப்பினர்.(1. போதை 2. சண்டி. 3. குறுக்கீடு.)

(போதையும் சண்டியும் சண்டை போட்டுக்கொண்டே மேடைமீது தோன்றுதல்.)

போதை:—(கையில் தடியுடன்) முடியாதுன்னா முடியாதுதான். நான் சொல்றபடிதான் நீ கேட்டாகணும். நான் உன் புருஷன்.

சண்டி:—நான் உன் பொண்டாட்டி, தெரிஞ்சுக்கோ.

போதை:—நான் இந்த வீட்டுக்கு ராஜா.

சண்டி:நான் இந்த வீட்டுக்கு ராணி.

போதை:—அப்படியானா ஆம்பளை பெரியவனா? பொம்பளை பெரியவளா?

சண்டி:—ஏன் அதிலென்ன உனக்குச் சந்தேகம்? பொம்பளை தான் பெரியவள்னு நம்ம நாட்டு ஜனத்தொகையே சொல்லுமே. தெரியுதா....இந்த ஆம்பிளைங்க துள்ளலுக்குப் புள்ளி வைச்சாச்சு இனிமே வாலாட்டப் போறே.

போதை:—ஏண்டி? அவ்வுளவுக்கு ஆயிடுத்தா?

சண்டி:—ஏண்டியாவது தோண்டியாவது. சும்மா நிறுத்து; ஓடாதே.

போதை:—அட கடவுளே! கடவுளே அந்தப் புலவன் தெரியாமலா சொன்னான்?

சண்டி:—என்ன சொன்னான்?

போதை;—என்ன சொன்னானா? "நோய் கொண்டாலும் கொள்ளலாம். நூறு வயசாகும் மட்டும் பேய் கொண்டாலும் கொள்ளலாம். பெண் கொள்ளலாகாது" ன்னு சொன்னான்.

சண்டி:—எந்த மடையன் அப்படிச் சொன்னவன்?

போதை:—உன்னை ஒரு பொம்பளையா பெத்தானே ஒரு ஆம்பிளை.....

சண்டி:—(குறுக்கிட்டு) இல்லை யில்லை..உன்னை ஒரு ஆம்பிளையா பெத்தானே அந்த ஆம்பிளை மடையன் மாதிரின்னு சொல்லு..

போதை:—ஏண்டி! உன்னை நான் கல்யாணமாடி செய்துகிட்டேன். கழுத்துக்கு கயிறு அல்லவோ தேடிக்கிட்டேன்.

சண்டி:—நான் உனக்குச் சொல்லவேண்டியதை நீ எனக்குச் சொல்லிக் காட்டறே...உம்.. உனக்கும் எனக்கும் கல்யாணப் பொருத்தம் பார்த்துச் சொன்னானே, உன்னைப்போல ஒரு பொய்ச் சோதிடன், அவன் இப்போ, என் கண்ணிலே பட்டால் என்ன செய்வேன் தெரியுமா...எங்க அப்பன் உன்னை நம்பி எனக்குப் போட்டனுப்பிய காப்பு, தோடு எல்லாத்தையும் வித்துக் குடிச்சுப் போட்டே...

போதை:—ஏய்! என்ன எப்போ பார்த்தாலும் குடிகாரன், குடிகாரன்னு கூவிகிட்டிருக்கே. நம்ம தேசத்திலே குடி ஒழிஞ்சு எத்தனை காலம் ஆச்சு தெரியுமா உனக்கு?

சண்டி:—சட்டத்திலே குடி ஒழிஞ்சாலும் உன் திருட்டுக்குடி எங்கே ஒழிஞ்சுது குடியை ஒழிச்ச அந்த மவராஜாங்க உன்னையும் கொட்டடிக்குக் கொண்டு போயிருந்தா எவ்வளவு நல்லாயிருக்கும் தெரியுமா? வீட்டிலிருந்த அண்டா, குண்டான் எல்லாத்தையும் வித்துக் குடிச்சுப் போட்டையே...பாவி..

போதை:—பின்னே என்ன செய்யறதாம். மகராஜி...இந்த வீட்டிலே நீ காலை வைச்ச முகூர்த்தம் அவ்வளவு நல்ல முகூர்த்தம்னு தெரிஞ்சுக்கோ... கடன் வாங்காமே பொழச்சிகிட்டு வரோமே...அதைப் பார்க்கல்லே.

சண்டி:—என் படுக்கையை வேறே திருடிகிட்டுப் போய் வித்தாட்டே...

போதை:—படுக்கையிருந்தா ரொம்ப நேரம் தூங்கச் சொல்லும்...இப்போ சீக்கிரமாய் எழுந்து கொள்ளலாம் பாரு.

சண்டி:—வீட்டிலே இருந்த கட்டிலை வேறே வித்தாட்டே.

போதை:—கட்டில் எவ்வளவு எடத்தை அடைச்சுக் கிட்டிருந்தது. இப்போ வீட்லே எவ்வளவு இடம் இருக்கு பாரு.

சண்டி:—நீயும் ஒண்ணும் சம்பாதிக்காமே சம்பாதிக்கிறதையும் வூட்டுக்குத் தராமே, இப்படியே போயிகிட்டிருந்தா, குடும்பம் எப்படி நடக்கும்னு கேட்கறேன்.

போதை:—மத்தவங்க குடும்பம் நடக்கற மாதிரிதான் நம்ப குடும்பமும் நடக்கும்.

சண்டி:—நீயும் நானும் மட்டுமிருந்தா பரவாயில்லை. கையிலே ரெண்டு குழந்தை வேறே இருக்குதே.

போதை:—குழந்தைகளை கையிலேயே வைச்சிக்கிட்டிருப்பானே...கீழேவுட்டேன், இடமா இல்லை.

சண்டி:—கீழே வுட்டாலும் சும்மாவா இருக்குது? இத்தை கொடு அத்தை கொடுன்னு நச்சரிக்குதுங்களே.

போதை:—நச்சரிச்சா சவக்கால நாலு கொடுக்கறது.

சண்டி:இப்படியே ஏட்டிக்குப் போட்டி பேசி காலத்தை ஓட்டிடலாம்னு நினைச்சுக்கிட்டிருக்கே....அதானே உன் நினைப்பு....

போதை:ரொம்ப கோவிச்சுக்கிறயேடி கண்ணு (கிட்டே செல்லுகிறான்).

சண்டி:—கண்ணுமாச்சு, மண்ணுமாச்சு...தொடாதே..எட்டி நில்லு...உனக்கு எப்போதான் நல்லபுத்தி வருமோ.

போதை.—எனக்கா எப்போ புத்தி வரும்னு கேட்கறே....என் கை உன் முதுகுமேலே கொஞ்சம் வெளையாடினா, அப்போதான் உனக்குப் புத்தி வரும்.

சண்டி:—அந்தப் பூச்சாண்டிக்கெல்லாம் பயந்தவள் நானில்லை... நிறுத்து உன் கை வரிசையை... (ஒரு புறமாய்) குடிகாரப் பயலுகளைக் கட்டிக்கிட்டா இப்படித் தான் குடும்பம் நடுத்தெருவிலே நிற்கும்...

போதை:—அடி நாயே...நானும் அப்போ பிடிச்சுகிட்டுப் பொறுத்துக்கிட்டு வரேன்...குடிகாரன், குடிகாரன்னு என்னைச் சொல்லிகிட்டே வரயே...நான் டீ குடிக்கிற குடிகாரன் தான். இதோபார். (என்று கத்திக்கொண்டே சண்டியைத்தன் கழியால் அடிக்கிறான்)

சண்டி:—ஐயோ! ஐயோ! கொல்றானே...பாவி கொல்றானே...யாரும் இல்லையா உதவிக்கு...

(அண்டை வீட்டுக்காரனான குறுக்கீடு ஒரு தடியுடன் ஓடி வருகிறான்).

குறுக்கீடு:—ஏய்! ஏய்! போதை! இது என்ன?...

போதை:—இதுவா...இது.. ஊடல்....

குறுக்கீடு:—இதுக்குப் பேர் ஊடலா?

போதை:—ஆமாம், புருஷன் பெண்சாதி விளையாட்டுக்குப் பேரு என்னவாம்.

குறுக்:—உன் பெண்டாட்டியைத் தடியாலே அடிக்கிறே... கேட்டா...ஊடல்னு சொல்றே.. ஊடலுக்கு எனக்கு அர்த்தம் தெரியாதுன்னு நினைச்சுக்கிட்டியா?

சண்டி:—(குறுக்கீட்டை அப்பால் பிடித்துத்தள்ளி) என் புருஷன் என்னை அடிக்கிறதிலே எனக்குப் பிரியம்.

குறுக்கீடு:—அடி பாவி! இப்போ உதவி உதவின்னு கத்தினியே...அப்படியானா..ஏ போதை உன் பெண்டாட்டிக்கு எனக்கும் சேர்த்துக்கொடு.

சண்டி:—ஏனய்யா குறுக்கீடு. எங்க குடும்பச் சண்டையிலே நீ ஏன் குறுக்கிடறே.

குறுக்:—தப்புதான்.

போதை:—டேய்! இதுதான் உனக்குத் தொழிலா?

குறுக்:—சரியான கேள்வி.

சண்டி:—என் புருஷன் என்னை அடிக்கச்சே எனக்குப் பூசை செய்யற மாதிரி இருக்கு.

குறுக்:—ஒத்துக்கிட்டேன்.

சண்டி:—என் புருஷன் என்னை அடிக்கிறதிலே உனக்கென்னய்யா நஷ்டம்?

குறுக்:—கொஞ்சம்கூடக் கிடையாது.' ஏ! போதை, இன்னும் பத்து கொடு அவளுக்கு...நானும் வேணும்னா உதவிக்கு வரேன். உன் தடி போதல்லேன்னா இந்தா இந்தத் தடி.

(தன் தடியை போதையிடம் தருகிறான்.)



போதை:—எனக்கு இஷ்டமிருந்தால் அவளை அடிப்பேன். இல்லாட்டா அடிக்கமாட்டேன். நீயென்ன எனக்கு யோசனை சொல்றது.

குறுக்:—அப்படியானு ரொம்ப சரி.

போதை:—என் ன ட ா, என்னமோ பெரிய நியாயவாதி மாதிரி ரொம்ப ச ரி ன் னு சொல்றே... சண்டி... என் பெண்டாட்டி...உன் பெண்டாட்டியா?

குறுக்:—இ ல் லே ன் னு யார் சொன்னு?

போதை:—இல்லேன்னு யார் சொன்னுவா? அப்படீன்னு அவள் உன் பெண்டாட்டியா? சண்டி! இந்தத் தடியை எடுத்துக்கோ இவனை இங்கேயே தொலேச்சுடறேன்...பார்.

(குறுக்கீட்டை இ ரு வ ரு ம் அடிக்க, அவன் ஓடி விடுகிறுன்).

(குறுக்கீடு போன பிறகு)

போதை:—கண்ணு! ச ண் டி இ னி மே ந ா ம் ச ண் டை போடக்கூடாது ... சமாதானமா வாழணும். எங்கே உன் கையைக் காட்டு...

சண்டி:—(பிணங்கி) ஊம்ம்... இவ்வளவு திட்டி அடிச்ச அப்புறமா?

போதை:—கோவிச்சுக்கா த டி என் கொய்யாக்கனியே.

சண்டி:—ஊம்ம்..நான் மாட்டேன்.

போதை:—வ ா ழை ம டி என் வாழைக்காயே...என்னை மன்னிச்சுக்கிட்டு உன் கையைக்கொடு. (சண்டி ஒருபுறமாய்த் திரும்பிச் சிரித்துக்கொண்டே தன் கையை நீட்டுகிறுள். சமாதானக் குறியாக போதை அதற்கு முத்தம் தருகிறுன்).

போதை:—சண்டி! இந்த அடியெல்லாம் உனக்கு கூழுக்குப் பச்சமிளகாய் க டி ச் சு க் கி ற மாதிரி தானே. என்ன இருந்தாலும் நீ பெரிய ரோசக்காரி..இல்லேயா..உம்..சரி.உள்ளே ே ப ா ய் அந்த சோசிய புஸ்தக கட்டையும் பொட்டியையும் எடுத்துவா. எங்கேயாவது வெளியிலேபோய், ஏதாவது பு ளு கி னு த ா னே ஒண்ணு ரெண்டு கிடைக்கும்...

இன்னிக்கிப் பொழைப்பும் நடக்கும்.

சண்டி:—ஏன் மச்சான்...அப்படீன்னு நீ சொல்ற சோசியமெல்லாம் பொய்ன்னு நீயே ஒத்துக்கிறயே...

போதை:நான் சொல்ற சோசியம் நிசமாயிருந்தா...இத்தனை நாளுக்குள்ளே என்கிட்ட சோசியம் கேட்ட அத்தனை பேரும் பெரிய பெரிய ஜமீன்தாராகவும், பெரிய பெரிய உத்தியோகஸ்தராகவுமில்லே இருக்கணும்.

சண்டி:-அப்போ! உன் புளுகை ஒருதரம் தெரிஞ்சுக்கிட்டவன் மறுபடியும் உன்கிட்ட வரமாட்டான்னு சொல்லு.

போதை:— பைத்தியம்...உலகத்திலே தானு சிந்திக்கிற சக்தியில்லாத முட்டாள் பசங்க இருக்கிறவரையில் என் பிழைப்புக்குப் பஞ்சமேயில்லே... "உனக்கு இது வரப்போகுது... அது வரப் போகுது... நீ இன்னும் ரெண்டு மாசத்திலே பெரிய பதவிக்குப் போவே... உனக்குப் புதையல் கிடைக்கப்போவுது" இப்படி... அப்படீன்னு சும்மா அடுக்கிண்டே போனு... பெரிய அறிவாளி.



நண்பர்:—"பிரபலஸ்தர்களுக்கு த்தா ஜாஸ்தியா நீங்க வைத்தியம் செ.. தாகச் சொல்கிறீர்களே, அவர் யா. யாருன்னு நான் தெரிஞ்சுக்கலாமோ?"

டாக்டர்:—"சமீபத்திலே காலமான ராவ் பகதூர் குருமூர்த்தி எங்கிட்டே வைத்தியம் பார்த்துண்டவர். சுகாதார மந்திரி எல்லப்பா இறப்பதற்கு முன்னுல் எங்கிட்டேதான் வருவார். அப்புறம் இப்போ படுத்திண்டிருக்காரே கவுன்ஸிலர் கஜபதி, அவருக்கு என் வைத்தியம் தான். போறுமா..., இன்னும் சொல்லட்டுமா?"

ஆராய்ச்சிக்காரன், பகுத்தறிவுத் திராசை எப்பவும் கையிலே ஏந்திக்கிட்டு இருக்கிறதா சொல்லற ஆசாமிகூட நம்மகிட்ட ஏமாந்து போவான்... தனக்கு நல்லது வரப் போவுதுன்னு சொன்னு எந்த மடையன்தான் நம்பமாட்டான்னு சொல்லறே... சரி நீ போய் அந்தப் புத்தகக் கட்டை எடுத்துகிட்டு வா... உன்கிட்டே பேசிக்கிட்டே இருந்தா நாழி ஆகுது. (சண்டி உள்ளே போய் புத்தகக் கட்டை எடுத்து வந்து போதையிடம் கொடுக்கிறுள்.)

போதை:— புத்தகக் கட்டை வாங்கிக்கொண்டு) கண்ணு...நான் வரட்டுமா?

சண்டி:— உம்... போய் வா மச்சான். (போகிறுன்) (போன பிறகு) – – –போ..போ..சமயம் வரட்டும். என்னை எத்தனை தரம் அடிச்சிருக்கே... இதுக்கெல்லாம் பழிவாங்காமல் விடறதில்லே.

## காட்சி 2

உறுப்பினர்கள்: (1. சந்தேகம் 2. சோம்பல் 3. சண்டி)

இடம்: (போதை வீட்டுக்கருகில்.)

சோம்பல்:— டேய்! சந்தேகம், இனிமே என்னுலே ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாது. காலு ஆணி கயிண்டு போச்சுடா.

(கீழே உட்கார்ந்து கொள்கிறுன்.)

சந்தேகம்:— எனக்கும் அதுக்கு மேலேதான் இருக்குது...ஆனு... என்னடா செய்யறது..அந்தப் பாவி எசமான் நமக்கு நல்ல வேலே வைச்சான். அவன் சொன்னமாதிரி இனிமே கொசவன் சூளேயிலே இருந்துதான் ஒரு வயித்தியனைத் தேடிப் பிடிக்கணும்.

சோம்:— கொசவன் சூளேயிலே இருந்தோ, அல்லது பயித்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்தோ ஒரு ஆளே இவன்தான் வயித்தியன்னு பிடிச்சுக்கிட்டுப் போய் விடல்லேன்னு, அப்புறம் அந்த சுடுமூஞ்சிப் பயல் எஜமான்,நம்ம சீட்டைக் கிழிச்சுப் போடுவான்...நல்ல வைத்தியனு ஒருவனைக் கொண்டுபோய் விட்டு



அந்த அம்மா ப்ரேமைக்கும் வியாதி குணமாகி, கல்யாணமும் ஆனு நமக்கு நல்ல வெகுமதி கிடைக்குமல்லவா?

(சண்டி இவர்கள் பேசுவதை ஓரமாய் நின்று கவனிக்கிறுள்.)

சந்தே:— ஏண்டா... பெரிய பெரிய வைத்தியரெல்லாம் வந்து பார்த்துட்டுப் போயிட்டாங்க அந்த ப்ரேமையை... அந்தப் பொண்ணுக்கு என்ன வியாதீன்னு கண்டுபிடிக்க முடியல்லே. இனிமே எந்த வைத்தியன் வந்தப்பா அந்தப் பெண்ணைக் குணப்படுத்தப் போறுன்.

சோம்:— டேய் சந்தேகம்...உன் பேருக்குத் தகுந்தமாதிரி தொட்டதெல்லாம் உனக்குச் சந்தேகம்தான். எதிர்பாராத இடத்திலிருந்து எவனுவது ஒருத்தன் எதிர்பாராத விதமா கிடைப்பான்...உம்..வா.. நம்பிக்கையை விடக்கூடாதடா... ந ம் பி க் கி யில்லேதானப்பா உலகமே ஓடிக்கிட்டிருக்கு....

சந்தே:—உம்... உலகம் ஓடிக்கிட்டிருக்கோ... நின்னுக்கிட்டிருக்கோ...நாம் இப்போ ஓடிக்கிட்டிருக்கோம்...அதுதான் நிச்சயம். உம்..போகலாம் வா..

(இவர்கள் பேச்சு முடிவில் சாணிக் கூடையுடன் எதிரே வரும் சண்டி, சந்தேகத்தின்மீது மோத)...ஏம்மா! நீ ஒரு பொம்பளேயா?

சண்டி:— (கோபமாய்) ஏன்? பார்த்தா எப்படித் தெரியுது?

சந்தே:— ஒரு ஆம்பிளே மேலே இப்படியா கண்ணு மண்ணு தெரியாமே விழறது.

சண்டி:— அதுக்குச் சொல்லறீங்களா? மனக்கவலேயிலே எதையோ நினேச்சுக்கிட்டு எங்கேயோ பார்த்துகிட்டு வந்தேன். சாணிக்கூடை மேலே பட்டுடுத்து...மன்னிச்சுக்குங்கோ...

சோம்:— உம்..இருக்கும்..இருக்கும்..உலகத்திலே, ஆண்டவன் ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு கவலேயை வச்சிருக்கான். நாங்களும் ஒரு கவலேயினுலேதான் ஊர் ஊராய் சுத்திக்கிட்டிருக்கோம்...

சண்டி:— ஐயோ!பாவம்!என்ன கவலேயோ? ஏதாவது, பெண்ணுக்கு, மாப்பிளே தேடற கவலேயாயிருக்குமோ?...ஏன்னு... உலகத்திலே பொண்ணைப் பெத்தவங்களுக்கு அதானே பெரிய கவலே...

சந்தே:— ஊம்ம்... அதெல்லாமில்லே... நாங்க ஒரு கெட்டிக்கார வைத்தியனைத் தேடிக்கிட்டு வரோம். எங்க எசமானுக்கு அழகான ஒரு பொண் இருக்கு. திடீரென்னு அதன் நாக்கு உள்ளே இழுத்துக்கிட்டு பேச முடியாமே தவிக்குது. எவ்வளவோ பெரிய பெரிய வைத்தியரெல்லாம் வந்து பார்த்து, முடியல்லேன்னு கையை விரிச்சுட்டுப் போயிட்டாங்க... எங்க எசமானே பெரிய கோவக்காரன். எவனையாவது ஒரு ஆளேப் பிடிச்சு இவன்தான் வைத்தியன்னு அவனுக்கு முன்னுலே கொண்டு நிறுத்தல்லேன்னு...எங்களே வேலேயிலே யிருந்து தள்ளிப்போடுவான்...இதுதான் சமாசாரம்... ஏம்மா, உனக்குத் தெரிந்த வைத்தியன் எங்காவதிருந்தா சொல்லம்மா.

ச ண் டி:— (யோசிப்பவள் போல பாவனை செய்து)

ஊம்...வைத்தியனு(...யாரு இருக்கா?




(சற்று நேரம் கழித்து) ஆ... எனக்குத் தெரிந்த ஒரு ஆசாமி இருக்கான்... இப்போதான் ஞாபகத்துக்கு வந்தது... எந்தத் தீராத வியாதியாயிருந்தாலும், அவன் கை வச்சானானா போதும்... அவன்.

சோம்:— அவன் எங்கே இருக்கான் சொல்லம்மா... சீக்காமா சொல்லம்மா...

சண்டி:— அடா! இத்தினி நாள் அவசரப்படாமே திரிஞ்சிக்கிட்டிருந்தாயே...

இப்போ ஒரே அவசரப்படறயே.

சந்தே:— அம்மா, உனக்கு ஒரு கும்பிடு போடறேன்... அவன் எங்கே இருக்கான் சொல்லு.

சண்டி:— நேரா கிழக்கே போய் வடக்கே திரும்பினா ஒரு பெரிய ஆலமரம் இருக்கு. அந்த ஆலமரத்தின் கீழே ஒரு பிள்ளையார் கோவிலிலே இவன் உட்கார்ந்துகிட்டு சோசியம் சொல்லிகிட்டிருப்பான். தலையிலே முண்டாசு இருக்கும். நீலச் சட்டை போட்டுக்கிட்டிருப்பான். பக்கத்திலே ஒரு சின்ன பெட்டி வைச்சிக்கிட்டிருப்பான்... அதுலேதான் அவன் மருந்தெல்லாம் இருக்கு... எதிரே ஒரு புத்தகக் கட்டு வைச்சிருப்பான்...இதுதான் அடையாளம்..

சந்தே:— என்னம்மா...பெரிய வைத்தியன்னு சொல்றே.... சோசியம்சொல்லுவான்னு சொல்லறையே...

சண்டி:— சோசியத்துக்கும் வைத்தியத்துக்கும் நெருங்கின உறவு. சோசியம் பார்த்துத்தான் வைத்தியம் குணமாகுமா ஆகாதான்னு தெரிஞ்சுகிட்டு அப்புறம்தான் வைத்தியம் செய்யப் போவான். ஆனால் இப்போவெல்லாம் அவன் வைத்தியம் செய்யப் போறதில்லே... சோசியமேதான் சொல்றான்.

சோம்:—ஏன் அவன் வைத்தியம் செய்யப் போறதில்லே?

சண்டி:—அதுவா.... கொஞ்ச நாளைக்கு முன்னே ஒரு பெரிய ஜமீன்தார் தம் பெண்ணுக்கு ஏதோ வைத்தியம் செய்ய வேணும்னு இவனை அழைச்சிகிட்டுப் போனாராம். இவன் அந்தப் பொண்ணுக்கு இருந்த வியாதியைப் போக்கினானாம். வியாதி குணமானதும் அந்தப் பொண்ணு தன் காதலனைக் கூடிகிட்டு எங்கேயோ ஓடிப்போச்சாம். அந்தப் பொண் ஓடிப்போறத்துக்கு இந்த வைத்தியன்தான் காரணம்னு அந்த ஜமீன்தார் இவனை அடிஅடியென்று அடிச்சி காலை, கையை முறிச்சு அனுப்பி விட்டாராம்.... அதிலேயிருந்து இவன் வெளியூருக்கு வைத்தியம் செய்யப்போறதில்லே. இவன் ஒரு அபூர்வமான ஆசாமி...தான் ஒரு வைத்தியன்னு இப்போ சொல்லிக்கொள்ளறதுமில்லே. காட்டிக் கொள்ளறதுமில்லே. புது ஆசாமிகளைப் பார்த்தால் பைத்தியக்காரன்போல நடிப்பான். நீ ஒரு வைத்தியனான்னு கேட்டால் ஒத்துக்கொள்ளவே மாட்டான்.

சோம்:—ஆமாம்! ஆமாம்! பெரிய பெரிய அறிவாளிங்க படிப்பாளிங்க, பக்தருங்க இவங்கெல்லாம் ஒருவிதப் பைத்தியம்னுதான் நானும் கேள்விப்பட்டிருக்கேன்.

சண்டி:— இவனை நீங்க சும்மா கூப்பிட்டா, வரமாட்டான்

சந்தே:— பின்னே இவனை அழைச்சிகிட்டு போறது எப்படி?

சண்டி:—அதானே சொல்லப் போறேன்... ஆளுக்கொரு கழியை எடுத்துக்கிட்டுப் போய் நல்லா உதைச்சா சரி, அப்புறம் தானா ஒத்துக்கொள்வான்.

சோம்:— சும்மா இருக்கிற ஆளை ஒரு காரணமும் இல்லாமே எப்படியம்மா அடிக்கிறது?

சண்டி:— மயிலு தானா இறகைப் போட்டுப்போனா கழுத்தை மெதிச்சுத்தானே நாம பிடுங்கணும்... அதுபோலத்தான்.

சோம்:— அவன் பேரு என்னம்மா.

சண்டி:— அவன் பேரு... உம்... போதை..

சந்தே:— போதையா? குணத்துக்குத் தகுந்த மாதிரிதான் பேரும் வச்சிருக்காங்க.

சண்டி:— கடைசியா..சொல்றேன்...ஆள் பேச்சை கேட்டு ஏமாந்துடாதீங்க... ஆறு மாசத்துக்கு முன்னே ஒரு பொம்பளை செத்து ஆறு மணிக்கு அப்புறம் இவன் போய் அவளைப் பிழைக்க வைச்சூட்டான். இவன் போய் அந்தக் கிழவி மூக்கிலே ஏதோ ஒரு பச்சிலைச் சாறைப் பிழிஞ்சானும்...செத்தவ தூங்கி எழுந்தவமாதிரி எழுந்தூட்டாளாம்.

சந்தே:—ஆ...அப்படியா? ஒருவேளை அது சஞ்சீவி மருந்தா இருக்குமோ.

சண்டி:— இருக்கும், இருக்கும். ரெண்டு மாசத்துக்கு முன்னே ஒரு குழந்தை மாடி மேலேயிருந்து கீழே விழுந்து, கை, காலு, மண்டை, முதுகு எல்லாம் தூளாய் ஒடிஞ்சு போச்சு. குழந்தையைக் கூடையிலே வச்சுகிட்டு இவன் கிட்ட எடுத்துகிட்டு வந்தாங்க... ஏதோ ஒரு பசையை எடுத்து உடம்பு முழுதும் தடவி ஒரு மணி நேரம் ஊறவைச்சு ஒத்தடம் கொடுத்தான். செத்துப் போறமாதிரி இருந்த குழந்தை சிரிச்சு கிட்டே வீட்டுக்குப் போச்சு.

சோம்பல்:— இவன் கிட்ட தேவாமிர்தம் இருக்குமோ.

சண்டி:— அதிலே சந்தேகமா உங்களுக்கு?

சோம்:— ரொம்ப வந்தனம் உனக்கம்மா. நாங்க வரோம்.

சண்டி:— போய் வாங்க...ஆனா நான் சொன்னதை மட்டும் மறக்காதீங்க.


சந்தே:— எங்க கிட்டே உதைக்குப் பஞ்சமில்லே. வண்டி வண்டியா இருக்கு.

சண்டி:— அளவு மீறி அடிச்சு ஆளைப் பைசல் செய்துடாதீங்க.. பாவம்... வீட்டுலே பொண்டாட்டியும் ரெண்டு குழந்தைகளும் இருக்காங்க... பதமா, மிதமா, பார்த்துக்குங்க.

(இருவரும் போகிறார்கள்.)

(தொடரும்)





## 37

## நெருப்பில் குதித்தார்!

☆

ஒவ்வொரு நிமிஷமும் ஆபத்தை எதிர்பார்த்துக்கொண்டு பதைக்கும் உள்ளத்துடன் காத்திருப்பவனுக்கு, அது வருவதில் ஏற்படும் காலதாமதம் பொறுக்கக் கூடாததாக இருக்கிறது. இப்படி வராமலிருந்து வாட்டி வதைப்பதைவிட, ஒரேயடியாக வந்து தொலைத்து ஆளைத் தீர்த்துக் கட்டிவிட்டாலும் தேவலையே என்று தோன்றுகிறது. அதே மனோநிலையில் தான் இருந்தார் ஸ்ரீ நடேசன்.

கணேசன் ஆபீஸிற்கு வருவதில்லை ஆஸ்பத்திரியில் கிடக்கும் கோபுவைக் கவனிக்கத்தான் அவனுக்கு நேரம் சரியாயிருந்தது. வேலை போனாலும் பரவாயில்லை என்று கருதுபவனை அவரால் என்ன செய்ய முடியும்? ஒருவிதத்தில் அவன் வராமல் இருப்பது நல்லதேயென்று கூடப்பட்டது நடேசனுக்கு. தனக்கும் உடம்பு சரியாக இல்லை என்ற சாக்கை வைத்துக்கொண்டு ஆபீஸைத் தாற்காலிகமாகமூடியேவிட்டார்!

அந்த இடம் அவரது ஆபீஸாக மட்டுமில்லாமல், வாசஸ்தலமாகவும் இருந்தபடியால்தான் சிறிது கஷ்டம். சதாகாலமும் உள்ளே கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருப்பது, ஆறுமுகம் சோறுகொண்டு வரும்போது நாலு வாய் போட்டுக் கொள்வது–என்று காலம் கழித்தார். நம்மால் எதையும் சாதிக்க முடியும் என்ற பழைய சுய நம்பிக்கையும், தைரியமும் அறவே மறைந்துவிட்டன. இந்த மாறுதல்களுக்கெல்லாம் காரணம் அந்த ரகஸ்ய தஸ்தாவேஜுகளின் மறைவுதான் என்று சொல்ல வேண்டியதில்லை.

குற்றம் குற்றம்தான். என்றாலும் அது வெளிப்படுங்காலத்து தமக்கு அதிகக் கெடுதி நேரக் கூடாது என்றுதான் அவர் இத்தனை காலமும் பிரயத்தனம் செய்துவந்தார். அவை ஓரளவு பயன் தரத் தொடங்கியிருந்த சமயத்தில், வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்தது போல், தஸ்தாவேஜுகள் களவு போய்விட்டன! இன்னும் சிறிது காலம் தாழ்த்தி, துரைசாமி–லீலா விவாகம் நிகழ்ந்த பிறகு அது நேர்ந்திருக்கும் பட்சத்தில் நடேசன் அதை இவ்வளவு பொருட்படுத்தியிருக்க மாட்டார். அதற்குள் பாழும் விதி அவசரப்பட்டு விட்டதே!

இதில் சந்துருவே கிருஷ்ணசுவாமிக்கு உடந்தையாக இருந்திருக்கிறான் என்பது அதிசயப்படக்கூடிய விஷயமல்ல. பணத்திற்காக எவ்வித ஈனச் செயலையும் செய்யக்கூடியவன் அவன்.

தானா? அவனைவிடப் பெரிய சுயநலமி, துரோகி என்பதை அவரால் மறுக்க முடியாது. அவ்வளவு நம்பிக்கையுடன் அவரோடு நெருங்கிப் பழகிய அப்பாவித் துரைசாமியை அவ்விதம் மோசடி செய்த தன்மையை என்னவென்று அழைப்பது?

அன்று அவர் சந்துருவைத் தேடிப் பிடித்து அதட்டி மிரட்டியபோது அவன் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டுவிட்டான். தஸ்தாவேஜுகள் கிருஷ்ணசுவாமியின் கைக்குப் போய்ச் சேர்ந்துவிட்ட விஷயம் ஊர்ஜிதமாகியது. இரண்டொரு தடவை அவர் தம் மாடி வராந்தாவுக்கு வந்தபோது எதிர் மாடியில் நின்ற கிருஷ்ணசுவாமி அவரைப் பார்த்துச் செய்த கேலி புன்னகையை நடேசனால் பொறுக்கவே முடியவில்லை. விரோதியின் காலிலேயேபோய் விழுந்து



தன்னை மன்னித்து மானத்தைக் காப்பாற்றும்படி கெஞ்சலாமா என்றுகூட அவர் ஒவ்வொரு சமயம் எண்ணினார். ஆனால் கிருஷ்ணசாமி இதற்கெல்லாம் மசிபவனல்ல. கொண்டதை முடியாது விடமாட்டான் என்று அவரது உள்ளுணர்வு கூறியது. அங்கு போனால் அவருக்குக் கிடைக்கக் கூடியது உதையோ, கல்தாவோ தான். அன்று ராயபுரத்தில் சந்துரு அனுபவித்ததற்கு மேல் அவருக்குப் பிராப்தியாகலாம்.

முதலிலேயே கிருஷ்ணசாமியோடு சமாதானமாகப் போயிருந்தால் புத்திசாலித்தனமாகயிருந்திருக்கும் என்ற ஞானோதயம் இப்போது, வெகு காலந் தாழ்ந்து ஏற்பட்டது நடேசனுக்கு. அந்தச் சமயத்தில் அவர் அவனது சக்தியை அறியவில்லை. தம்மை மிஞ்சிவிட யாரால் முடியும் என்று இறுமாந்திருந்தார். அவனோ, 'வல்லவனுக்கு வல்லவனாகத் தன்னை நிரூபித்துக்கொண்டு விட்டான்.

கடுதாசிகள் என்னவோ அவன் கையில் சேர்ந்து விட்டன. இந்நேரம் மர்மங்கள் அவனுக்கு நன்கு விளங்கியிருக்கக் கூடும். பின் ஏன் அதன் விளைவுகள் இன்னும் அவரைத் தேடி வரவில்லை? கொள்ளிக் கட்டையைக் கையில் எடுத்தவன் நெருப்பு வைக்காமலே போய்விடுவானா? அல்லது வருங்காலத்தில் உபயோகித்துக்கொள்வதற்காகக் காத்திருக்கிறானா? இந்தப் பிரச்னை அவரைப் பிய்த்தெடுத்தது.

கீழே கார்வந்து நிற்கும் சப்தம் கேட்டால் துரைசாமிதான் வந்துவிட்டாரோ என்ற அச்சம். கதவை யாராவது தட்டினால் வாரண்டுடன் போலீஸ்தான் வந்திருக்கிறதோ என்று நடுக்கம். தன் அறையே சிறையாகி விட்ட பின், அதன் தனிமையில்தாம் அதுவரை செய்திருந்த அநியாய செய்கைகள்பற்றிச் சிந்திக்க நடேசனுக்குச் சிறிது அவகாசம் ஏற்பட்டது. இன்னும் எவ்வளவோ இதர வாடிக்கைக்காரர்கள் இருக்கையில், அவர் குறிப்பாகத் துரைசாமியை ஏன் மோசடி செய்திருக்க வேண்டும்?

துரைசாமிக்குச் சிறிது சந்தேக குணம் எப்பொழுதுமே உண்டென்றாலும், நடேசன் தன் சாமர்த்தியத்தை உபயோகித்துத் தன்பால் அவருக்கு நம்பிக்கை ஏற்படும்படி செய்திருந்தார். துரைசாமிக்கும் பணத்தைப் பெருக்கிக் குவிக்க வேண்டும்என்றபேராசை இருந்தது அவருக்குச் சாதகமாயிற்று. இருவரும் ஆப்த நண்பர்களாகியிருந்தனர். அவரை முதல் போட வைத்து ஓர் வியாபாரமும் தொடங்க வேண்டும் அது செழித்தோங்கி நல்ல லாபம் தரத்தொடங்கும் பட்சத்தில் தானும் தன் பணத்தைக்கொண்டு கொட்டலாம் என்பது நடேசனின் முதல் அபிலாஷையாக இருந்தது. ஆனால் துரைசாமி இவ்விஷயத்தில் சிறிது கெடுபிடி செய்தார்.



ஆரம்பத்திலேயே நடேசனும் பாதி முதல் போடுவதாகஇருந்தாலன்றி வியாபாரத்தைப்பற்றி யோசிக்கவே வேண்டியதில்லை என்று சாதித்தார். பத்து பதினைந்து சத விகித 'டிவிடெண்டு'கள் தரும் கம்பெனிப் பங்குகள் இருக்கும்போது, அனாவசியமாக ஓர் வியாபாரத்தில் குதிப்பானேன்? நஷ்டம் வரும்பட்சத்தில் முழுவதையும் தானே பொறுத்துக் கொள்வானேன் என்பது அவர் கட்சி.

நண்பர்களுக்குள் இந்தச் சர்ச்சை மும்முரமாக நடந்து வந்த சமயத்தில்தான், வேறு விதமாக துரைசாமியின்கண்ணில்மண்ணை தூவக்கூடிய முதல் சந்தர்ப்பம் நடேசனுக்கு வாய்த்தது.

வால் நட்சத்திரங்களைப்போல வியாபார வானத்தில் சில போலி வர்த்தக மன்னர்கள் தோன்றினார்கள். 'அரோஹரா ஆயில்கம்பெனி' என்ற ஒன்று ஸ்தாபனமாயிற்று. வடாற்காடு ஜில்லாவில் பூமிக்குக் கீழே உயர்தரமான எண்ணெய் தட்டியிருப்பதாகவும், அங்கு சுரங்கம் அமைத்து எண்ணெயைப் பெரிய அளவில் வெளியே கொண்டுவர நடத்திய சோதனைகள் வெற்றிபெற்றுவிட்டபடியால் அதைத் தீவிரமாக மேற்கொள்ள கம்பெனி தொடங்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுப் பங்குதாரர்கள் சேர்க்கப்பட்டனர். பல புத்திசாலிகள் வெகு அவசரப்பட்டுக்கொண்டு பங்குகளை வாங்கினர். எண்ணெயா இந்தியாவிலேயே எடுக்கப்படுகிறது? சபாஷ் கொள்ளை லாபம் அடித்துவிடலாம் என்பது அவர்கள் கருத்து. ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட அறிக்கைகளும், போடப்பட்ட விளம்பரங்களும் எல்லோரையும் அப்படி ஆட்கொண்டு விட்டன. ஆனால் தொடங்கிய ஆறே மாதத்தில், சொல்லாமல் கொள்ளாமல், மூச்சுப் பேச்சு காட்டாமல் கம்பெனி அரோஹரா ஆகிவிட்டது விளம்பரக்குறைவின்காரணமாக பலருக்குத் தெரியாமலே போய் விட்டது!

டைரக்டர்களில் தலைமறைந்தவர்கள்போக பாக்கியிருப்பவர்கள் 'ஐயோ நாங்கள் என்ன செய்வது? முதலில் நாங்கள் தோண்டிய இடங்களில் மட்டும் மாதிரிக்காகச் சிறிது எண்ணெய் காணப்பட்டது. அப்புறம் பெரிய சுரங்கமாகத் தோண்டுவதற்குப் பணத்தை எல்லாம் செலவழித்தோம். நம் துரதிர்ஷ்டம் எல்லாவற்றையும் விழுங்கி விட்டது. வேறெங்கும் எண்ணெய் தட்டுப்படவேயில்லை' என்று ஒப்பாரி வைத்தார்கள். பங்குதாரர்களுக்கு மிஞ்சியது அந்தக் காகிதத்தின் விலைகூடப் பெறாத பங்குப் பத்திரங்கள்தாம்!

அழுகல் பழத்தை வாங்கியவன் இன்னொருவன் தலையில் அதைக் கட்டப் பார்ப்பது உலக இயற்கை மேற்கண்ட விவகாரத்தில் ஏமாந்த இரண்டொரு ஆசாமிகள் நடேசனின் உதவியை நாடினார்கள். நூறு ரூபாய் 'பிரிபரன்ஸ்' பங்குப் பத்திரங்களில் நூறும், பத்து ரூபாய் 'ஆர்டினரி' பத்திரங்கள் ஐந்நூறும் நடேசன் அவர்களிடமிருந்து வாங்கிக்கொண்டு



மொத்தமாக நூறு ரூபாயும் ஆளுக்கு ஒரு கப் காப்பியும் கொடுத்தனுப்பினர். அப்படி வாங்கப்பட்ட மூர்மார்க்கெட் சரக்கை அப்படியே முழுசாகத் துரைசாமியின் தலையில் கட்டினர். நேர்ப்படப் பங்கு நிலவரங்கள், கம்பெனிகள் தோன்றிமறையும் அற்புதம் இவைகள்பற்றி ஒன்றுமறியாத அப்பாவித் துரைசாமியின் கையைவிட்டு ரூபாய் பதினைந்தாயிரம் நழுவிப்போய், நடேசனின் பாங்கியிருப்பில் சேர்ந்தது.

‘புதிதாக ஆரம்பித்த கம்பெனி இன்னும் இரண்டு மூன்று வருஷங்களுக்கெல்லாம் முழு அளவில் எண்ணெய் உற்பத்தி தொடங்கிவிட்டால் நிறைய டிவிடெண்டு கிடைக்கும். பின்னுல் வாங்கிக்கொள்ள பங்குகளே கிடைக்காது. சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் இப்போழுதே வாங்கிக்கொண்டு விடுங்கள் என்று நடேசன் ஆசைகாட்டித் தூபம் போட்டுத் தம் காரியத்தில் வெற்றி பெற்றுவிட்டார்.

அது தாற்காலிக வெற்றிதான் என்று அவருக்குத் தெரியாததல்ல. என்ருவது ஒருநாள் தம் குட்டு வெளியாகத்தான் வேண்டும். ஆனுல் அதற்குள் துரைசாமியை அடியோடு தம் கைக்குள் போட்டுக்கொண்டு விட்டால்? அவருக்குத் தம் மீது நடவடிக்கையெதுவும் எடுக்கத் தோன்ருத அளவுக்குச் செய்ய லீலா-துரைசாமியின் விவாகம் ஓர் பெரிய கருவியாக அமைய வேண்டும். இந்த நோக்கத்துடன் செயலில் இறங்கினுர் நடேசன்.

அவரது நம்பிக்கைத் துரோகம் அதோடு நின்றிருந்தால் பரவாயில்லை. ருசி கண்ட பூனை மாதிரி அவரது பேராசை கூத்தாடிற்று. போதாத குறைக்கு அந்தச் சமயத்தில் பாங்கி முழுகியதால் அவருக்கு இருபதினுயிரம் நஷ்டமாயிற்று. அதை எப்படியாவது ஈடு செய்துகொள்ள வேண்டுமென்னும் தீர்மானத்தால் உந்தப்பட்டவராய், மறுபடியும் நண்பர் தலைமீது கை வைக்கத் துணிந்தார். காசிக்குப் போகிறவன் வழியில் முடிந்த பாவங்களையெல்லாம் செய்து மூட்டையின் கனத்தை அதிகரித்துக் கொள்கிருன், எல்லாப் பாவத்தையும் ஒரேயடியாக கங்கைக் கரையில் கழுவிக் கொண்டு விடலாம் என்ற நம்பிக்கையில் அதேபோல் துரைசாமியின் விவாக மனே ரதத்தை மட்டும் பூர்த்தி செய்து விட்டால் அவர் தம் துரோகம் வெளியாகும்போது அதை மறந்து மன்னித்து விடுவாரென்று நடேசனும் எண்ணி விட்டார்.

அரோஹரா ஆயில் கம்பெனியைப்போல் பாலாரிஷ்ட ஜாதகம் வாய்ந்த கம்பெனிகள் இன்னும் சில இருந்தன. அவற்றில் பணத்தைக் கோட்டை விட்ட சில அன்பர்களை நடேசன் பிரயாசையுடன் தேடிப் பிடித்தார். காகிதக்காரனிடம் ஏற்கனவே தம் பங்குப் பத்திரங்களை விற்றிராத பேர்வழிகள் சிறிது அதிகத் தொகை வருவதைக்கருதி நடேசனுக்கு விற்ருர்கள். துரைசாமி இன்னும் இருபதினுயிரத்துக்கு மொட்டையடிக்கப்பட்டார்!

இவ்வளவு ஆழச் சேற்றில் கால்கள் புதைந்து விட்ட பின் நடேசனது தப்பும் முயற்சிகள் வெகு தீவிரமாகி விட்டதில் ஆச்சரியமில்லை. லீலாவைப் பலியிட்டுத் தானுகவேண்டும். இல்லாவிட்டால் தன் தலை தப்புவதுகடினம் என்ற நிலைமையில் வெகு கேவலமான செயல்கள் செய்தார். அவருக்கு மனிதத் தன்மையே அற்றுப் போய்விட்டதோஎன்றுஎண்ணும் படி இருந்தது கோபுவைத்தொலைக்க அவர் எடுத்துக்கொண்ட பிரயாசைகளின் தன்மை.

கணேசனுக்கு அதன் மர்மம் விளங்கியது. ஆனுலும் தன் மூலமாக எஜமானருக்குத் தீமை எதுவும் ஏற்படுவதை இறுதி வரை தவிர்க்கவே அவன் விரும்பினுன். தன் ஆப்த நண்பன் கோபுவிடம் கூட இதைப்பற்றி ஒரு வார்த்தை விடவில்லை. அகாலத்தில் ரகசியம் வெளியாவதானுல் கணேசனுல் தான் ஏற்பட வேண்டும் என்று நடேசன் நம்பிப் பயந்திருந்ததற்கு மாருக, முற்றிலும் எதிர்பாராத ஓர் இடத்திலிருந்து தாக்குதல் வந்தது.

அது தான் கிருஷ்ணஸ்வாமி. யாதும் காதும் வைத்தாற்போல் இரவோடிரவாக அவன் தஸ்தாவேஜுகளை அமுக்கிக்கொண்டு போன சாமர்த்தியமே சாமர்த்தியம்!

சக்தி வாய்ந்த விரோதியொருவன் இருப்பதே பெருமைப்படுவதற்குரிய விஷயம் என்று சொல்வதுண்டு. அந்த ஒரு விஷயத்தில் தவிர, வேறெது. பற்றியும் பெருமையோ, சந்தோஷமோ படக்கூடிய நிலையில் ஸ்ரீ நடேசன் தற்சமயம் இல்லையென்று திட்டமாய்ச் சொல்லலாம். எந்த நெருக்கடியிலும் தவருது வேலை செய்து தப்ப வழி காணும் அவரது சூக்ஷ்ம புத்தியும் வேலை செய்ய மறுத்து விட்டது. வரப்போகும் ஆபத்தை எதிர் நோக்கிக் காத்திருப்பதொன்றுதான் இயலும் காரியம்.

நடேசன் யோசனை செய்தான்.

எதற்காக, யாருக்காக அவர் இத்தனை செல்வத்தைச் சேர்த்தார்? அவர் ஜெயிலுக்கோ அல்லது மறு உலகத்துக்கோ போய்ச் சேர்ந்த பின் இதையெல்லாம் யார் அனுபவிக்கப் போகிருர்கள்?

நாமோ நடு வயதைக் கடந்தாயிற்று. பெண்டு பிள்ளைகள் என்ற பந்தம் எதுவுமில்லை. இருந்த வரை தான் நன்ருகச் செலவு செய்து கொண்டு சௌகரியமாய் வாழ்ந்தோமா? அதுவும் கிடையாது. ஆப்த நண்பரது தலை மேலேயே கையை வைத்துப் பணம் சம்பாதித்தும் நாம் கண்டது என்ன? இந்தக் கடைசி நிமிஷத்தில் அச்சமும் பீதியும் கொண்டு அறைக்குள் அடைபட்டுக் கிடக்கிரும். கடந்தவை பற்றியோ, வருங்காலத்தைப்பற்றியோ மகிழ்ச்சியடைவதற்கு ஒன்றுமில்லை. ஆதிமுதலே சுயநலமும் பேராசையும் அவற்றுடன் பிறந்த கொடுமனமும் நம்மைப் பற்றிக் கொண்டிராவிட்டால் இத்தனை கேவல நிலையை எய்தியிருக்க மாட்டோம்.

‘தர்மாத்மா’ எனப் பெயர் வாங்கிய என் தம்பி சுந்தரத்தை இகழ்ந்தேன். அவனுவது போகிற வழிக்குப் புண்யத்தைத் தேடிக் கொண்டான். நானே?’

நடேசன் தற்சமயம் தன் செய்கைகளின் புத்திசாலித்தனத்தையும் பலாபலன்களையும் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தாரே தவிர, அவற்றிற்காகப் பச்சாதாபப்படவோ அல்லது பரிகாரம் தேடவோ போதிய அளவு மனே பக்குவத்தை அவர் இன்னும் அடையவில்லை. பேசாமல் அந்த முப்பத்தையாயிரம் ரூபாய்க்கு




டால்டாவனஸ்பதி நீங்கள் செலவு செய்யும் பணத்திற்கு முழுப் பிரயோஜனத்தைத் தருகிறது

எல்லா இடங்களிலுமுள்ள ஸ்திரீகள் கூறுவதாவது

“டால்டாவையே வாங்குங்கள், அதனுல் நீங்கள் பணத்தை மிச்சப்படுத் துவதோடு ருசிமிக்க ஆகாரங்களையும் தயாரிக்கலாம்.”




புத்திசாலியான குடும்பஸ்திரீகள் ஒவ்வொரு தடவையும் டால்டா வாங்குகிருர்கள். டாக்டர்கள் நமது தினசரி உணவில் கொழுப்பு அவசியம்தேவை என்று கூறுகிருர்கள். இதற்கு டால்டாவைத் தேர்ந்தெடுங்கள். அதன் விலை சரசமாயிருக்கிறது. சீல் செய்த டின்களில் கிடைக்கும் டால்டா எவ்வளவு காலம் நீடித்திருக்கிறது என்பதையும் அது உபயோகித்து எவ்வளவு அற்புதமான சாப்பாடு தயாரிக்கலாம் என்பதையும் நீங்களே பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள். இன்றே ஒரு டால்டா டின் வாங்குங்கள்.


சமையல் செலவை எப்படிக் குறைப்பது?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானுலும்—எழுதுங்கள்:

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ், தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

டால்டா

10, 5, 2, 1 பவுண்டு டின்களில் கிடைக்கிறது



HVM. 192-X52 TM

ஓர் செக் எழுதி ஓர் விநயமான மன்னிப்புக் கோரும் கடிதத்துடன் அதை வைத்துத் துரைசாமிக்கு அனுப்பினாறல் அவ்விஷயம் பயங்கர ஸ்வரூபத்தைத் தடுக்க முடியலாம். தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று என்ற மாதிரி துரைசாமியின் நட்பையும் நம்பிக்கையையும் இழப்பதோடு நின்று விடும். ஆனால் பணத்தைப் பிரியப் பாழும் மனம் இடந்தரவில்லை. ஒரு கால் இந்த ரகசியம் துரைசாமியை எட்டுவதற்கு முன்பே ஏதாவது ஒரு அற்புதம் நிகழ முடியாதா? வாழ்க்கையே அநித்யம். திடீரென ஓர் விபத்து ஏற்பட்டு துரைஸ்வாமியோ அல்லது கிருஷ்ணஸ்வாமியோ இறந்து விட்டால் எப்படியிருக்கும்? அல்லது நெருக்கடி தாள முடியாமல் அந்தப் பெண் லீலாவே வந்து தன் காலில் விழுந்து துரைஸ்வாமியை மணக்கஒப்புக்கொண்டாளானால் அப்புறம் சட்டுப்புட்டென்று காரியத்தை முடித்துக் கொள்ளலாம். 'என்னஐயாஉமக்கு விருப்பமான பெண்ணைக் கலியாணம் செய்து வைக்க எத்தனை சிரமப்பட்டிருக்கிறேன். நீர் இந்த முப்பத்தையாயிரத்தைப் பெரிதாக மதித்துக் கூச்சல் போடுகிறீரே' என்று கேட்கத் தைரியமிருக்கும். அப்பொழுது லட்சாதிபதியான துரைசாமி இந்த நஷ்டத்தை ஒருபெரிதாகக் கருதும் நிலையிலேயே இருக்க மாட்டார் என்ற எண்ணம் அவர் இதயத்தின் ஓர் மூலையில் தோன்றியது.

மேற்படி நம்பிக்கையே வேறு சமயத்தில் பைத்தியக்காரத்தனமானதாகத் தோன்றியிருக்கும் நடேசனுக்கு. ஆனால் தண்ணீரில் மூழ்கித் தத்தளிப்பவன் ஓர் சிறு துரும்பையும் பற்றிக்கொண்டு பிழைக்க முயற்சிப்பதுபோல் அவர் அவ்வெண்ணத்தைக் கைக்கொண்டார்.

நம்பிக்கை ஒரு பக்கம் இருந்தாலும் அவரது நடுக்கம் குறையவில்லை. வாசற்கதவை யாராவது தட்டினாலோ அல்லது டெலிபோன் மணி ஒலித்தாலோஎதிர்பார்த்த ஆபத்தே வந்து விட்டது போல் அஞ்சினர். அவரது வாடிக்கைக்காரர்கள் பலர் வந்து பார்த்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். உடல் சம்பந்தமாக ஒரு நோய்க்கும் ஆளாகாத நடேசனுக்கு இப்போது திடீரென்று என்ன ஆகி விட்டதென்று அவர்களுக்குப் புரியவில்லை. மூடியிருந்த ஆபீஸ் கதவும் 'விடுமுறை'ப் பலகையும் புது விஷயங்கள்!

பியூன் ஆறுமுகம் சாப்பாடு கொண்டு வரும் வேளை தவிரமற்ற நேரங்களில் அவனும் ஆபீஸ் பக்கம் தங்க வேண்டியதில்லையென அவனுக்கு உத்தரவு. அவமானம் நேரும்போது பிறர் ஏன் பார்க்க வேண்டும் என்பது நடேசனது சித்தாந்தம். மேலும் அவருக்கு மனிதர்கள் முகத்தில் விழிக்கவே இப்போது விருப்பமோ, தைரியமோ இல்லை.

திடீரென டெலிபோன் மணி சப்தித்தது. வழக்கம்போல் நடுங்கும் விரல்களால் அதைக் கையிலெடுத்தார் நடேசன். பேசியது துரைசாமியல்ல, சேத் பலபத்ரதாஸ்.

'என்ன மனிதர் ஐயா நீர்' என்று பூர்வ பீடிகையாக கோபக் குரலில் வந்தது சேத்ஜியின் கேள்வி. நடேசன் திடுக்கிட்டுப் போனார். நாலு நாளைக்கு முன்பு கோபு வேலையிலிருந்து விலகிக் கொண்ட செய்தியை அறிவித்த போது அத்தனை சாந்தமாகவும் மரியாதையாகவும் பேசிய நண்பரே இப்போது...?

"என்ன சேத்ஜி, எடுத்ததுமே இப்படிக் கோபித்துக்கொள்கிறீர்களே. நான் என்ன தவறு செய்துவிட்டேன்?" என்றார் நயமாக.

"நடேசன் நீர் இப்படியெல்லாம் வேஷம் போடுவதில் பிரயோஜனமில்லை. உம்முடைய விஷமம் எல்லாம் எனக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது. உம்மால் அந்தச் சாதுப் பையன் கோபுவுக்கு எவ்வளவு கஷ்டம், கவலை தெரியுமா? அப்படிக்கூட இதுவரை உங்களைப்பற்றி ஒருவார்த்தை கூடத் தூஷணையாகப் பேசாத அவனை நீர் கோவிலில் வைத்துக் கும்பிடவேண்டும். ஈஸ்வர சங்கல்பத்தினால் எதிர்பாராத முறையில் எனக்கு உண்மை துலங்கியது. நீர் செய்வது அத்தனையும் அக்கிரமம்; கடவுளுக்கே பொறுக்காது..."

"சேத்ஜி நான்..."

"சட் வாயை மூடும். நீர் சொல்லும் எந்த வார்த்தையையும் இனி நான் கேட்கப்போவதுமில்லை, நம்பப் போவதுமில்லை. நம் நட்புக்கு இதோடு முற்றுப் புள்ளி வைத்துவிட்டேன். என் வீட்டுப் பக்கம் காலெடுத்துவைக்காதீர். அங்கே வாசலில் கூர்க்கா இருக்கிறான்" சேத்ஜி போனைக் கீழே வைக்கும் ஓசை கேட்டது. நடேசன் ஸ்தம்பித்து நின்றார்.

இதென்ன உலகமே தனக்கு எதிராகத் திரும்பத் தொடங்கி விட்டது? அவரது முயற்சிகளில் இன்னொன்றும் வெற்றியளிப்பது போல் காட்டிவிட்டுத் தோல்வியிலேயே முடிந்துவிட்டதே! தன் முடிவு நெருங்கிவிட்டதென்பதைக் காட்டும் அறிகுறியா இது?

சேத்ஜி கூறியவற்றை மறுபடியும் நினைத்துப் பார்க்கும்போது கோபு உத்தமன் என்ற உண்மையை அவரால் மறுக்கமுடியவில்லை. நடேசன் அவனை எவ்வளவுதான் கெடுக்க முயன்றும், அவன் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகக்கூட அவரைக் காட்டிக் கொடுக்கவில்லை. ஆனால் பெருந்தன்மை, நன்றிமறவாமை முதலான நற்குணங்களெல்லாம் தூரவிருந்து பார்த்து வியப்பதன்றிக் காரியத்தில் விட்டுக் கொடுப்பவரல்லவே நடேசன்! அவர் சன்மார்க்க சங்கத் தலைவராக இருக்கும்பட்சத்தில் கோபுவைத் தனக்கு வாரிசாகத் தேர்ந்தெடுத்திருப்பார். அவர் செய்வதோ 'பிஸினெஸ்' அதிலும் மோசடிக்குக் குறைவில்லை. குறுக்கிடுபவன் யாரையும் நல்லவன் பொல்லாதவனென்று பாராமல் ஒழித்துக்கட்டத்தான் வேண்டியிருந்தது. என்ன செய்யலாம்?

நடேசன் தம் சிந்தனையை வேறு பக்கம் திருப்ப முயன்றார். சேத்ஜியின் நட்பு முறிந்தது மனவேதனையளிக்கும் விஷயம்; என்றாலும் அதைவிட முக்யமான பிரச்னைகள் ஏற்கனவே இருந்தன.

துரைசாமி ஏன் இரண்டுமூன்று நாட்களாக இந்தப் பக்கமே தலையைக் காட்டவில்லை. அவருக்கு என்ன நேர்ந்தது? ஒருக்கால் கிருஷ்ணஸ்வாமி முன்பேயே போய் வத்தி வைத்துவிட்டதனால், தன்மேல் நடவடிக்கை எடுப்பதற்கு ஆயத்தம் செய்துகொண்டிருக்கிறாரோ?

எதற்கும் ஒருமுறை 'போன்' செய்து பார்த்தாலென்ன என்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டார். ஆனால் போனின் மறுகோடியில் கேட்டது துரைசாமியின் குரலல்ல; அவரது சமையற்காரக் கிழவர்தான் பேசினார்.

"ஐயர்வாளுக்கு இரண்டு நாளாய் ஜுரம்; படுத்த படுக்கையாகக் கிடக்கிறார்" என்று அறிவித்தார் அவர். நடேசன் ஓர் பெருமூச்சு விட்டார். அவர் பயந்தபடி ஒன்றும் அவ்வளவு பிரமாதமில்லை போலிருக்கிறது.

"அடாடா! எனக்கும் அப்படித்தான். இல்லாவிட்டால் நேரிலேயே விசாரிக்க வந்திருப்பேன்...என்ன உடம்போ?" என்று நடேசன் தமதுபோலி அக்கரையுடன் கேட்டார். சமையற்காரர், குரலைத்தாழ்த்தியபடி, "என்ன? உங்களுக்கு விஷயம் தெரியாதென்றல்லவா தோன்றுகிறது!" என்றார்.

"நீங்கள்தான் கொஞ்சம் சொல்லுங்களேன், கேட்போம்."

யாரிடம் சொல்லலாம் என்ற ஆவலால் துடித்துக்கொண்டிருந்த கிழவர் சொன்னார்:— "எல்லாம் அந்தக் குழந்தை லீலாவால் வந்தது. ஐயர்வாள் அவளை வீட்டை விட்டே விரட்டும்படியாகிவிட்டது. இப்போது மனது கேட்கவில்லை, பாவம்! மனிதர் ஒடிந்துபோய்க் கிடக்கிறார். என்ன இருந்தாலும் ஒரே பெண்ணல்லவா?"


"ஒன்றும் புரியவில்லையே ஸ்வாமி. விவரமாகச் சொல்லக் கூடாதா?"

கிழவர் போனுக்கு அருகேயே பொடியை உறிஞ்சும் ஓசை கேட்டது. பெரிய மனிதர்கள் வீட்டில் பழகியவராதலால் ரிஸீவரைத் தொட்டிலில் வைக்காமல் கீழேயே வைத்துக் கனெக்ஷனை நீடிக்கும் விதி அவருக்குத் தெரிந்திருந்தது. பின் சாங்கோபாங்கமாக, அவர் உப்புக்காரத்துடன் சேர்த்துச்சொன்னவற்றிலிருந்து (சமையற்காரருக்கு உப்புக்காரம் போடும் வித்தையும் அத்துபடி ஆயிற்றே!) நடந்தவற்றை ஒருவாறாகக் கிரகித்துக்கொண்டார் நடேசன்.

அன்று துரைசாமியிடம் அவர் போட்ட தூபம் தன் வேலையைச் செய்திருக்கிறது.

அன்றைக்கென்று கோபுவை யாரோ முரடர்கள் சேர்ந்து தாக்



புதிதாகக் கார் கற்றுக்கொள்ளும் மாது:— இதோ நீட்டிக்கொண்டிருக்கிறதே கண்ணுடி. இதைச் சரியா திருப்பி என் முகம் தெரியும்படி வையுங்களேன்!

கணவர்:—அடடா! அது முகம் பார்க்கும் கண்ணுடி இல்லெடி! பின்னுல் வரும் வண்டிகள் கார்கள் எல்லாம் இதில் தெரிவதற்காக வைக்கப்பட்டிருக்கிறது.

கவும், அவன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படவும் நேர்ந்ததால், ஸரஸா இரவு முழுவதும் வீட்டுக்கு வரவில்லை. துரைசாமியின் சந்தேகம் உறுதிப்பட ஏதுவாகியது. காலையில் அவள் திரும்பியவுடன் வீட்டில் கால்வைக்க விடாமல் விரட்டியிருக்கிருர்.

கோபு அடிபட்டதைப் பற்றியோ ஸரஸா விரட்டப்பட்டதைப்பற்றியோ, அல்லது துரைசாமி ஜுரத்தில் கிடப்பதைப் பற்றியோ நடேசன் வருந்திஞரென்று சொல்வது தவருகும். அதற்குமாருக நடந்தது, நடப்பது எல்லாம் ஒரு நன்மைக்குத்தானே என்ற சிறு மகிழ்ச்சி ஏற்பட்டது அவருக்கு. துரைசாமியின் தேக அசௌக்யம் கிருஷ்ணஸ்வாமியின் மேல் நடவடிக்கைகளைக் கொஞ்சம் தாமதப்படுத்தக் கூடும். அவர் உடம்பு நன்ருயிருந்தாலல்லவா அவன் போய் விஷயங்களைச் சொல்லி அதைத் தஸ்தாவேஜுகள் காட்டி நிரூபித்து நெருப்புப்' பற்றவைக்கப் போகிருன்? இந்த எதிர்பாராத நிலைமை நடேசனுக்குச் சிறிது தீவிரமாக ஆலோசிக்கவும் உடனடியாகப் பலன் தரக்கூடிய திட்டமொன்றை வகுத்துக்கொள்ளவும் அவகாசமளித்தது. விதி நம்மை முழுவதும் கைவிட்டுவிடவில்லை என்ற நம்பிக்கை ஏற்படச் செய்தது.

சில நிமிஷங்களுக்குப் பின் இன்னெரு முறை போன் செய்தார். சமையற்காரரின் குரல் மீண்டும் கேட்டது.

"அங்கே ஐயர்வாளைப் பார்ப்பதற்கென்று யாராவது வந்தார்களோ, இன்றைக்கு?" என்ருர் நடேசன்.

"யாருமில்லையே."

"நேற்றைக்கு...?"

"நேற்றும் இல்லை."

"அப்படி யாராவது வரும் பக்ஷத்தில் எனக்கு உடனே போன் மூலம் தெரியப்படுத்துவீர்களோ?"

"பேஷாய்ச் செய்கிறேன். ஆனுல் 'யாரையும் பார்த்துப் பேச என்னுல் முடியாது. அவர்களை உள்ளே அனுமதிக்க வேண்டாம்' என்று தான் எஜமான் கண்டிப்பாக உத்தரவு போட்டிருக்கிருர். நிஜமாகவே அவருக்கு மனசும் உடம்பும் சரியில்லாதபோது, எப்படி...?"

"அது சரிதான். ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்ளுங்கள். அவரே அனுமதித்தால்கூட வேறு மனிதன் எவனையும் உள்ளே விடாமலிருப்பது நல்லது. உங்களுக்கு நான் சொல்லித்தர வேண்டுமா? எனக்கும் உடம்பு சரியாக இல்லை. ஐயர்வாளைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு முழுவதும் உங்கள் தலைமேதுதான் இருக்கிறது. நீங்கள் வயதில் பெரியவர், குடும்பத்தோடு பலவருஷமாகப் பழகியவர் என்பதையொட்டி..."

"அதற்கென்ன ஸார்? நான் இருக்கிறேன். கவலைப்படாதீர்கள்" என்ருர் முகஸ்துதி செய்யப்பட்ட கிழவர். சம்பாஷணை முடிவுற்றது. துரைசாமியைப் பேட்டி காண்பது கிருஷ்ணஸ்வாமிக்கு அத்தனை எளிதான காரியமாக இருக்கப்போவதில்லை என்ற திருப்தியுடன் நடேசன் நாற்காலியில் நன்கு சாய்ந்துகொண்டு மின்சார விசிறியின் காற்றை அனுபவிக்கத் தொடங்கினுர்.


எத்தனையோ கொடுமைகளைச் செய்திருந்தபோதிலும் நடேசன் இதுவரை தம் உயிருக்கு ஆபத்தாகக்கூடிய எந்தக் காரியத்திலும் இறங்கியதில்லை. ஆனுல் இப்போது நிலைமை நிர்ப்பந்தித்தது. தெய்வாதீனமாகக் கிடைத்த இந்த அவகாசத்தைப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் விளையும் கேடு சாவினும் மோசமானதாகும் என்ற அச்சம் பின்னின்று தூண்டியது. விரைவில் ஓர் முடிவுக்கு வந்தவராக எங்கோ அவசரமாகப் புறப்பட்டுச் சென்ருர் நடேசன். உடல் சுகவீனம் என்பதெல்லாம் பெயரளவிலே நின்றது.

(தொடரும்)

SWAMY COFFEE SCM Co POWDER REGD No. 53

புத்தம புதிய
நறுமணம் கமழும்
சுவாமி காப்பியை
உபயோகியுங்கள்.
சுவாமி காப்பி
மானுபாக்சரிங் கம்பெனி
89, பாண்டி பஜார்,
தி. நகர் — சென்னை-17.
தலைமை ஆபீஸ், த பெ. நெ. 35,
திருவனந்தபுரம்.
எமது டிரேடு மார்க் நெ. 59.
கவனியுங்கள்.





# உங்கள் கிரக பலன்

பி.வி.ராவ்

1953-ம் ஞு அக்டோபர் மாதம் 17உ முதல் 1953-ம் ஞு நவம்பர் மாதம் 16-ந் தேதி வரையில் பொதுவாக ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ராசியைத் தெரிந்துகொள்ள உதவியாக நக்ஷத்திரங்களும் பாதங்களும் கூடவே பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

[கீழ்க்கண்ட பலன்களை சந்திர ராசி, சூரிய ராசி, லக்ன ராசி மூன்றிலிருந்தும் பார்த்து மொத்தத்தில் பலன்களை மதிப்பிடலாம்.]

## மேஷ ராசி

*அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய*

இம்மாத முதல் 3 வாரங்களுக்கு கிரகங்கள் உங்களுக்கு அநுகூலமாகத் தெரியவில்லை. முதல் ஐந்து நாட்களில் நீங்கள் தீவிரமான சிந்தனையிலீடுபட்டிருக்க நேரிடும். நீங்கள் மிகுந்த மன உறுதி படைத்தவர்களாக இருந்தாலொழிய குடும்பம், தொழில் சம்பந்தமான விஷயங்களில் உங்களுக்கு மிகுந்த கவலை ஏற்படும்.

பண நிலைமை: மிகுந்த கவலைகள் இருக்கும். தற்காலிக கடன்கள் வாங்க நேரிடும். குடும்பம் குழந்தைகள் சம்பந்தமாக செலவு அதிகரிக்கும். பிரயாணம் ஒன்றினுல் உங்களுக்கு பண அனுகூலம்உண்டாகும். கடைசி வாரத்தில் நல்ல பண வசதி இருக்கும்.

ஆரோக்யம்: அக்டோபர் கடைசி வாரம் முதல் உஷ்ணத்தினுலும் வாயுவினுலும் வயிற்றுக் கோளாறு ஏற்படும். கூடுமானவரையில் தித்திப்பு பண்டங்களைத் தவிர்க்கவும்.

குடும்ப சூழ்நிலை: மணவாழ்க்கைசந்தோஷமாக இராது மனைவியுடனே அல்லது உறவு ஸ்திரீயுடனே சண்டைபோட்டுக்கொள்ளக்கூடாது. கோசார சுக்ரன் ஸ்வக்ஷேத்ரத்துக்கு வரும் சமயத்தில், கலியாண பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடியும்.

உத்யோகத்தில்: இது நல்ல மாதமல்ல பிரயத்னமிருந்திருந்தால் கடைசி வாரத்தில் மாற்றல் கிடைக்கும். ஆபீஸ் வேலைகள் கடுமையாக இருக்கும்.

வியாபாரிகள்: பல இடைஞ்சல்கள் இருக்கின்றன. ஹேஷ்ய வியாபாரத்தைத் தவிர்க்கவும். கடைசி வாரத்தில் அதிக பண வசதி கிடைக்கும். கூட்டாளிகளிடையேமனஸ்தாபம் இராது.

18 20 24 28 நவம்பர் 4 5 7 10, 12 13 15 16 17 23 அதிருஷ்ட நாட்கள். 5 6 14 சந்தேகமான நாட்கள்.

1953ஞு அக்டோபர்மீ 17-ந்தேதியுள்ள கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | வ. குரு புரானஸ் |
| | ராசி | | கேது |
| ராகு சந்திரன் | | | செவ்வாய் |
| | | சூரியன் புதன் சனி நெப்ட்யூன் | சுக்ரன் |

## விருஷப ராசி

*கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய*

குரு சனிபோன்ற பெரிய கிரகங்கள் இம்மாதத்தில் சாதகமாக உள்ளன. மற்ற சிறு கிரகங்கள் ஆரம்பத்தில் அநுகூலமாக இல்லாவிட்டாலும் சீக்கிரத்தில் நல்ல இடங்களுக்கு மாறுகின்றன. இதுவரையில் கிடைக்காதிருந்த பலன்கள் அப்பொழுது கிடைக்கும் சிலர் சுபகாரியங்களுக்காக சொந்த ஊருக்குப்போகவேண்டி வரும் 5ல் உள்ள லக்ஞாதிபதி எப்பொழுதும் மனக் கலவரத்தையே கொடுக்கும் குழந்தை ஒன்றைப்பற்றி கவலை இருக்கும். கண்பார்வை சரியாக இல்லாதிருந்தால் இம்மாதத்தில் அது இன்னும் மோசமாகும். குடும்பத்தைப்பற்றி புதிய விஷயங்களைத் தெரிந்துகொள்ள நேரிடும்.

பணம்: முதல் வாரத்தில் நிர்ப்பந்தம் இருக்கும். இரண்டாம் வாரத்திலிருந்து அதிக சௌகர்யங்கள் கிடைக்கும் சில நிர்ப்பந்தமான கடன்கள் பிறத்தியாருடைய உதவியினுலும் ஹேஷ்யத்தினுலும் பைசலாகிவிடும் வருமானம், முதலீடு ஆகிய விஷயங்களில் புதுப்பித்துக்கொள்ள இம்மாதம் சந்தர்ப்பமளிக்கிறது. ஆரோக்யம் உடம்பை சரிப்படுத்திக்கொள்ள தீவிர முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். 5 6ல் உள்ள கிரகங்கள் வயிற்றுக் கோளாறினுல் உடம்பு சரியாக இராதென்பதைக் காட்டு

கின்றன ஆறின ஆகாரங்களையும் குளிர் நீரையும் சாப்பிடாதிருத்தல் நலம்.

வீட்டு சூழ்நிலை: இம்மாதத்தில் நிலைமை எரிச்சலாக இருக்கும் பிளவுண்டாக்கும் சக்திகளால் குடும்பத்தில் ஸௌஜன்யம் குலையும். உங்கள் உறவினர்களே உங்களுடன் சண்டைபோடுவார்கள் இந்த கவலைகள் ஒருபுறமிருக்க, வெளிப் பழக்கங்களில் உணர்ச்சிகரமான வாழ்க்கை இருப்பது உங்களுக்கு ஒருபிரச்னையாகவே இருக்கும் உங்கள் பந்தோபஸ்தையோ அல்லது சுகத்தையோ பாதிக்கும்படியான விதத்தில் எதையும் செய்யவேண்டாம். நிலம் வீடு அல்லது வாகனத்தில் பணம்போட இது அதிருஷ்டமான மாதம் நிலம் அல்லது வீடு ஆர்ஜிதம் லாபகரமாக முடியும்.

உத்யோகத்தில் ஏதாவது நல்லது கிடைக்கும் என்ற நம்பிக்கை பூரணமாக இருக்கும் மேலதிகாரி விரோதமாக இருப்பதால் ஆரம்பத்திலேயே அநுகூலம் இராது. ஆனால் சீக்கிரத்தில் அவருடைய ஆதரவுகிடைத்து அதன் விளைவாக அநுகூலம் உண்டாகும் இருந்தாலும், விரோதிகள் இருப்பதால் வேலையில் சந்தோஷம் இராது.

வியாபாரிகள்' ஹேஷ்யத்தில் தாறுமாறாக இருப்பார்கள். இம்மாத இரண்டாம் வாரத்திலிருந்து வியாபாரம் மந்தமாக இருக்கும். புதிய கூட்டு வியாபாரம் ஏற்படலாம்.

18 20 22 24 28 நவம்பர் 2 3 5 7 8 10 12 13 15 அதிருஷ்ட நாட்கள் 23 29 நவம்பர் 6 சந்தேகமான நாட்கள்.

## மிதுன ராசி

மிருகசீரிஷம் 3 - ம் பாதம் முதல் திருவாதிரை
புனர்வஸு 3 - ம் பாதம் முடிய

அக்டோபர் 22ம் தேதியிலிருந்து பெரும்பாலான கிரகங்கள் ஐந்தாம் பாவ பலனைக்கொடுக்கும். வீடு, குடும்பம் சொத்து, பெற்றோர் விவகாரங்கள், குழந்தைகள், ஹேஷ்யம் அன்புக்குரியவர்கள் முதலியன உங்கள் விசேஷ கவனத்தைக் கவரும். உங்கள் மனதுக்குப் பிடித்தவைகள் நெருங்கிய உறவினர்கள், காதல் விவகாரங்கள், அபாயகரமான காரியங்கள் முதலியன அதிகமுக்யத்வம்பெறும் குருலக்னத்தில் இருப்பதால் அண்டையினர் கவனம் முழுவதும் உங்கள் மீது திரும்பும் இதனால் உங்கள் வசீகரம் அதிகரிக்கும் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொண்டீர்களானால் உங்களுக்கு புதிய தலைமைப் பொறுப்பு கிடைக்கும். 5ல் உள்ள கிரகங்களை குரு பார்ப்பதால் நிலைமையைப் பார்த்து ஜாக்கிரதையாக நடந்துகொள்ள ஊக்கம் கிடைக்கும் சிந்தனையில் ஈடுபடுவதால் நீங்கள் பலமுடிவுகளைச் செய்வதற்கு உதவியாக இருக்கும். சுக்ரன்நீச்சமாகஇருப்பதால்குழந்தைகள் சம்பந்தமாக கவலை இருக்கும் ஒரு பெரியவராலோ அல்லது நெருங்கிய உறவினர் ஒருவராலோ குடும்ப வாழ்க்கை பாதிக்கப்படலாம்.

பணம்: இம்மாதத்தில் வருமானம் மிதமாகவேதான் இருக்கும் சனி 2 ஐப் பார்ப்பது பண நிர்ப்பந்தத்தைக்கொடுக்கும் எனினும் பரிசீலனைக்கு வரும் புதிய திட்டங்களும் ஏற்பாடுகளும் வருமானத்தை அதிகரிக்கும் சகோதரர்களில் ஒருவருக்கு பண உதவி அளிக்கவேண்டி வரும்.

வீட்டு சூழ்நிலை: அக்டோபர் 23 முதல் செவ்வாய் சுக்ரன் சேர்ந்திருப்பதால் நிலம் சொத்துகள் வாங்குவதற்கு இது அநுகூலமான மாதம் குடும்பத்தில் நிம்மதிக்கு கிரகங்கள் அநுகூலமாக இல்லை. இம்மாதத்தில் வெளிப் பழக்கங்கள் விதவிதமாக இருக்கும். நீங்கள் ஒழுக்கத்தில் உறுதியாக இருந்தாலொழிய செவ்வாய் சுக்ரன் தொடர்பால் நீங்கள் ஏதாவது உணர்ச்சி வசமான காதல் விவகாரங்களில் விழும்படி நேரிடும் குரு ராசியில் இருப்பது இதை வெற்றிகரமாக எதிர்ப்பதற்கு உதவக்கூடும்.

ஆரோக்யம்: கிரகங்கள் அநுகூலமாக இல்லை உஷ்ணத்தினால் வயிற்றுக் கோளாறு ஏற்படலாம் கண்கோளாறு இருப்பவர்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.,

உத்யோகத்தில் முயற்சிக்கு பலன் இராது புதிய மேலதிகாரியின் ஆதரவு கிடைக்கும் உத்யோகத்தில் கவலை இருக்கும்.

வியாபாரிகள்: வியாபார விஷயங்கள் சுமுகமாக இராது ஹேஷ்யத்தினால் நஷ்டம் ஏற்படும். முன்னேற்றத்துக்கு ஏதாவது தடைகள் இருக்கும்.

18 22 24 28 31 நவம்பர் 3 5 7 10 13 16 அதிருஷ்ட நாட்கள் 23 29 நவம்பர் 6 12 நன்றாக இல்லை.

## கடக ராசி

புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம்
ஆயில்யம் முடிய

இம்மாதத்தில் கிரகங்கள் திருப்திகரமாகஇல்லை.புதிய யோசனைகளையும் திட்டங்களையும் முயற்சி செய்வீர்கள் ஆனால் வெற்றி கிடைக்காது. குரு 12ல் பிரவேசிப்பது உங்களுடைய புது முயற்சிகளுக்கு வெற்றி கொடுக்காது அபிப்பிராயபேதமும் கடைசிவரையில் முயற்சிசெய்வதற்கான வேகமின்மையும் இருக்கும் அதனால்தான் தோல்வி. சந்தர்ப்பம் எப்படிதான் இருந்தபோதிலும் நீங்கள் விவேகமாகவும், பொறுமையுடனும் இருந்தால் உங்கள் முயற்சிகளில் மகிழ்ச்சிகரமான நிலைமை ஏற்படும் அபீஷ்டத்துக்கதிபதி நவம்பர் 6ம் தேதி துலாத்தில் பிரவேசிப்பதால் அதற்குப் பிறகு உங்களுக்கு உற்சாகம் பிறக்கும் அக்டோபர் 22ம் தேதி அமாவாசை வருவது வீட்டிலும், சொத்து, குடியிருக்குமிடம் சம்பந்தமான விஷயங்களிலும் அபிவிருத்தி ஏற்படும் இம்மாதத்தில் குடும்ப விஷயங்கள் வலியுறுத்தப்படும் பணம் இம்மாதத்தில் முக்கிய கவனம் செலுத்தப்படுவது இந்த விஷயத்தைப் பற்றிதான் வருமானாதிபதி பலவீனமாக இருப்பதால் பணநிர்ப்பந்தமும் நிச்சயமில்லாத நிலைமையும் இருக்கும். சிலருக்கு திடீர் பண உதவிகிடைக்கும் வருமானாதிபதியை குருபார்ப்பதால் உங்களுக்கு நிச்சயமாக பண வசதி கிடைக்கும்.

வீட்டு சூழ்நிலை: சூரியன் 4-ம் வீட்டு விவகாரங்களை வலியுறுத்துவதால் வீட்டு வசதிகளையும் சௌகர்யங்களையும் அதிகரித்துக்கொள்ள ஆவல் இருக்கும். இம்மாதத்தில் சனிராசியையும் 6-ம் வீட்டையும் பார்ப்பதால் உங்கள் ஆரோக்யமோ அல்லது மனைவியின் உடம்போ பாதிக்கப்படக்கூடும். சனியை குரு பார்ப்பதால் கலியாணப் பேச்சு வார்த்தை வெற்றிகரமாக முடியும். பண விஷயங்களில் வீட்டிலோ வெளியிலோ யாருடனும் அபிப்பிராய பேதம் வைத்துக்கொள்ளவேண்டாம். உங்கள் விரோதிகள் சமயம் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். சுக்ரன் செவ்வாய் சேர்க்கை நிலம் வாங்குவதற்கு சாதகமாக இருக்கிறது. எந்த சர்ச்சையைப்பற்றியும் சண்டை செய்யக்கூடாது. தாயாரின் உடம்பு கவலைதரக்கூடும். ஆரோக்யம் கெட்ட கிரகங்களால் உடம்புபொதுவாக சரியாக இராது. சிலருக்கு கண் கோளாறு ஏற்படும். கண்ணாடியை மாற்ற வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இது அநுகூலமான மாதமல்ல. இலாகா ஆதரவு கிடைக்காது இம்மாதத்தில் வேலை தான் கடுமையாக இருக்குமே யொழிய பலன் இருக்காது. அக்டோபர் 23-ம்தேதிக்குப் பிறகு மேலுக்குவரும் நம்பிக்கை இருக்கும்.

வியாபாரிகள்: இது லாபகரமானமாதமல்ல. பண நிர்ப்பந்தம் அதிகமாக இருக்கும். கடன்காரர்கள் தொல்லை அதிகமாக இருக்கும் கடைசி 10 நாட்களில் புதிய வியாபாரங்களும் வசதிகளும் கிடைக்கும்.

18-22, 24-28, 31, நவம்பர் 3-5, 7-10, 12-16 அதிருஷ்ட நாட்கள் 17, 23, 29, நவம்பர் 6 பாதகமான நாட்கள்.

## ஸிம்ம ராசி

மகம், பூரம், உத்திரம் முதல் பாதம்
முடிய

செவ்வாய் ராசியில் இருப்பதால் இம்மாதம் பரபரப்பான சூழ்நிலையில் ஆரம்பித்தபோதிலும் கடைசியில் அமைதியாகவே இருக்கும். அவசரப்பட்டு எதையும் செய்ய வேண்டாம் பின்னால் வருந்தவேண்டி நேரிடும். 23-ம் தேதிக்குப் பிறகு 2-ல் செவ்வாய் பிரவேசிப்பதால், பணம், தொழில் சம்பந்தமான உங்கள் பிரச்னைகள் எளிதில் தீருவதற்கு நெருங்கிய உறவினர்களும் நண்பர்களும் உதவி புரிவார்கள். சூரியன் 3-ல் இருப்பதால் பிறருக்காக பிரயாணம் செய்யவேண்டிவரும் சூரியன் 3-ல்இருப்பதால் சகோதரன் போன்ற நெருங்கிய உறவினர் விஷயங்கள் கவனத்தைக் கவரக்கூடும். பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டவர்களாக இருந்தால் மதிப்பு ஏற்படும். கடிதப்போக்குவரத்து தத்துவ புத்தகங்களைப் படிப்பது முதலிய விஷயங்களில் அதிக சிரத்தை கொள்வீர்கள். தூரத்தில் இருக்கும் ஒருவருடைய தொடர்பால் உங்களுக்கு அநுகூலமுண்டாகும். தகப்பன் வழி உறவினருடன் அபிப்பிராய பேதம் ஏற்படலாம். புதிய நண்பர்கள் ஏற்படுவார்கள் அதனால் நன்மையுண்டு. நெருங்கிய சகோதரிகளில் ஒருவருக்கு உங்கள் ஒத்தாசை வேண்டியிருக்கும் உறவினர் ஒருவர் சம்பந்தமாக கவலை ஏற்படக்கூடும்.

பணம்: முதல் வாரம் நன்றாக இல்லை. அதற்குப் பிறகு வருமானம் ஒரு நிதானத்தில் நிற்கும். திட்டங்களில் சில தற்காலிகமாக தோல்வியடையும் அதனால் கவலையுண்டாகும் சங்கம் அல்லது பணக்கார உறவினர் ஒருவர் மூலமாக எதிர்பாராத தன லாபம் ஏற்படலாம். நிலம் அல்லது வீடு சம்பந்தமாக புது அனுபவம் கிடைக்கும். நிலம் அல்லது வீடு அல்லது வாகனத்தில் பணம் போட இம்மாதம் அநுகூலமாக இருக்கிறது.

வீட்டு சூழ்நிலை: கவலைகள் இருக்கும். நிலம் அல்லது வீடு சம்பந்தமாக ஏதாவது தகராறு முளைக்கும் குடும்பப் பொறுப்புகள் இதுவரையில் கடுமையாக இருந்தது இனி குறையும் கடைசி 10 நாட்களில் சகோதரர்கள் அல்லது சகோதரிகள் போன்றவர்களுடன் மீண்டும் தொடர்பு ஏற்படும்.

ஆரோக்யம்: பொதுவாக நன்றாக இருக்கும். இந்த மாதத்தில் மூளை வேலைதான் அதிகமாக இருக்கும். ஆகாராதிகளில் சிறிதளவு மாறுதல் செய்து கொள்ளவேண்டி வரும். ரகசிய நோய் ஏதாவது இருந்தால் அது இம்மாதத்தில் மேலுக்குத் தெரியும்.

உத்யோகத்தில் உயர்வும் வேலைமாற்றமும் ஏற்படும் என்ற நம்பிக்கை அதிகமாக இருக்கும். எண்ணங்கள் நிறைவேறுவதற்கு கடைசி 10நாட்கள் அதிருஷ்டகாரமாக இருக்கும்.

வியாபாரிகள்:இது திருப்திகரமான மாதம்.பிரயாணம் ஒன்றினால் லாபமுண்டாகும் இரண்டாம் பாதியில் புதிய வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கும்.

18-21, 24-28, நவம்பர் 3-5, 7-10, 12-16, அதிருஷ்ட நாட்கள்: 17, 29, நவம்பர் 1, 6, 12 நன்றாக இல்லை.

## கன்யா ராசி

உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம்
சித்திரை 2-ம் பாதம் முடிய

ராசிக்கு இரு பக்கங்களிலும் உள்ள கிரகங்களின் துஷ் பலன்களே இம்மாதத்தில் பலம் பெற்றிருக்கின்றன. வீட்டு விவகாரங்களிலும், பண விஷயங்களிலும் இதனால் உங்கள் கவலைகள் அதிகரிக்கும் சூரியன் 2-ல் இருப்பது உங்கள் செலவை அதிகரிப்பதுடன், பெற்றோர்களுடையவும் மற்ற பெரியவர்களுடையவும் அதிருப்தியைப் பெறவேண்டி வரும். அவர்களுடன் விவாதத்தைத் தவிர்க்கவும் இல்லாவிட்டால் நீங்கள் அநாவசியமான கஷ்டங்களுக்குள்ளாவீர்கள், 2-ல் பாப கிரகங்கள் இருப்பதுடன் அந்த ஸ்தானாதிபதி ராசியில் நீச்சமாக இருப்பதால் அதிக உஷ்ணத்தினால் கண் கோளாறு ஏற்படும். 23-ம் தேதியிலிருந்து புதன் 3-ல்இருப்பது பிரயாணம், படிப்பு அல்லது எழுத்து முதலியவற்றுக்கு சாதகமாக இருக்கிறது. மாந்திரீகம் முதலிய விஷயங்கள் கவனத்தைக் கவரும். புதனும் செவ்வாயும் பரஸ்பரம் வரவேற்பில் இருப்பதால், இதுவரையில் மகிழ்ச்சிகரமாக இல்லாதிருந்த சகோதர வாழ்வு இனி மாறும் இம்மாதத்தில் மனைவி தேகாரோக்யம் சரியாக இராது.

பணம்: நிர்ப்பந்தம் அதிகமாக இருக்கும் அவசரக் கடன் வாங்கவேண்டி வரும். கடைசி 10 நாட்களில் பண வசதிகள் கிடைக்கும் வியாஜ்ஜியம் ஏதாவது இருந்தால் அபராதமோ அல்லது பாதகமான தீர்ப்போ கிடைக்கும் முடிந்தால் அடுத்த மாதம் வரையில் வாய்தா வாங்கிக் கொள்வது நல்லது.

வீட்டு சூழ்நிலை: மகிழ்ச்சிகரமான சூழ்நிலை இராது. உறவினர் விஷயத்தில் என்றுமில்லாத ஒரு கண்டிப்பு உங்களிடத்தில் இருக்கும். குரு பார்வையால் நிலைமை சீர்படும் வீடு மாற்ற விருப்பம் இருக்கும். ஆனால் சாத்தியப்படாது. முதலீட்டுக்கு இது சாதகமான மாதமல்ல. ஆரோக்யம் சரியாக இராது.

உத்யோகத்தில் ப்ரமோஷனோ அல்லது வேறெந்த அநுகூலமோ ஏற்படுமென்று தோன்றவில்லை. வேலை போகாதிருந்தால் அதிருஷ்டம்தான். ஆபீஸில் வேலை இரட்டிப்பாகும் பொறுப்பு கடுமையாக இருக்கும். கடைசி வாரத்தில் பண சௌகர்யங்கள் கிடைக்கும்.

வியாபாரிகள்: வருமானத்தை அதிகப்படுத்திக் கொள்ள முடியாது. வியாபாரம் உற்சாகமளிப்பதாக இராது. ஆள் குறைப்பு செய்யவேண்டி வரும். கூட்டு வியாபாரம் சரியாக இராது.

18-20, 24-28, நவம்பர் 4, 5, 7-10, 13-16 அதிருஷ்ட நாட்கள் 17, 22,23, 29, நவம்பர் 2, 3, 6, 7, 17 சந்தேகமான நாட்கள்.

## துலா ராசி

சித்திரை, 3-ம் பாதம் முதல் சுவாதி
விசாகம் 3-ம் பாதம் முடிய

இம்மாதத்தில் பலன்கள் நல்லதும் கெட்டதும் கலந்திருக்கும். முதல் வாரத்தில் திடீர் பண லாபமும் சுற்றுப்புறத்தாருடன்என்றுமில்லாத நட்பும் ஏற்படும். இரண்டாவது வாரத்திலிருந்து உங்கள் வேலைகள் ஆரம்பிக்கின்றன. வெளிப் பழக்கங்களிலும், பொது வாழ்விலும் உங்கள் வெற்றிக்கு அநுகூலமான நிலைமை ஏற்படும். நீங்கள் மாணவர்களாகஇருந்தால் இம்மாதகடைசிவார வரையில் வேலையில் தீவிரம் இராது. வெளி வாழ்க்கையில் புதிய விஷயங்களை தெரிந்துகொள்வீர்கள். உங்கள் குழாத்தில் உங்களுக்கு பிரக்யாதி கிடைக்கும். வெளிப் பழக்கங்களையும், காதல் சம்பந்தமான விஷயங்களையும் கூடுமான வரையில் தட்டிக் கழிப்பது நல்லது.இல்லாவிட்டால் பின்னர் வருந்தவேண்டி வரும். கலியாணப் பேச்சுவார்த்தை ஏதாவது இருந்தால் வெற்றிகரமாக முடியும். பிரிந்த காதலர்கள் அல்லது தம்பதிகள் மீண்டும் சேருவார்கள். தொழில் சம்பந்தமான பிரயாணம் ஒன்று ஏற்படும். பழைய நண்பர்களையும், உறவினர்களையும் சந்திப்பீர்கள். அவர்களில் சிலர் உங்கள் பிரச்னைகளை பரிகரிப்பதற்கு உதவி புரிவார்கள். மேல் அந்தஸ்துள்ளவர்களுடன் தொடர்பு கொள்ள முயற்சி செய்யுங்கள்.

பணம்: ஆரம்பத்தில் திடீர் பண லாபம் ஏற்படக்கூடும் என்றாலும் நண்பர்கள். அல்லது உறவினர்கள் உங்களை ஏமாற்றாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். வருமானம் அதிகரிக்கும். ஆனால் வீட்டிலும் சுபகாரியங்கள் மூலமாகவும் செலவு மிகவும் அதிகமாக இருக்கும். கெட்ட தசாபுக்தியுள்ளவர்கள் கைமாற்றுக் கடன் வாங்க வேண்டிவரும். நண்

பர்கள் உங்களுக்கு உதவி புரிவார்கள். தகப்பன் வழி உறவினர் மூலமாக லாபம் ஏற்படக்கூடும்.

வீட்டு சூழ்நிலை: மகிழ்ச்சி இராது. அதிக வசதிகளுக்காக கடுமையாக வேலைசெய்ய வேண்டி இருக்கும். பெரியவர்களின் செல்வாக்கு தீவிரமாகவும் பாதகமாகவும் இருக்கும். பண விவகாரங்களில் தகராறுகள் வைத்துக்கொள்ளக் கூடாது. குடும்பத்தினர்கள் பணத்துக்காக தொந்தரவு பண்ணுவார்கள்.

ஆரோக்யம்: பித்தம் இருக்கும். உடம்பு துர்பலமாக இருக்கும். மூத்திரப்பை சம்பந்தமான கோளாறு ஏற்படக்கூடும்.

உத்தியோகத்தில்: இலாகாவின் ஆதரவு இருக்கும். ஆனால் பண லாபம் இராது. ஆபீஸ் கவலை அதிகமாகும். சகாக்களுடன் பழகுவதில் மகிழ்ச்சி இராது.

வியாபாரிகள்: முதல் வாரம் அதிக லாபகரமாக இருக்கும். மேற்கொண்டு வியாபாரத்துக்கு அதிக மூலதனம் வேண்டும், ஆனால் இப்பொழுது முதலீடு போடுவதால் பலன் இராது.

18–22, 24–26, 27, 28, நவம்பர் 3–5, 7, 8–15, 16 அதிருஷ்ட நாட்கள், 17, 23, 29, நவம்பர் 1, 6, சந்தேகமான நாட்கள்.

## விருச்சிக ராசி

விசாகம் 4–ம் பாதம் முதல், அனுஷம்,
கேட்டை முடிய

குரு சனி போன்ற பெரிய கிரகங்கள் பாதகமாக இருக்கின்றன. போன மாதத்தைவிட அதிகமாக கவலையும் எரிச்சலும் இருக்கும். இம்மாதத்தில் பண விஷயத்திலும் நெருங்கிய உறவினர் சம்பந்தமாகவும் முக்கிய கவனம். எதைச் செய்தாலும் ஒருவிதமான அதிருப்தி இருக்கும். ஏனெனில் புதிய வியாபாரங்களோ அல்லது சமீபத்தில் செய்யப்பட்ட மாறுதல்களோ பண லாபத்தை தரமாட்டா. பழைய நட்பை புதுப்பித்துக்கொள்வதால் இம்மாதத்தில் உதவியாக இருக்கும். வெளிப் பழக்கங்களில் காதல் சம்பந்தமான விஷயங்களைத் தவிர்க்கவும். கல்யாண காரியம் ஒன்றுக்கு நீங்கள் உங்களால் முடிந்த உதவியைச் செய்வீர்கள். ஆனால் நண்பர்களை நம்பவேண்டாம். அவர்களால் உங்களுக்கு செலவுதான். கலியாண முயற்சிகள் வெற்றி பெறும். பிரிந்திருந்த தம்பதிகள் சாதகமான சூழ்நிலையில் திரும்பக் கூடுவார்கள்.

பணம்: ஒரே சீரான நிலைமை இராது. இரண்டாம் பாதியில் அதிகச் சௌகர்யங்கள் இருக்கும். இம்மாதத்தில் ஹேஷ்யத்தில் அதிருஷ்டம் இருப்பதாகத் தெரியவில்லை. பண விவகாரங்களில் நண்பர்கள் மூலமாக உதவி தேவை. வியாபாரத்தில் உற்சாகமிராது. உறவு ஸ்திரீ ஒருவரின் உதவி ரொம்ப நெருக்கடியான சமயத்தில் கிடைக்கும்.

வீட்டு சூழ்நிலை: சனி 12ல் இருப்பது குடும்ப சுகத்துக்கு அநுகூலமில்லை, வீட்டில் சில்லரைச் சண்டைகள் உங்களுக்குக் கவலை கொடுக்கும். இரண்டாவது வாரம் முதல் புதிய நண்பர் ஒருவர் மூலமாக வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். கடைசி வாரத்திலிருந்து குடும்ப வாழ்க்கையில் நிம்மதி ஏற்படும்.

ஆரோக்யம்: பொதுவாக நன்றாக இருக்கும். சுக்ரன், செவ்வாய், சனி இருக்கும் இடங்கள் காரணமாக நரம்புத் தளர்ச்சியும், வயிற்றுக் கோளாறும் ஏற்படலாம். கொஞ்சம் கவலை கொடுக்கும். இரண்டாவது வாரத்திலிருந்து அஸ்டமாதிபதி புதன் ராசியில் இருப்பது மறைந்திருந்த ஒரு வியாதியை வெளிக் கிளப்பக்கூடியது.

உத்யோகத்தில் கணிசமான லாபம் இராது. கடும் உழைப்பு உழைத்தாலும் மேலதிகாரியின் திருப்தியைப் பெற முடியாது. சிலருக்கு ஆள் குறைப்பினாலோ அல்லது சம்பள வெட்டினாலோ பாதகம் ஏற்படலாம்.

வியாபாரிகள்: வியாபாரம் திருப்திகரமாக இராது. புதிய கூட்டு வியாபாரம் ஆரம்பிக்கும். வெளிநாட்டு வியாபாரம் உற்சாகமூட்டக்கூடியதாக இருக்கும். சிப்பந்திகள் செலவு வளர்ந்துகொண்டே இருக்கும். புதிய வியாபாரங்கள் தவறிப் போய் ஏமாற்றம் ஏற்படலாம்.

18, 19–22, 24–29, நவம்பர் 2–5, 7–10, 14–16 அதிருஷ்ட நாட்கள். 17, 23, நவம்பர் 1, 6, 12 சந்தேகமான நாட்கள்.

## தனுர் ராசி

மூலம், பூராடம், உத்திராடம் முதல்
பாதம் முடிய

தனுர் ராசிக்காரர்கள் சுபாவத்திலேயே வருங்காலத்தை அறிந்தவர்கள் என்றும் சமீபத்தில் இன்னது நடக்குமென்பதை அவர்கள் ஊகித்துக்கொள்கிறார்கள் என்றும் சொல்வதுண்டு. பெரிய கிரகங்களான குருவும், சனியும் சாதகமான இடங்களில் இருப்பதால் இந்தவிஷயத்தை இம்மாதம் ருஜூபிக்கும். கிரகங்கள் 11ம் பாவத்தை வலியுறுத்துகின்றன. நண்பர்கள் உங்கள் விசேஷ கவனத்தைக் கவருவார்கள். மாத கடைசி 10 நாட்களில் புதிய நண்பர்கள் ஏற்படுவார்கள். ஆபீஸிலோ அல்லது வீட்டிலோ பெரியவர்களுடன் அபிப்பிராயபேதத்தைத் தவிர்க்கவேண்டும். உங்கள் பொதுக் காரியங்களுக்கு பொதுஜனங்களின் ஆதரவு இருக்கும். 7ம் வீட்டில் லக்னாதிபதி இருப்பது வியாபாரத்திலோ அல்லது உத்தியோகத்திலோ முன்னேற்றத்தைக் கொடுக்கும். இம்மாதத்தில் பிரயாணம் ஒன்று ஏற்படலாம். ஆனால் இந்த வக்ரகதியால் உங்கள் முக்கிய முயற்சிகள் தடைபடக்கூடும். வெளிப் பழக்கங்களில் முன்னைவிட அதிக சந்தோஷம் இருக்கும். கலியாணப் பேச்சு ஏதாவது இருந்தால் தற்காலிகமாக ஒத்தி போடப்படலாம் குழந்தைகளில்ஒன்றின் உடம்பு சரியாக இராது. உணர்ச்சிகரமான வாழ்க்கையைத் தவிர்க்கவும். இல்லாவிட்டால் உங்கள் உறவினர்களே உங்கள் நடத்தையைப்பற்றி சந்தேகிப்பார்கள். அக்டோபர் 21ந் தேதி முதல் செவ்வாய், சனி ஆகிய இரு பாபகிரகங்கள் ராசியைப் பார்ப்பது சூழ்நிலை மகிழ்ச்சிகரமாக இருப்பதற்கு அநுகூலமில்லை.

பணம்: இது மிக்க சௌகர்யமான மாதம். பணம் தாராளமாக கிடைக்கும். உறவினருடன் சண்டை சச்சரவு வைத்துக்கொள்ள வேண்டாம். அக்டோபர் 22க்குப் பிறகு செலவு அதிகரிக்கும். இம்மாதத்தில் கண்ணோய்க்காரர்கள் அதிகம் சிரமப்படுவார்கள். நவம்பர் 10ம் தேதிக்குப் பிறகு நண்பர்கள் மூலமாக எதிர்பாராத அதிருஷ்டம் கிடைக்கும்.

வீட்டு சூழ்நிலை: நீங்கள் நினைக்கிற மாதிரி இது சந்தோஷமான மாதமல்ல. குடும்பத்தில் யாருக்கும் ஆரோக்யம் சரியாக இராது. உங்கள் உடம்பிலேயே எதிர்பாராத கோளாறு ஒன்று ஏற்படலாம். நெருங்கிய உறவினர் ஒருவரால் உங்களுக்கு மனநிம்மதி இராது.

உத்யோகத்தில் மேலதிகாரியின் ஆதரவு கிடைக்கும். ஆனால் உத்யோக வாழ்க்கை கவலையற்றிராது: கீழ் சிப்பந்திகளை நம்பாதே.

வியாபாரிகள்: வியாபாரம் உற்சாகமாக இராது. ஹேஷ்ய வியாபாரம் அளவோடு இருந்தால் அநுகூலமுண்டு. இரண்டாம் பாதியில் கூட்டு வியாபாரம் லாபகரமாக இருக்கும். நவம்பர் 13ம் தேதி வாக்கில் திடீர் லாபம் கிடைக்கும்.

18–22, 24–28, நவம்பர் 4–5, 7–10, 13–14–15, 17, 23, 29 அதிருஷ்ட நாட்கள். 17, 23, 29, நவம்பர் 1, 2, 6, 12 சந்தேகமான நாட்கள்.

## மகர ராசி

உத்திராடம் 2–ம் பாதம் முதல் திருவோணம்,
அவிட்டம் 2–ம் பாதம் முடிய

இம்மாத முதல் பாதியில் கிரகங்கள் அமைப்பு திருப்திகரமாக இல்லை. 8ம் வீட்டு செவ்வாயும், 8க்கதிபதி சூரியன் 10ல் நீச்சமாக இருப்பதாலும்உத்யோகத்திலும்,வியாபாரத்திலும் ஏமாற்றம் இருக்கும். இரண்டாவதுவாரத்திலிருந்து செவ்வாய் 9ல் பிரவேசிப்பதால் வருங்காலத்தைப்பற்றி நம்பிக்கையுண்டாக்கும். சுக்ரன் 10ம் வீட்டில் ஸ்வக்ஷேத்ரனாக வரும் சமயத்தில் கடைசி வாரத்தில், வேலை இல்லாமலிருந்தால் வேலை கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு நிலைமை அபிவிருத்தியடையும். 6ல் குரு இருப்பது கலியாண ஏற்பாடு ஏதாவது இருந்தால் அதை முடித்து வைக்காது. உச்ச லக்னாதிபதியுடன் இருக்கும் கர்மாதிபதியை குரு பார்ப்பதால் உங்கள்வியாபாரத்தையும் செல்வநிலையையும் மேலிடத்தவர்களின் கவனத்துக்கு கொண்டு வருவது எளிதில் முடியும். உத்யோகத்திலும் வியாபாரத்திலும்கூட இந்த அநுகூலம் கிடைக்கும்.

பணம்: இம்மாதத்தில் நிர்ப்பந்தம் கடுமையாக இருக்கும். முதல் வாரத்தில் திடீர் உதவி கிடைக்கும். நண்பர் ஒருவர் தகுந்த சமயத்தில் உதவிக்கு வருவார். லேவாதேவி சரிவர நடக்காது. அக்டோபர் 21ம்தேதி வாக்கில் வியாபாரிகளுக்கு எதிர்பாராத விதமான நிலைமை ஏற்படும். செலவு கட்டுக்கடங்காமல் செல்லும்.

வீட்டு சூழ்நிலை: முதல் பாதியில் நன்றாக இராது. நெருங்கிய உறவினர்களே கஷ்டப்படுத்துவார்கள். அடிக்கடி வீட்டில் சண்டைகள் ஏற்படும். குழந்தைகளில் ஒன்றுக்கு இம்மாதம் நன்றாக இல்லை. 21ம் தேதியிலிருந்து செவ்வாய் சுக்ரனுடன் இருப்பதாலும் 4ம் வீட்டைப் பார்ப்பதாலும் நிலம் அல்லது வீட்டில் பணம் போட சந்தர்ப்பங்கள் ஏற்படும். சிலர் விஷயத்தில் வீடு மாற்றல் ஏற்படலாம். பொழுது போக்கு நண்பர்களுடனும் துர்நடத்தையுள்ளவர்களுடனும் சேராதிருத்தல் நல்லது.

ஆரோக்யம்: அதிக உஷ்ணத்தினால் உடம்பு சரியாக இராது. 6ல் குரு துர்பலத்தைக் கொடுக்கும்.

உத்யோகத்தில் முதல் பாதியில் மகிழ்ச்சி இல்லாவிட்டாலும் இரண்டாம் பாதியில் சில முக்கிய மாறுதல்கள் ஏற்படலாம். வேலையில்லாதவர்கள் நிச்சயமாக தகுந்த வேலை பெறுவார்கள்.

வியாபாரிகள்: 8ம் வீட்டு செவ்வாய் திடீர் நஷ்டத்தையுண்டாக்கும். நவம்பர் 6ம் தேதி வரையில் வியாபாரம் மிகுந்த அளவு கவலை கொடுக்கும். கடைசி வாரம் எல்லாவற்றையும் ஈடுசெய்யும். வியாபார முறையில் முக்கிய மாறுதல்கள் செய்யப்படும்.

18–21, 24–28, நவம்பர் 2, 4–5, 7–10, 13–16 அதிருஷ்ட நாட்கள். 17, 22, 23, 29, நவம்பர் 1, 6, 12 சந்தேகமான நாட்கள்.

## கும்ப ராசி

அவிட்டம் 3–ம் பாதம் முதல் சதயம்,
பூரட்டாதி 3–ம் பாதம் முடிய

இந்த மாதம் போன மாதத்தைவிட கொஞ்சம் நன்றாக இருக்கும். 7, 8ல் உள்ள கிரகங்கள் முன் போலவே உங்களுக்கு நிம்மதியைக் கொடுக்கமாட்டா. வீட்டிலோ அல்லது வெளி வாழ்க்கையிலோ எவ்வளவுதான் தாழ்ந்து போனாலும் ஏதாவது எதிர்ப்பு இருந்தே தீரும். மேலதிகாரியிடமிருந்து எதிர்பார்த்த அநுகூலங்கள் சம்பந்தமாக இரண்டாவது மூன்றாவது வாரங்களில் கவலை ஏற்படும். குழந்தைகளில் ஒன்றைப்பற்றியோ அல்லது தொழில் சம்பந்தமாகவோ கொஞ்சம் ஏமாற்றத்தைக் கொடுக்கும். செவ்வாயும் சுக்ரனும் அஷ்டமத்தில் இருப்பதால் வயிற்றுக் கோளாறு ஏற்படக்கூடும். தூர இடத்தில் பிரயாணம் நேரிடலாம். தூர இடத்துடன் கடிதப் போக்குவரத்து நடத்துவதால் அநுகூலமுண்டாகும். சூரியனும் சனியும் 9ல் இருப்பது தத்வஞானத்துக்கு ஆதரவளிக்கிறது. 2ம் வாரத்தில் பத்திரிகைக்காரர்களுக்கு நன்றாக இருக்கிறது. அவர்களுக்கு சர்க்கார் பாராட்டு கிடைக்கும். வயதான குழந்தைகளில் ஒன்று எதிர்பாராதவிதமான கவலையைக் கொடுக்கும். பெரியவர்களுடன் உறவு சந்தோஷகரமாக இராது. வியாஜ்ஜியம் ஏதாவது இருந்தால் 3வது வாரம்வரை ஒத்திப் போடுவது நல்லது. உங்கள் எண்ணங்கள் சில நிறைவேறுவது டிசம்பர் மாதம்வரை ஒத்திப்போகும்.

பணம்:செலவு அதிகமாக இருந்தாலும் போன மாதத்தைவிட நிலைமை நன்றாக இருக்கும். 2வது வாரத்திலிருந்து பண வசதிகள் குறையும். செவ்வாயும் சனியும் 9ஐப் பார்ப்பதால் பண விவகாரங்களில் பிறத்தியாருடன் மனஸ்தாபத்தைத் தவிர்க்கவும். உங்கள் பண நிலைமையை நண்பர்கள் அளவுக்கதிகமாக பயன்படுத்திக்கொள்வார்கள்.

வீட்டு சூழ்நிலை: 8ம் வீட்டு கிரகங்கள் குடும்பத்துக்கு அநுகூலமாக இருக்கமாட்டா. மனைவியின் உடம்பு மிகுந்த கவலை கொடுக்கும். புதிதாக மணமானவர்களும் இம்மாதிரி சிரமப்படுவார்கள். பொறுமையாக இருந்தாலொழிய வீட்டில் நிம்மதி இராது. முதலீடு செய்வதற்கு இது தகுந்த சமயமல்ல. மோட்டார் சொந்தக்காரராக இருந்தால் அதன் வேலைபற்றி திருப்தி ஏற்படாது.

ஆரோக்யம்: 8ல் உள்ள கிரகங்கள் உங்கள் ஆரோக்யத்தை பாதிக்கும். நரம்புத் தளர்ச்சி ஒரு காரணமாக இருக்கலாம். பித்தமும் இருக்கலாம். வாய்வு பதார்த்தங்களை தவிர்க்கவும்.

உத்யோகத்தில் உற்சாகமிராது. கடைசி வாரத்தில் ஏதாவது அநுகூலம் ஏற்படலாம். என்னதான் உழைத்தாலும் மேலதிகாரியைத் திருப்தி செய்ய முடியாது.

வியாபாரிகள்: வெளிநாட்டு வியாபாரத்தில் கவர்ச்சி உண்டாகும், 3ம் வாரத்தில் உள்ளூர் வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படலாம். அதற்குப் பிறகு தூரத்து வியாபாரம் லாபகரமாக இருக்கும். கூட்டு வியாபாரம் சரியாக இராது.

18–22, 24–28, நவம்பர் 4–5, 7–10, 13–16 அதிருஷ்ட நாட்கள். 17, 23 29, நவம்பர் 1, 3, 6, 12 சந்தேகமான நாட்கள்.

## மீன ராசி

பூரட்டாதி 4–ம் பாதம் முதல், உத்திரட்டாதி,
ரேவதி முடிய

இம்மாதத்தில் கெட்ட பலன்கள்தான் அதிகமாகத் தெரிகின்றன. பலனில்லாத முயற்சிகள், அச்சம், கவலை, சிரமமான பிரயாணங்கள் கெட்ட பழக்கங்கள், வீட்டிலும் வெளியிலும் சண்டைகள், சகோதரர்கள் அல்லது சகோதரிகளுடன் தகராறு முதலியன இம்மாதத்தில் கெட்ட பலன்கள். குரு 10ஐப் பார்ப்பதால் வீடு மாற்ற அவசியமேற்படும். துர்லபமான உறவினர்களைச் சந்திக்கக்கூடும். வீட்டில் நாட்டம் செல்லும், 7ல் செவ்வாய்–சுக்ரன் இருப்பது மனைவி உடம்பை பாதிக்கும். தூரஇடத்திலிருந்துவரும் கடிதங்கள் மனக் கலவரத்தையுண்டாக்கும். நண்பர்கள், உறவினர்கள் மூலமாக கொஞ்ச காலத்துக்கு உங்கள்மீது பழி சேரும். அவர்களுடன் தகராறு வைத்துக்கொள்ளக் கூடாது.

பணம்: இம்மாதம் பாதகமானது. ஆனால் செவ்வாய், சனி காரணமாக சில சமயங்களில் திடீரென பணம் கிடைக்கும். உச்ச சனியினால் உங்களுக்கு பணப் பிரச்னைகள் ஏற்படலாம். ஆனால் உங்கள் நிலைமை இதனால் மோசமாகாது.உயில்கள் மூலமாக சொத்து சேருவதற்கு இடமிருக்கிறது.குடும்ப சொத்தைப் பாகம் பிரிப்பதாக இருந்தால் குடும்பத்தில் தகராறுகளும் கஷ்டங்களும் வியாஜ்ஜியங்களும் ஏற்படலாம். பண லாபத்துக்கும் சௌகர்யங்களுக்கும் இரண்டாம் பாதி நன்றாக இருக்கிறது.

வீட்டு சூழ்நிலை: குரு 4ல் இருந்தபோதிலும் 7ல் உள்ள கிரகங்கள் காரணமாக குடும்ப சூழ்நிலை மகிழ்ச்சிகரமாக இராது. குழந்தைகளில் ஒன்றின் உடம்பு பற்றி கவலை ஏற்படும். ஒரு பழைய நண்பரால் கவலையும் பொறுப்பும் உண்டாகும். மூன்று நண்பர்கள் உங்களை தூற்றிக்கொண்டிருப்பார்கள். ஏதாவது ஒருவிதமான உதவி கோருவார்கள்.வீட்டில் கலகக்காரர்களைத் தவிர்க்கவும். 2வது பாதியில் நெருங்கிய உறவினரில் ஒருவர் திடீரென நோய்வாய்ப்படுவார். பெற்றோர்களுடன் நீங்கள் நெருங்கி இருப்பவர்களாக இருந்தால் அசாத்தியமான காரியங்களை உங்களிடமிருந்து அவர்கள் எதிர்பார்ப்பார்கள்.

ஆரோக்யம்: இது நல்ல மாதமல்ல. சின்ன கோளாறு ஏதாவது இருந்தால்கூட அதை உடனே கவனிக்கவேண்டும். வயிற்றுக் கோளாறு ஏற்படலாம். கண்ணோய் ஏதாவது இருந்தால் இந்த மாதத்தில் மோசமாகக்கூடும்.

உத்யோகத்தில் குறிப்பிடத்தக்க லாபம் ஒன்றுமில்லை. கடைசி வாரத்தில் மொத்தமாக பணம் கிடைக்கும். உத்யோகவட்டாரங்களிலும் சந்தோஷமிராது.

வியாபாரிகள்: இது அபாயகரமான மாதம். மிகவும் ஜாக்கிரதையாக இருந்தாலொழிய நஷ்டம் ஏற்படும். ஹேஷ்ய வியாபாரத்துக்கு அநுகூலமில்லை. கூட்டு வியாபாரம் சரியாக இராது.

18, 20, 22, 24–26, 28, 31, நவம்பர் 3–5, 7–10, 13, 15 அதிருஷ்ட நாட்கள். 17, 23, நவம்பர் 1, 6, 12 சந்தேகமான நாட்கள்.

# வாத்ஸல்யம்

[சென்ற இதழ் தொடர்ச்சி]

குகப்ரியை

இரவு நடுநிசி. தூக்கம் பிடியாதவனுய்ப் படுக்கையிலேயே புரண்டுகொண்டிருந்தான் அவன். கடந்த ஒரு வாரமாய் வீடு ஒரே அமைதியில் ஆழ்ந்திருப்பதும், அவர் ஒருவருடனும் பேசாமல் தனியனுய் மாடியிலே நண்பர்களுடன் கழிப்பதும் அவன் மனதை வாட்டிற்று. இன்னது செய்வதென்று விளங்காதவனுய்த் தவித்தான். இந்திராவின் மோகன வடிவம் அவனது கண்களின் முன் தோன்றி மறைந்துகொண்டிருந்தது. கடந்த ஒரு வாரமாய் அவளேயும் சந்திக்கவில்லை. விஷயம் ஒழுங்கு படாமல் அவளே மட்டும் பார்ப்பதனுல் என்ன பயன். நம்மோடு சேர்ந்து அவளும் குழம்பித்தவிப்பாள். ஆகவே பாராமல் இருந்து விடுவதே நலம். பிறகு நல்ல முடிவோடு சந்திப்போம் என்று நினைத்தான். ஆனுல் ஏனே அவனுல் தூங்கவும் முடியவில்லை. சற்றே எழுந்து உட்காருவதும், மீண்டும் படுப்பதுமாக நிலை கொள்ளாமல் தவித்தான்.

விளக்கை அணைத்திருந்தும் தெரு விளக்கின் ஒளி சன்னலின் மூலம் சுவற்றின் மேல் படிந்திருந்ததுகூட அவனுக்கு எரிச்சலை உண்டாக்கிற்று. என்னசெய்வது? அப்பா மறுத்தால் தானும் மறுக்க வேண்டுமா? அப்படி மறுத்து விட்டால் அவள் கதி என்ன?... ஏற்றுக்கொண்டால் அதனுல் என்னென்ன விபரீதங்களைஎதிர்த்து போராட வேண்டுமோ? அப்பாவின் மனம் நோக நாம் வாழ முடியுமா?...ஏன்? நான் துணிந்ததற்கே அவர்தானே காரணம். சாதி, மதம், ஏழை, பணக்காரன் வரதட்சணை என்றெல்லாம் அவர் தானே ழக்கினுர். சந்தர்ப்பம் வந்தா தாமே நடந்து காட்டுவது ல மார்தட்டியவர் இப்பொழுது பின்வாங்குவானேன்? குல ளரவம், அந்தஸ்து எல்லாம் இவர் ஒருவருக்கு மட்டுந்தானு? ஊரிலே உள்ள மற்றவர்களுக்கெல்லாம் கிடையாதா?... என்றெல்லாம் ஓடின அவன் சிந்தனைகள். எவ்வளவு நேரம் இப்படி சிந்தையில் ஆழ்ந்திருந்தானே தெரியாது.

மெதுவாக அறைக்குள் யாரோ நடந்து வருவதுபோல் ஓசை கேட்டது. தூங்குவதாய்க் கருதவேணுமென்றெண்ணி பெருமூச்சு விடலானுன். காலடி ஓசை கட்டிலை நெருங்குவதும் தெரிந்தது. மிருதுவான ஒருகரம் தன் நெற்றியின் மீது புறங்கையை வைத்துப் பார்ப்பது தெரிந்தது. ரகு! ரகும்மா என்ற குரல் மெதுவாகக் கேட்டது. கண்களை விழித்தான், கவலை தோய்ந்த முகத்துடன் நின்ருள் காமாட்சி அம்மாள்.

'ஏன் அம்மா! என்ன? என்று சுருட்டி வாரிக்கொண்டு எழுந்தான் அவன்.

'ஒன்றுமில்லை. தூக்கம் வரவில்லை. நீ தூங்கி விட்டாயோ என்று பார்க்க வந்தேன். பால் சாப்பிடாமலேயே வந்துவிட்டாயே! கொண்டுவந்து கொடுக்கட்டுமா?'

'வேண்டாம்மா! நீ ஏன் தூங்கவில்லை? உட்காரேன்'.

அந்தப் படுக்கையிலேயே உட்கார்ந்து கொண்டான் காமு.

அவன் தாயைத் தனிமையில் சந்தித்தால் என்னென்னவெல்லாம் பேசவேண்டுமென்று நினைத்தானே அவைகளெல்லாம் தொண்டையிலேயே நின்றுவிட்டன. மெல்ல மெல்ல 'அம்மா! நான் இந்திராவைத்தவிர...' அதற்கு மேல் அவனுல் பேசமுடியவில்லை.

ஏற்கனவே பல சமயங்களில் அவன் தாயிடம் இதைப்பற்றி பேச நினைத்ததுண்டு. பூர்வாங்கமாக ஏதையாவது தொடங்குவான். பேச்சு எங்கெங்கேயோ சுற்றிச் சுழன்று விஷயத்திற்கு வரும் போது இவனுக்குத் தைரியம் இராது. இவ்வளவு தூரம் வந்த பிறகும்கூட தாயிடம் 'நேருக்கு நேர் சொல்வதற்கு அவனுக்குக் கூச்சமாயிருந்தது. அவள் கன்னடப்பெண் என்பது காமுவுக்குத் தெரியும். இருந்தாலும் தன் மகன் குழந்தை – இவ்வளவு தூரம் துணிந்துவிட மாட்டான் என்றே அவள் பேதை உள்ளம் நினைத்தது. இவன் மளமளவென்று முன்னேறி நெடுந் தூரம் வந்துவிட்டான் என்ற செய்தி அவளுக்குப் பெரிய அதிர்ச்சியாகத்தானிருந்தது. இருந்தாலும் அந்தத் தாயுள்ளம் ஒரு கணத்தில் அந்த அதிர்ச்சியையும் வென்றுவிட்டது. நெடு நேரம் சிந்தித்த பின்பே அவள் தன் மகனது அறையை நாடி வந்திருக்கிருள்.

இந்த அசடனுக்கு அது புரிந்தால்தானே! அவள் தன்னை இந்திராவை மறந்துவிடும்படி எச்சரிக்க வந்திருப்பாளோ? அல்லது அப்பாவிடம் போய்ச் சொன்னவைகளை எல்லாம் தவறு என்று மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும்படி தூண்டவோ வற்புறுத்தவோ வந்திருக்கலாமோ என்று நினைத்தான்.




158876

சில நிமிஷங்கள் இருவரும் ஒன்றுமே பேசவில்லை. அவன் தலையைத் தொட்டு கோதியவளாய் 'என்னடா இது? தெப்பலாய் வியர்த்திருக்கிறதே! விசிறியைப் போட்டுக்கொள்ளக் கூடாதோ' என்று கேட்டவளாய் எழுந்து விசிறியின் ஸ்விச்சைப் போட்டாள். மெல்லிய இன்னிசையுடன் விசிறி சுழலத் தொடங்கிற்று. மேலும் என்ன பேசுவதென்று விளங்காதவளாய்ப் படுக்கையில் உட்கார்ந்தாள். அவள் மனம் இந்திராவைப்பற்றிய எண்ணங்களினுல் நிறைந்திருந்தது.

இந்திராவை எப்பொழுதோ இரண்டொரு முறை பார்த்திருக்கிருள். கல்லூரி உதவி நிதிக்கு டிக்கெட் விற்பனை செய்யும் பொருட்டு அவளும், தமிழ்ச் சங்கத் தலைவி அம்புஜமும் வந்திருந்தபோதுதான் காமு அம்மாள் அவளை நன்ருய்க் கவனித்தாள். நல்ல சமத்துப் பெண். அடக்க ஒடுக்கமாய் இருக்கிருள் என்று நற்சாட்சி கொடுத்தபோது ரகுராமன் முகம் சிவந்தது. அவர்கள் வந்த பொழுது இவன் ஸ்நானம் செய்து ஈரத்துண்டும் கையுமாய் வந்தவன் பரக்க பரக்க நாற்காலி கொணர்ந்து போட்டு உபசரித்ததை நினைக்க காமுவுக்குச் சிரிப்பு வந்தது. மேலும் உடனடியாக கிளறிக் கிளறி நாமே முடிவு கட்டச் சொல்வதுபோல் துரிதப்படுத்துவதைவிட சற்றுப் பொறுத்துத்தான் பார்ப்போமே! அவனே ஆலோசனை செய்து தகப்பனுரை விரோதித்துக்கொள்வானேன் என்று நினைத்தாலும் நினைக்கலாம். எதற்கும் அவசரப்பட வேண்டாம் என்று நினைத்தவளாய் 'சரி, நீ தூங்கு,வீணில்மனதைப் போட்டுக் குழப்பிக்கொள்ளாதே' என்று சொல்லிக் கொண்டே வெளியே வந்தாள்.

கதவை மூடிச் சென்ற பிறகு மெல்ல மெல்ல அடிமேலடி வைத்து நடந்து, தன் தாய் கீழே செல்லுகிருளா அல்லது தந்தையின் அறைக்குச் செல்லுகிருளா என்று கவனிக்கும்பொருட்டு செவிகளை கதவின் அருகே வைத்தவனுய் நின்ருன்.

ஜம்புநாதய்யரது அறையிலிருந்து ஆரோகண, அவரோகணங்களோடு குறட்டை சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது. சரி அவருடன்

ஒன்றும் இது விஷயமாய் இப்பொழுது பேசிவிட மாட்டாள் என்று தெரிந்ததும் அப்பாடா வென்று ஒரு பெருமூச்செறிந்தான் ரகு. தலையிலிருந்த ஒரு பெருஞ்சுமை இறங்கியதுபோல் தோன்றிற்று.

• • •

விடியற்காலை வழக்கம்போல் எழுந்து தன் வேலைகளில் ஈடுபட்டிருந்தாள் காமாட்சி அம்மாள். அவள் மனம் கணவனுக்கும் மகனுக்குமிடையே ஊசலாடிக் கொண்டிருந்தது. போனால் போகட்டும் என்று இவரும் விட்டுக்கொடுக்கலாம். விஷயம் மிகவும் பெரியது. ஆனால் அதன்பொருட்டு அவன் அவ்வளவு தீவிரமாக இருந்தால் அவன் மனதைக் கலைப்பானேன் பிறகு எது எப்படி நேருமோ யார் கண்டார்கள். வயதுவந்த பிள்ளை எங்கேயாவது காணாமல் ஓடிவிட்டால் – அல்லது – ஏதாவது – விஷத்தை – என்று நினைக்க அவள் உடல் பதறிற்று. சமீபத்தில் இம்மாதிரி வெளிவந்த செய்திகள் எல்லாம் இறகு முளைத்து எதிரே வந்தன (இருந்தாலும்) இது ஒரு பக்கமிருக்கட்டும். அந்தப் பெண் விஷயம் எப்படியோ ஏற்கனவே அனாதை. இவனையே நம்பியிருந்து இவன் மறுத்ததும் எங்கேயாவது குளம் குட்டையில் விழுந்து வைத்தால்? ஏற்கனவே என்ன பாவங்கள் செய்தோ இந்தப் பிறவி. இன்னும் பாப மூட்டையைச் சுமந்து கொள்ள வேணுமா? அன்று எழுதியவன் அழித்தெழுதப் போவதில்லை என்றும் நினைத்தாள்.

அவனும் பொறுத்துப் பார்க்கலாம். இவ்வளவு அவசரப்பட்டு அம்பலத்திலே அவல் பொதி அவிழ்த்திருக்க வேண்டாம் அப்பப்பா! இந்தப் புருஷர்களுக்கே பொறுமை குறைவு. இவர் பிடிவாதம் ஊரறிந்தது. அவன் மட்டும் குறைவானா? இவர் பத்தடி பாய்ந்தால் அவன் பதினாறடி பாய மாட்டானா?...என்றெல்லாம் சிந்தித்தவளாய்க் கூடத்து ஊஞ்சலிலே வந்து உட்கார்ந்தாள்.

வீடு ஒரே அமைதியில் ஆழ்ந்திருந்தது. அம்மா!வென்று தணிந்த குரலில் கூப்பிட்டான் ரகு. உட்காரு காப்பி கொண்டுவருகிறேன் என்று உள்ளே சென்றாள். மறுவிநாடி கையிலே காப்பியுடன் வந்து ஊஞ்சலில் வைத்தாள். எப்படி பேச்சைத் தொடங்குவது என்று விளங்காதவனாய் நான் வந்து — என்று தொடங்கு முன்னரே, தெரியும்! எல்லாம் தெரியும். அப்பா அன்றைக்கே எல்லாவற்றையும் சொல்லிவிட்டார் என்பதற்குள் அவன் திக்குமுக்காடிப் போனான்.

ஆசார அனுஷ்டானங்களிலே மிகுந்த பற்றுள்ளவளான தன் தாய் ஒரு கன்னடப் பெண்ணை எப்படி ஏற்றுக்கொள்வாள். அடாடா! தெரியாத்தனமாய் இந்தச் சிக்கலிலே அகப்பட்டுக் கொண்டோமே என்று தவிப்பதை அவன் முகம் காட்டிற்று.

"அவசரமென்ன? கொஞ்சம் பொறுத்துத்தான் பாரேன். என்னைப் பொறுத்தவரையில் எனக்கு ஒருவிதமான ஆட்சேபமுமில்லை. நானும் நேற்றிரவு முழுவதும் யோசித்து பார்த்துவிட்டேன். ஏதோ உனக்குக்கீழே தங்கைகள் தம்பிகள் என்றிருந்தால் இந்தக் கல்யாணத்தினால் அவர்களைப் பாதிக்குமோ வென்று பயப்படவேண்டும். கடவுள் நல்லவேளையாய் அந்த மாதிரியான சிக்கல்களை வைக்கவில்லை. எப்படியாவது நீ சௌக்யமாயிருந்தால் அதுவே போதும். உனக்காக, உன் சுகத்துக்காக ஊராருடைய ஏச்சுப் பேச்சுக்கள் வம்பு தும்புகள், என் சொந்த விஷயங்களான மடி, ஆசாரம், பூஜை, புநஸ்காரம் முதல் எல்லாம் தண்ணீரும் வரையில் எல்லாவற்றையுமே விட்டுக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். இருந்தாலும் நீ இப்படி அவருடன் நேருக்கு நேர் சண்டையிட்டிருக்கக் கூடாது என்று சொல்லும்பொழுது அவள் குரல் கரகரத்தது. தொண்டை கம்மிப் போயிற்று. மேலும் பேச விரும்பாதவளாய் தலையைக் குனிந்து கொண்டாள் அவள். கற்சிலைபோல் உட்கார்ந்திருந்தான் ரகு.

அவன் மனத்துள் பெரும் போராட்டம், அலைமேல் அலையாகச் சிந்தனைகள் பொங்கி எழுந்தன. அப்பாவின் மனம் இப்படி என்று தெரிந்திருந்தால் முதலிலேயே விழிப்புடனிருந்திருப்பேன்–என்று தொடங்கு முன் காலடி ஓசை கேட்கவே எழுந்து உள்ளே சென்றான்.

இந்திராவின் மீதுகூட அவனுக்குக் கோபம் கோபமாய் வந்தது. எங்கேயிருந்து வந்து தொலைந்தாள் இவள். பெரிய தொல்லையாகவல்லவா போய்விட்டது. அவளிடம் சென்று மன்னிப்புக் கோருவதா? என்ன பைத்தியக்காரத்தனம், தகப்பனுருக்குப் பயப்படுவதாகவோ தாட்சண்யப்படுவதாகவோ கூட நினைக்கமாட்டாள். சொத்து போய்விடுமே என்று பின்வாங்குவதாகவல்லவோ நினைப்பாள். சீ! சீ! என்ன சங்கடம், எப்படியும் இனி மறுக்கமுடியாது. ஒருவேளை அவள் தற்கொலை செய்து கொண்டால்?—வேண்டாம்– இருவருமே தற்கொலை செய்துகொண்டால்? என்றுகூட அவனுக்குத் தோன்றிற்று. அதன் கூடவே இன்னொரு குரல், "அடே மண்டையா! பெருவாழ்வு காத்திருக்கும்பொழுது சாவைப் பற்றி ஏன் எண்ணுகிறாய். துணிந்து செல், செயலில் இறங்கு. சீர்திருத்தக்காரர் பேசினார். மகன் செயலாகவே செய்து காட்டிவிட்டான் என்று உலகம் புகழும். உன் தாயாரே அனுமதித்த பிறகுஎன் யோசனை என்று கேட்கும்" இந்த நிலையிலே தவித்தான் அவன்.

• • •

கடைசியாகத் திருநீர்மலையிலே நீர்வண்ணப் பெருமாள் சந்நிதியிலே அவள் கரம்பற்றி மாலையிட்டான் அவன். உற்றாரின் பணியை ஊரார் செய்தனர். ஏதோ துணிந்தான். செய்துவிட்டான். ஆனால் வீட்டிலே அப்பாவும் அம்மாவும் என்ன செய்கிறார்களோ என்ற நினைவு இதயத்தின் அடியில் ஒளிந்துகொண்டு மெல்ல மெல்லத் தலைநீட்டி எட்டிப் பார்க்கும். அதை அவன் பொருட்படுத்தவில்லை.

வேலையும் கிடைத்தது. தனிக் குடித்தனமும் வைத்தாயிற்று. புலியூரிலே பூதேசுவரர் சந்நிதியருகிலே அழகிய வீடு. நகரத்திற்குரிய எல்லா வசதிகளுடன் கூடிய ஊர் அது. விவாகம் நடைபெறும்வரையில் தான் பிடித்த பிடியைச் சாதித்துவிடவேணுமென்ற ஆவலும் வேகமும் இருந்தது. புதுமையின் மோகத்திலே ஆழ்ந்திருந்தான். அவர்கள் ஒரே இன்பவாரியில் ஆழ்ந்திருந்தனர். "உலகிலேயேதங்களைக் காட்




LTS. 389-X52 TM



ஏண்டி கோமா! நவராத்திரிக்கு சொல்றவா ராதாகிருஷ்ணன் வேஷந்தான் போட்டுப்பா; பிள்ளையார் வேஷம் போட்டிருக்காளே?

அவளுக்கு கிருஷ்ண வேஷம் நல்லா இல்லே மாமி! அதனாலே அவளுக்குப் பொருத்தமான பிள்ளையார் வேஷத்தை போட்டுவிட்டா அம்மா!

டிலும் அதிருஷ்டசாலி யார் இருக்கமுடியும். "காதல் கைகூடி விட்டது. அதன் பயனை இன்ப வாழ்வு. நல்லவேலை. உற்ற நண்பர்கள். வேறென்ன வேண்டும்" என்று நினைத்தன அவ்விரு உள்ளங்களும். வான வீதியிலே இன்னிசை எழுப்பிப் பறந்து திரியும் புள்ளினங்கள்போல ஆடியும் பாடியும் களித்தனர். வாழ்நாள் முழுவதும் இப்படியே கழிந்து விடுமானால் அதைக்காட்டிலும் அடையக்கூடியது என்ன, இருக்கிறது என்று ஒருநாள் அவளையே கேட்டான் அவன்.

"கழிந்து விடுமானால்—என்று ஒரு ஆனால் போடுவானேன். ஏன் இப்படிச் சொல்லுகிறீர்கள். தெய்வத்தின் திருவருள் நம்மைக் கூட்டிவைத்தது. இந்த நிலை நீடிப்பதிலே சந்தேகமென்ன? ஆனால்—போனால் என்று என்ன அமங்கலச் சொல்" என்று அன்புடன் கடிந்துகொள்வாள் அவள். மெல்லிய மலரை ஒத்த அவள் இதயம் இன்ப மிகுதியினால் விம்மும். இதழ்க் கிடையிலே ஒரு சிறு புன்னகை அரும்பும். அந்த முறுவலிலே மெய்ம்மறந்து போவான் ரகு.

இந்த நிலையிலே நாட்கள் கடந்தன. மாதங்கள் மறைந்தோடின. வருடம் ஒன்றும் ஆயிற்று. ஆனால் கடந்த சில நாட்களாக அவன் முன்போலக் கலகலவென்றிருப்பதாக அவளுக்குத் தோன்றவில்லை. ஊரிலிருந்து ஏதாவது செய்தி வந்திருக்குமோ? யாராவது எதையாவது சொல்லியிருப்பார்களோ? - - - - எதுவாயிருந்தாலென்ன? அவர் நெஞ்சத்தின் அடியிலே ஏக்கம் ஒளிந்திருக்கிறது. அதை நம்மிடம் மறைக்க முயல்கிறார். மன நிலையை எத்தனை நாள்தான் மூடி வைக்க முடியும் என்றெல்லாம் ஓடின அவள் சிந்தனைகள்.

தானே நேரில் சென்று மாமன் மாமி இவர்களின் காலில் வீழ்ந்து வணங்கி அவனைப் பெற்றோருடன் இணைத்து விடவேண்டும் என்றும் நினைத்தாள். ஆனால் எதை எப்படிச் செய்வது? என்பதுதான் அவளுக்கு விளங்காத விடுகதையாயிருந்தது. துள்ளித் திரியும் உற்சாகத்தோடிருந்த ரகு இப்பொழுது பெரும்பாலும் மௌனியானான். விடுவிக்க முடியாத சிக்கலைப்பற்றிய சிந்தையிலே ஆழ்ந்து மணிக்கணக்காய் உட்கார்ந்திருப்பது கண்டு அவள் நெஞ்சம் குமுறிற்று.

"ஏதடா! ஆழமறியாமற் காலையிட்டு என்னையும் அவரையும் துன்பக் கேணியிலே தள்ளிவிட்டேனோ?" என்றுகூட நினைக்கத் தொடங்கினாள். அவளுடன் பேசுவதும் சிரிப்பதும்கூட முன்போலில்லை என்று நினைத்தாள். விவாகத்துக்குப்பின் என்ற நினைவிலே அவள் கட்டியிருந்த மனக் கோட்டைகள் எல்லாம் வெறும் மயக்கம்தானோ? - - - - என்றும் தோன்றிற்று. ஆனால் தன் எண்ணங்களை வெளியே காட்டிக் கொள்ளாமல் நடந்துகொண்டாள். ரகு அவள் மன நிலையைப் புரிந்துகொள்ளவேயில்லை.


இந்தசமயத்திலேதான் பூதேசுவரர் கோயிலில் திருவிழாவும் வந்தது. கடந்த வருட முழுவதும் தாம் நடத்திய வாழ்க்கையின் உயர்வும் பெருமையும் அவள் கண்முன்னே விரிந்தன. இன்று இருக்கும். இந்த நிலைக்கு ஒரு முடிவு காணவேண்டும். அதுவும் வெகு சீக்கிரத்திலேயே காண வேண்டும். இல்லாவிடில் அவர் உடல் நிலையைப் பாதித்துவிட்டாலோ?

அருமைப் பிள்ளை. தாய்தந்தையரைப் பிரியாதவர். இந்தத் தனி வாழ்வு அலுத்துவிட்டதோ? என்றும் நினைத்தாள். சீக்கிரமே இதற்கு ஒரு முடிவு காணவேண்டும் என்று நினைத்ததன் பயனாக அவள் மனம் உற்சாகமடைந்தது. மெல்ல அடிமேலடி வைத்து மாடிப்படி ஏறினாள். அவன் அப்பொழுதும் சிந்தையில்தான் ஆழ்ந்திருந்தான் கோயிலிலே நடைபெறும் சொற்பொழிவு ஒலி பெருக்கியிலே தெளிவாகக் கேட்டது.

"அன்பின் வழியது உயிர்நிலை" என்று பேசுகிறது தெய்வத் திருமறை. அந்த அன்பின் வலிமையினாலே உலகிலுள்ள சராசரங்களும் உயிர்வாழ்கின்றன. இதையேதான் எம்பெருமானிடத்து செலுத்தும்பொழுது பக்தி என்றும் காதல் என்றும் பேசுகிறோம். தோழரிடத்து நட்பு என்கின்றோம். இதன் மிகப் பெரிய வடிவுதான் வாத்ஸல்யம் என்று பெயர் பெறுகிறது. வாத்ஸல்யம் என்பது தாயின் மாசற்ற அன்பு. கடவுளைப்பற்றிக் குறிக்கும்பொழுது மணிவாசகப் பெருமான் "தாயினும் சாலப்பரிந்து" என்று பேசுகிறார். கண்ணப்பரது தெய்வ பக்தியைக் குறிக்கும்பொழுது,

போதுவர், மீண்டும் செல்வர்,
புல்லுவர், மீளப்போவர்.
காதலின் நோக்கி நிற்பர்,
கன்றகல் புனிற்று போல்வர்.

என்று கன்றைப் பிரிந்த பசுவைப்போல் தவிக்கும் கண்ணப்பரது உள்ளம் என்று பேசுகிறார். அன்பின் பெருக்கிற்கு உவமை சொல்லுபவர் பசுவானது எப்படி தன் கன்றின் மீதுள்ள அசுத்தங்களை யெல்லாம் தான் உண்டு கன்றைப் பரிசுத்தமாக்குகிறதோ அப்படித்தான் சர்வேசுவரியும் நமது குற்றங்குறைகளை யெல்லாம் தான் ஏற்று நம்மைப் பவித்திரமாக ஆக்குகிறாளாம்.




"மனுஷன் எத்தனை கவலைப்படுவது சார்! பெண்ணுக்குக் கல்யாணம் செய்ய வேண்டும், பையனை மேல் படிப்புக்கு அனுப்ப வேண்டும், பெரிய பெண்ணைப் புக்ககம் அனுப்ப வேண்டும்......"

"ஏன் நாலைந்து கவலைப்படுகிறீர் ஐயா? 'பணம் வேண்டும்' என்று ஒரே கவலைப்படுமே!"

சின்னஞ்சிறிய நீரூற்று எப்படி மிகப் பெரிய நதியாகப் பெருக்கெடுத்து நாட்டைக் குளிர்வித்து வளமாக்குகிறதோ அது போன்றதுதான் தாயின் பேரன்பு. அவளது இதயமாகிய ஊற்றிலிருந்து அன்பென்னும் நீர் பெருகி இருகரையும் புரள ஓடி நம் வாழ்வை வளம் செய்கிறது. அந்த நீரூற்று இன்றேல். வாழ்வு வரண்ட பாலைவனமாகத் தான் இருக்க முடியும்.

அம்மா! என்ற சொல்லே இனிக்கும் சொல். குழந்தை முதலில் தாயைத்தான் தெரிந்துகொள்ளுகிறது. அவள் காட்டிய பிறகே தந்தையைத் தெரிந்துகொள்ளும். நம் நாடு தாய்நாடு. மொழியைத் தமிழன்னை என்கிறோம். பார்க்குமிட மெங்கும் நிறைந்து


பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி" REGD

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயநகரம் மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும் போலிகளைக்கண்டு ஏமாறாதீர்.

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

19, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன: 85254.

கும்பகோணம் கிளை 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி



போலீஸ்காரர்:—என்னங்க நீங்க என்னைப் பார்த்தா இப்பல்லாம் நீங்க மதிச்சு பேச மாட்டேங்கறீங்க...

மற்றவர்:—நான் உங்களைப்பார்த்து மதிச்சு பேசிக்கிட்டு நின்னுக்கிட்டிருந்தா.. மத்தவங்க என்னை வேற விதமா மதிச்சிடுவாங்களே!!

நிற்பது தாயின் அன்பு. நான் பெறும் பேறுகள் கிட்டாமற் போனாலும் போகட்டும். என் குழந்தை நல்வாழ்வு ஒன்றே எனக்குப் போதும். அதுவே பேரானந்தம். என்ற சொல் ஒரு தாயின் நெஞ்சிலிருந்துதான் எழமுடியும். அவள் புனித இதயம் வற்றாத நீரூற்று. கருணை வெள்ளமாகப் பெருக்கெடுக்கும் நீரூற்று.

பரிசுத்தமானது. சாந்தமானது தாய்க்குக் குழந்தையின் மேலுள்ள காதல். காதலர் காதலை அலைபட்ட கடல் என்றால் தாயின் காதலை அலையில்லாத மகாசமுத்திரம் எனலாம். அலையில்லை என்றாலும் ஆழத்துக்குக் குறைவேது? காதலர் காதல் சண்டமாருதம். பேரன்பு, வாத்ஸல்யம் என்றெல்லாம் அழைக்கப்படும் தாயின் காதலோ, தென்றலைப் போல, சந்திரிகையைப்போல இயற்கையின் பல மகத்தான சக்திகளைப்போல் ஆரவாரமில்லாமல் அடக்கமாய் பணி செய்கிறது — — — என்றெல்லாம் பேசிக்கொண்டே போனார் சொற்பொழிவாளர்.

அவனது அகக்கண்களின் முன்பு காமாட்சியின் மகளின் கருணை வடிவம் தோன்றியது. ஐயோ பாவம்! நமக்காக அங்கே எப்படி ஏங்கித் துடித்துக்கொண்டிருக்கிறாளோ என்று எண்ண அவன் கண்களிலே நீர் மல்கி நின்றது.

மல்லிகையின் மணமும், சிலுக் சிலுக் என்ற மெட்டியின் ஓசையும் அவளது வருகையை அறிவித்தன. தன் மனநிலையை அவள் அறிய விரும்பாதவனாய் தலையைக் குனிந்துகொண்டான் அவன்.

அவன் மடிமீது அன்றைய தினசரி வீழ்ந்தது. "என்ன! அதிலே மூன்றாவது காலத்திலே வந்திருக்கும் செய்தியைப் பார்த்தீர்களா?

இரண்டு மூன்று நாட்களாய் இதே வாசகம்தான் வந்தது. நீங்கள் பார்த்திருப்பீர்கள் என்று நினைத்தேன்" என்று மிகவும் பணிவுடன் கூடிய குரலிற் கூறினாள் இந்திரா.

"என்ன வென்று திடுக்கிட்டவனாய் தினசரியைக் கையிலெடுத்தான் அந்த ஒரு நொடிக்குள் நூறாயிரம் எண்ணங்கள் அவன் மனத்தே எழுந்தன. அவளது மலர்க் கரம் அந்தப் பகுதியைச் சுட்டிற்று.

"செல்லமணீ! தண்ணீர் அடித்துத் தண்ணீர் விலகுவதில்லை. அப்பாவின் மனநிலை நன்றாயில்லை. எங்கேயிருந்தாலும் சரி. உடனே இருவரும் வந்து அவரைப் பாருங்கள். தாயடித்துப் பிள்ளை முடமானதுண்டா? உனக்கேன் இத்தனை கல்நெஞ்சு. சீக்கிரம் வந்துசேர். உன் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கும் அம்மா.

"இது அம்மாவேதான்."

"சரி, இதை ஏன் நீ முன்னமே சொல்லவில்லை. பார்த்து சந்தேகமாய்த் தோன்றியதும் சொல்வதற்கென்ன?

"உங்களுடைய செல்வப் பெயர் எனக்கு எப்படித் தெரியும்? ஏதோ உள்ளுணர்வு சந்தேகமாய் தோன்றச் செய்தது."


"இப்பொழுது என்ன மணி."

"ஒன்பது ஐந்து."

"அடுத்த வண்டி எப்பொழுது சென்னைக்கு."

"மதுரை பார்சல் பத்து முப்பத்தைந்துக்கு."

"சரி கிளம்பு. புறப்படுவோம்."





சர் ஜீவன் சிலாஜித் லேகியம்

எல்லா காலங்களிலும் பலத்தை அளிக்கிறது

தேக புஷ்டியும், ரத்த விருத்தியும் ஏற்படுவதுடன் வயிற்றுவலி பசி தன்மை வெகு மூத்திரம் வாய்வு மூலம் முதலிய சகல ரோகங்களும் தீரும் ஞாபக சக்தி வயோதிகர்கள் பலம் பெறுவார்கள். ஸ்திரீகளுக்கு ஏற்படும் சகல ரோகங்களும் தீரும். குழந்தைகள் ஆரோக்கியமடைவார்கள்

விலை:—44 நாட்கள் டப்பி ரு. 5—4—0 } தபால்
22 „ „ ரு. 3—4—0 } செலவு இனும்

நீலகிரி டிப்போ, அரிசிபேட்டை சவுக், பெங்களூர் சிடி

NILGIRI DEPOT, AKKIPET SQ. BANGALORE CITY.

சுத்தமான நீலகிரி தைலம் கிடைக்கும்.




# நல்ல பாம்பு :: சி. ஆர். ராஜம்மா

அன்று வெள்ளிக்கிழமை. எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து நிறைகுடத்துடன் உள்ளே வந்த நாகம், சமையலறைக்குப் போய் இடுப்பிலிருந்த குடத்தைக் கீழே இறக்கி வைத்தாள். குனிந்த தலையை நிமிர்த்தியபோது சன்னல் வழியாகக் கொல்லைப் பக்கமிருந்த பாம்புப் புற்று அவள் கண்களுக்குத் தென்பட்டது. நீண்ட பெருமூச்சொன்று விட்ட அவள் திரும்பவும் கூடத்திற்கு வந்து உலர்ந்த புடவையை உடுத்திக் கொள்வதில் முனைந்தாள். சமையலறையில் வேலையாக இருந்த நாகத்தின் தாயாருக்கு மகளின் செய்கை ஆச்சரியத்தை உண்டாக்கியது. "புற்றுக்குப் பால் வார்க்கவில்லையா நாகம்" என்றாள் அவள் குரலில் சற்று படபடப்புடன். "இல்லையம்மா. இவ்வளவு நாட்களும் செய்து என்ன பலனைக் கண்டேன்" என்று அசுவாரஸ்யமாகப் பதிலளித்த நாகம் தலையைக் கோதியபடியே ஊஞ்சலில் போய் உட்கார்ந்தாள். தாயார் ஒன்றும் பேசவில்லை. மகளின் மனமாறுதலுக்குக் காரணம் அவளுக்குத் தெரியாததா என்ன?

அந்தக் குடும்பத்தில் பல தலைமுறைகளுக்கு முன் யாரோ ஏற்படுத்திவிட்டுப் போன பழக்கமது. வெள்ளிக்கிழமையன்று பக்தி சிரத்தையோடு குளித்துவிட்டு ஈரப் புடவையுடன் பாம்புப் புற்றுக்கு பால் வார்க்க வேண்டுமென்பது. அதுமட்டுமல்ல, முதல் குழந்தை ஆணாகப் பிறந்தால் நாகராஜன் என்று பெயரிட வேண்டுமென்றும் பெண்ணாகப் பிறந்தால் நாகலக்ஷ்மி எனவும் பெயரிட வேண்டுமென்று வழக்கமாக ஆகியிருந்தது. நாகத்தின் தாயார் கல்யாணமாகி புக்ககம் வந்தது முதல் புற்றுக்குப் பால் வார்க்கும் பணியை தன் மருமகளிடம் ஒப்படைத்து விட்டாள் நாகராஜனின் தாயார். நாகத்தின் தாயார் எத்தனையோ பக்தி சிரத்தையாக அந்தப் பணியைச் செய்துவந்திருக்கிறாள். கல்யாணமான பின் பத்து வருஷ காலம் குழந்தையே பிறக்காமலிருந்தபோதுகூட அவள் மனம் சலிப்படைந்ததில்லை. அப்புறம்தான் நாகம் வந்து பிறந்தாள். குடும்ப வழக்கப்படி அவளுக்குப் பெயரிட்டு சீராட்டி வளர்த்தார்கள்.

மலையாள நாட்டில் பாம்புகள் அதிகம். ஆனால் பாம்பு கடித்து இறப்பதென்பது ரொம்பவும் அபூர்வம். முல்லைக்காடு ஒரு சிறு கிராமம். அங்குள்ளவர்கள் நல்ல பாம்பை தெய்வத்துக்குச் சமமாகக் கொண்டாடுவார்கள். பாம்புப் புற்றுகள் ஏராளம். பெரும்பாலான புற்றுகளில் பாம்பு உண்டு. நல்லபாம்பல்லாத மற்ற பாம்புகளைக் கண்ட இடத்திலேயே கொன்று விடுவார்கள். சிலசமயம் நல்லபாம்புக்கும் இந்த கதி ஏற்படும்.

நாகத்தின் தகப்பனார் நாகராஜனுக்கு முல்லைக் காட்டில் நல்ல செல்வாக்கு உண்டு. மூன்று மைல் தூரமுள்ள பள்ளிக்கூடத்திற்குத் தன் பெண்ணை வண்டியில் தினமும் அனுப்பி வந்தார். தன்னுடைய ஒரே வாரிசான அவள் நன்றாகப் படிக்கவேண்டும் என்பதே அவர் எண்ணம். அதனாலேயே மூன்று மைலுக்கப்பாலுள்ள ஹைஸ்கூலுக்கு பெண்ணை அனுப்பிவைத்தார். நாகத்தின் தாயாரும் முல்லைக்காட்டிலுள்ள சில பழைய கால பழக்க வழக்கங்களைப் பின்பற்றிவருபவர்களும் இதற்கு எத்தனையோ விதமான தடைகளைச் சொன்னார்கள். நாகராஜன் கேட்கவில்லை.

நாகம் நன்றாகப் படித்தாள். பாஸானாள். கல்யாணத்திற்காக வரன்கள் பார்த்துவந்தார் நாகராஜன். ஸ்கூல் படிப்பை முடித்துவிட்டு வீட்டிலிருந்த அவள் ஓழிந்த நேரங்களிலும் பலவிதமான புத்தகங்களைத்தான் படித்துக் கொண்டிருப்பாள். அவளையொத்த மற்ற பெண்களுக்கு பழைய பழக்க வழக்கங்களில் நம்பிக்கை குறைந்து வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் நாகம் அப்படிப்பட்டவளல்ல. பழைய வழக்கங்களை நையாண்டி செய்யும் அநேகம் புத்தகங்களை அவள் படித்திருக்கிறாள். பள்ளிக்கூடம் படிக்கும் நாட்களில் தன் தோழிகளுடன் அதைப்பற்றிப் பேசியிருக்கிறாள். காரியாம்சத்தில் அவள் அப்படி நடக்கவில்லை. தனக்கு நினைவு தெரிந்த நாள்முதலாக ஒரு வெள்ளிக்கிழமைகூடத் தவறாமல் புற்றுக்கு பக்தியோடு பால் வார்த்திருக்கிறாள். சந்திகால வேளையில் குத்துவிளக்கேற்றி வைத்து நமஸ்காரம் செய்வாள். கொல்லையில் கொள்ளை கொள்ளையாகப் பூக்கும் முல்லைக்கொடியிலிருந்து பூக்கொணர்ந்து பெரிதாக இருக்கும் ஸ்ரீராமர் படத்திற்கு மாலை கட்டிச் சாத்துவாள். இப்படிப்பட்ட ஒவ்வொரு வேளைகளிலும் அவள் மனதில் தோன்றுவது இதுதான்: "எல்லாவற்றிலும் சிறந்து எல்லோராலும் போற்றப்பட்டு என்னை அன்பாக நடத்தும் கணவனை எனக்குத் தா" என்பதுதான் அவள் பிரார்த்தனையாக இருக்கும்.

தன் மகளுக்கு சின்ன வயதிலிருந்தே இந்த உபதேச மந்திரத்தைத்தான் சொல்லிக்கொடுத்திருந்தாள் நாகத்தின் தாய். வெட்கம் தெரியாத காலத்தில் வாய்விட்டு இதைச் சொல்லுவாள் நாகம். காலம் அவளைப் பெரிய பெண்ணாக ஆக்கவே மானஸீகமாகப் பிரார்த்தனை செய்வாள். நாகராஜனுக்குத் தன் பெண்ணை பட்டணவாசத்திலுள்ள ஒரு யுவனுக்குக் கொடுக்கத்தான் ஆசை. கிராமாந்திர வாசத்தை விட பட்டணவாசத்தில் சின்ன வயதிலிருந்தே அவருக்கு மோகமதிகம். ஆனால் அந்த ஆசையை அவரால் ஈடேற்ற முடியவில்லை. தன் மகளாவது

அப்படி இருக்கட்டுமே என்று தான் அவர் முயன்று படித்து பட்டணத்தில் வேலை உள்ள பையனைப் பார்த்துவந்தார்.

பதினேழு வயதுவரை நாகத்திற்குக் கல்யாணமாகவில்லை. படிப்பிலோ, அழகிலோ, அந்தஸ்திலோ, எதிலுமே அவளுக்குக் குறைவில்லை. அப்படி இருந்தும் சீக்கிரமாகத் தான் நினைத்தபடி கல்யாணம் நடக்கவில்லையே என்று குறைப்பட்டுக்கொண்டார் நாகராஜன். நாகத்தின் தாயாரோ மனமுருகிப்போனாள். பெற்றோரின் மனதைத் தெரிந்து கொண்ட நாகத்திற்கும் சங்கடமாகத்தான் இருந்தது. ஆனாலும் என்ன செய்வது?


கல்கத்தாவில் கம்பெனி ஒன்றில் வேலையாக இருந்தான் ராஜகோபாலன். கல்யாணத் தரகர் ஒருவருடைய உதவியின்பேரில் இந்த வரனைப்பற்றித் தெரிந்து கொண்டார் நாகராஜன். இருவருக்குள்ளும் கடிதப்போக்குவரத்துகள் நடந்தன. போட்டோக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. ராஜகோபாலன் நன்றாகப் படித்திருந்தான். நல்ல உத்தியோகத்திலிருந்தான். நாகரீகமாக இருந்தான். கொஞ்சம் வயது அதிகம் என்பதைத் தவிர நாகராஜன் நினைத்த அம்சங்கள் சகலமும் இருந்தன ராஜகோபாலனுக்கு. எல்லாம் ஒரு மிக்கக்கிடைத்துவிடுமா என்ன?— என்று தன்னையே சமாதானம் செய்துகொண்டார் அவர்.

ராஜகோபாலனும், அவனுடைய பெற்றோர்களுமாகப் புறப்பட்டு முல்லைக்காட்டுக்கு வருவதாக இருந்தது. பெண்ணையும் நேரில் பார்த்துக் கல்யாணமும் நிச்சயம் செய்துவிடலாமென்று இருதரத்தாரும் கடித மூலம் பேசிக்கொண்டார்கள். அதன்படி ராஜகோபாலன் ஹாட்டும், சூட்டுமாக வந்திறங்கினான். மறைவிலிருந்து அவனைப் பார்த்த நாகம் மனமகிழ்ந்துபோனாள் இவ்வளவு நாட்களும் தான் செய்த பிரார்த்தனை வீணல்ல என்று எண்ணினாள். ராஜகோபாலனும் நாகத்தைப் பார்த்தவுடன் அதே நிலையைத்தானடைந்தான் ஆனால் அவளுடைய பெயர் கர்நாடகமாக இருக்கிறது என்பது அவனுக்கு முதல் குறையாகப் பட்டது. இரண்டாவது குறை அவள் எல்லோருடனும் உட்கார்ந்து சரிசமமாகப் பேசிப் பழகவில்லை என்பது. இதையெல்லாம் எப்படியாவது சரிசெய்து கொள்ளலாம் என்று எண்ணினான் ராஜகோபாலன்.

கூடத்தில் பட்டுப்பாய் விரிக்கப்பட்டது. ஊரிலுள்ள பெரியவர்கள் சுமார் பத்துப் பேர் வந்து உட்கார்ந்து கொண்டார்கள். பெரிய தாம்பாளத்தில் வெற்றிலை பாக்கு, மஞ்சள், புஷ்பம், சந்தனப் பேலா, குங்குமச்சிமிழ் எல்லாம் வைக்கப்பட்டிருந்தன. அன்றைய தினத்திலிருந்து சுமார் பதினைந்து தினங்களுக்கப்பால் கல்யாணத்திற்கு முகூர்த்தம் இருப்பதாகவும், அன்று கல்யாணத்தை நடத்திவிடவேண்டுமென்றும் பெரியோர்கள் நிச்சயிக்கும் சமயம் யாரும் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது. எல்லோரும் பதட்டத்தோடு எழுந்து நின்றார்கள். ஒரு நல்லபாம்பு வெற்றிலை பாக்கு வைத்திருந்த தட்டினருகில் நெளிந்து வந்து தன் சின்னம் சிறிய படத்தை விரித்து சுற்றிலும் ஒரே நோட்டம் விட்டது. பிறகு குறிப்பாக ராஜகோபாலனைப் பார்த்து மெள்ள நெளிந்து செல்ல ஆரம்பித்தது. ஒரு துள்ளுத் துள்ளி நான் ராஜகோபாலன்."ஐயையோ பாம்பு, பாம்பு. கொல்லு. கொல்லு" என்று கத்தினான். தான் தான் உட்கார்ந்திருந்த மணையை எடுத்து அதன்மேல் போடுவதற்காக ஓங்கின அவன் கைகளை வேறு இரு கைகள் பலமாகப் பிடித்து நிறுத்தின. அவன் கைகளைப் பிடித்து நிறுத்தின நாகராஜன், "பொறுத்துக்கொள். பாம்பு உன்னை ஒன்றும் செய்து விடாது. என் குலதெய்வமது. என் மனம் கஷ்டப்படும்படியாக ஒருநாளும் நடந்துகொள்ளாது அது" என்றார் சாவதானமாக. கூடத்திலிருந்த சில பெரியவர்களும் நாகராஜன் பேச்சுக்கு ஆதரவு கொடுத்துப் பேசினார்கள்.

கையிலிருந்த பலகையை வீசி எறிந்தான் ராஜகோபாலன். பாம்பின்மேலல்ல, கீழே தரையில் தான். "சீ, இப்படிப்பட்ட அநாகரீகம் உள்ள இடத்திலா பெண்ணெடுக்க வந்தேன்? விஷப் பாம்புக்கு ஆதரவு காட்டும் இவர்கள், என்னதான் செய்ய மாட்டார்கள்" என்று சொல்லிக் கொண்டே புறப்பட்டுவிட்டான். பெற்றோர்களும் கூடவே கிளம்பி விட்டார்கள். நாகராஜன் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தார். ஒன்றும் பலிக்கவில்லை. ராஜகோபாலன் பெற்றோர்களுடன் போய்விட்டான். போகும் போது எவ்வளவு தூஷணை சொல்ல முடியுமோ அவ்வளவு தூரம் தூஷணையாகப் பேசி விட்டுப் போனான்.


"அம்மா, அப்பா பாம்பு கடித்தவர்களுக்கெல்லாம் விஷமிறக்கும் வித்தையைக் கற்றுக்கொண்டிருக்கிறார். ஆனால் இப்பொழுது ஏற்பட்ட இந்த விஷம் போலான சம்பவத்தை அவரால் மாற்றவே முடியாதா அம்மா" என்று சொன்ன நாகம் தாயின் மடியில் படுத்துக் கொண்டு விக்கி விக்கி அழுதாள். பாம்புக்குப் பால் வார்ப்பது போல என்று சொல்வார்களே! அது எவ்வளவு உண்மை. சத்தியத்துக்குக் கட்டுப்பட்டது போல இவ்வளவு நாட்களும் உள்ளே வராத பாம்பு அன்றைக்குத்தான் வர வேண்டுமா? கூடத்தில் மின்னல் போல நிமிஷ காலம் தோன்றிய பாம்பு எங்கே போயிற்று? எல்லாம் அவளுக்கு ஒரே புதிராக இருந்தது. ஒரு கோடாலியை எடுத்துக் கொண்டு போய் கொல்லைப் பக்கமிருந்த பாம்புப் புற்றைத் தரை மட்டமாக ஆக்கிவிட வேண்டும் போன்ற ஆத்திரம் எழுந்தது அவளுக்கு. கோவில், குளம், ஆற்றங்கரை, வீட்டுத் திண்ணை இப்படியாக கிராமத்து ஜனங்கள் இதைப் பற்றியே பேசினார்கள்.



ஆரூடம்! ஜாதக பலன்!!
ஜனன கால விவரம் அல்லது முழுப் பெயர். சுமார் வயது. செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் தேவை 1 முதல் 5 எதிர்காலக் கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ. 2
ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் ரூபா 6 முக்ய யோகாம்சங்களும் சுருக்கமான பலனுடன் ஒரு ஜாதக குறிப்புக்கு ரூ 5. ஒரு தசைக்கு புக்திவாரி பலன் எழுத ரூ. 10 கிரஹசார தோஷம் நீங்கி, சகல தன்மைகளும் உண்டாவதற்கு "விஜய ரக்ஷணி கவசம்" 1-க்கு ரூ 7-0-0 பிரத்யேக ரக்ஷை ரூ 100. வி பி செலவு தனி
வி கே கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist,
Triplicane · Madras 5.


இந்தச் சம்பவம் நடந்து பத்து நாட்கள் இருக்கும். கல்யாணம் நிச்சயமாகி இருந்தால் வீடு திமிலோகப்பட்டுக் கொண்டிருக்கும். ஆனால் இன்றோ எல்லார் முகத்திலும் கவலைக் குறி. ஒருவரோடு ஒருவர் வாய் திறந்து அதிகமாகப் பேசவில்லை.

அன்றிரவு மழை பெய்துகொண்டிருந்தது. இடியோசை காதைத் துளைத்தது. ஊராரின் பேச்சுகளுக்கு இடமான தன்னை நொந்து கொண்டே படுத்திருந்தாள் நாகம். நாகராஜன், மனைவியோடு ஏதோ வருத்தம் தோய்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்தார். வாசற் கதவு படபடவென்று தட்டப்படும் ஓசை கேட்டது. நாகராஜன் அரிக்கன் லாம்பைக் கையிலெடுத்துக் கொண்டு போய் கதவைத் திறந்தார். வாசலில் ஒரு இரட்டை மாட்டு வண்டி நின்று கொண்டிருந்தது. ஒரு கிழவரும், யுவதியும் கதவருகில் நின்று கொண்டிருந்தார்கள். "நீங்கள் தானே நாகராஜன் என்பவர்..." பதட்டத்தோடு கேட்டார் கிழவர். "ஆமாம்" என்று அவர் சொல்வதற்குள் "என் பிள்ளையைப் பாம்பு தீண்டிவிட்டது. நீங்கள் விஷம் இறக்குவீர்கள் என்று கேள்விப்பட்டேன். வண்டியில் போட்டுக் கொண்டு வந்திருக்கிறேன்" என்றார் அவர். நாகராஜன் மேலும் பேசிக் கொண்டிருக்கவில்லை. வண்டியிலிருந்து கூடத்திற்குக் கொண்டு வந்து கிடத்திய அந்த இளைஞனுக்கு தன்னால் ஆனதைச் செய்தார். கைவசமுள்ள பச்சை இலையை வெகு சிரமப்பட்டு உள்ளே செலுத்தினார். மகளும், தாயாரும், கூட இருந்து வேண்டியது செய்து உதவினார்கள்.

ராமகிருஷ்ணன் மயக்கம் நீங்கிக் கண் விழிக்கும் போது மழை விட்டு வானம் வெறிச்சென்றிருந்தது. பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. பாம்பு தன்னைக் கடிக்கவில்லை என்றும், தான் அது தன்னைக் கடித்துவிடுமோ என்று பதறிக் கூச்சல் போடவே அது படமெடுத்துச் சீறியது என்றும், பயத்தில்தான் உடனேயே மயக்கமடைந்திருக்க வேண்டுமென்றும் கூறினான். பாம்பு கடிக்கவில்லை, அதன் விஷக் காற்று தான் மேலே பட்டிருக்கிறது என்றும் முதலிலேயே கூறியிருந்தார்



நாகராஜன். அவர்கள் பக்கத்துக் கிராமத்துக்காரர்கள். இந்தக் கொட்டும் மழையில் வயதாகி விட்ட அப்பாவை மட்டுமாக வண்டியில் அனுப்ப எனக்கு மனம் வரவில்லை. அதனால்தான் நானும் கூடவே வந்தேன்" என்று கூறிய அந்த யுவதி தான் ராமகிருஷ்ணனின் சகோதரி என்பதைத் தெரிவித்துக் கொண்டாள். விஷமிறக்க வந்தவர்கள் தாங்கள் வந்த காரியம் முடிந்தவுடன் போய்விடவில்லை. என்னவெல்லாமோ பேசி விஷயத்திற்கு வந்தார்கள்.

ராமகிருஷ்ணனுக்கு வயது இருபத்தைந்துக்கு மேலிருக்காது. வயதிற்குத் தகுந்த வளர்த்தி. மனதைக் கவரும் உருவம். காலேஜ் படிப்பை முடித்துக் கொண்டு கிராமத்திலேயே தன் நிலங்களை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தான். மற்ற விஷயங்கள் யாவும் வெகு ஜரூராக நடந்தது. ராஜகோபாலனுக்கும், நாகத்திற்குமாக கல்யாணம் நிச்சயிக்கப்பட்ட அதே முகூர்த்தத்தில் ராமகிருஷ்ணன் நாகத்தின் கழுத்தில் மூன்று முடிச்சைப் போட்டுத் தன்னுடைய மனைவியாக அவளை ஆக்கிக் கொண்டான்.

கணவன் வீட்டிற்குப் புறப்படுவதற்காகத் தன்னை ஆயத்தம் செய்து கொண்டாள் நாகம். பெட்டியிலிருந்த சாமான்களை எல்லாம் எடுத்துக் கீழே வைத்துவிட்டு பெட்டியை ஒழுங்குபடுத்த முனைந்த போது ராஜகோபாலனின் போட்டோ கண்ணில் தட்டுப்பட்டது. வெறுப்போடு அதை எடுத்துக் கீழே போட்டாளவள். பக்கத்திலேயே இருந்த ராமகிருஷ்ணனின் சகோதரி ஜெயம் சட்டென அந்தப் படத்தை எடுத்துப் பார்த்தவள் திடுக்கிட்டாள். "இந்தப் போட்டோ உங்களுக்கேது?" என்றாள் பதட்டத்தோடு. தற்செயலாக அங்கே வந்த நாகத்தின் தாயார் "உனக்கு இவரைத் தெரியுமா ஜெயம்?" என்று கேட்டாள். ஜெயத்தின் கண்களிலிருந்து கண்ணீர் பொலபொலவென்று உதிர்ந்தது. "என்றாவது உங்களுக்கெல்லாம் இந்த விஷயம் தெரியத்தான் போகிறது. அது இன்றே தெரிந்துவிடட்டுமே. மறைப்பதில் என்ன பலன்?" என்று சொன்ன ஜெயம் விம்மல்களுக்கு இடையே கூறியது இது தான்.


ராஜகோபாலன் ஜெயத்தைக் கல்யாணம் செய்து கொண்டு சில வருஷங்கள் ஆகிறது. அவன் எப்பொழுதும் நாகரீகமாகவே உடை உடுத்தி வந்தவனாகையால் கல்யாணத்தின் போது அவனைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை. கல்யாணமான பின் அவனுக்குத் தீராத நோயொன்று உடம்பில் இருப்பதைக் கண்டாள் ஜெயம். அதை மறைக்கவே சதா அவன் இம்மாதிரி உடைகளில் தோற்றமளிக்கிறான் என்பதையும் தெரிந்து கொண்டாள் அவள். நளாயனியைப் பற்றிக் கதை கேட்டிருந்த அவள் கணவனை வெறுக்கத் தயாராக இல்லை. ஆனால் ராஜகோபாலனின் உடல் மட்டும் கொடிய நோயால் பாதிக்கப்படவில்லை. உள்ளமும் கொடிய எண்ணங்களால் பாதிக்கப்பட்டிருந்தது. அவன் ஜெயத்தைப் படுத்திய பாடு கொஞ்ச நஞ்சமல்ல. அவனுடைய பெற்றோர்கள் அவனைவிட அவளுக்குத் துன்பத்தைக் கொடுத்தார்கள். ஜெயத்தின் பொறுமை எல்லை கடந்து போயிற்று. கடைசியில் தனக்குக் கணவனிடம் வாழ இஷ்டமில்லை என்றும், அவன் வேறு மணம் செய்து கொள்வதில் தனக்கு எவ்வித தப்பபிப்பிராயமும் இல்லை என்று புக்ககத்தாரின் கட்டாயத்தின் பேரில் எழுதிக் கொடுத்து விட்டுத் தப்பினோம் பிழைத்தோமென்று பிறந்தகம் வந்து சேர்ந்தாள் ஜெயம்.

ஜெயத்தின் வாயிலாக ராஜகோபாலனைப் பற்றிக் கேட்ட நாகம் நீண்ட பெருமூச்சொன்று விட்டாள். உடனேயே உள்ளே பரபரப்பாகச் சென்ற அவள் கறந்தபடியே உறியில் வைத்திருந்த பசும் பாலைக் கிண்ணத்தில் எடுத்துக் கொண்டு புற்று அருகில் சென்றாள். புற்றுக்குப் பால் வார்த்துவிட்டுத் திரும்பும் போது கை நிறைய முல்லை மொக்குடன் வந்தாள். ஸ்ரீராமர் படத்திற்கு ஹாரம் கட்டிப் போடுவதில் முனைந்திருந்த அவளைத் தந்தையின் பேச்சு ஆனந்த உலகிலிருந்து இவ்வுலகிற்கு இழுத்து வந்தது. "உன் மனம் மலர்ந்து அதில் இப்பொழுதுதான் மணம் கமழத் தொடங்கியதா நாகம்?" என்றார் அவர். "ஆமாம். அவள் வயிற்றில் இப்பொழுதுதான் பால் வார்த்தது போல் இருக்கிறது" என்று மகளிடம் கேட்ட கேள்விக்குத் தாய் பதில் சொன்னாள்.

ஏதோ ஒன்றில் நம்பிக்கை வைக்கிறோம். அந்த நம்பிக்கைக்குப் பங்கம் வரும்படியான ஒரு சம்பவம் நடந்தால், அந்த விஷயத்தை எண்ணி வருந்துகிறோம். இத்தனை நாட்களாக எத்தனை மூடத்தனமாக நம்பிக்கை வைத்து விட்டோம் என்று வருந்துகிறோம். ஆனால், அப்படிப்பட்ட ஒரு சம்பவம் பின்னால் வரப் போகும் ஒரு நல்ல காரியத்துக்காக ஏற்பட்டது என்று பின்னால்தான் தெரிகிறது. நம்பினோர் கெடுவதில்லை, இது நான்கு மறை தீர்ப்பு என்பது எத்தனை உண்மை? இம்மாதிரியான ஆராய்ச்சியில் சென்று கொண்டிருந்தது நாகத்தின் மனம்.






3

இரவு இரண்டு மணியிருக்கும். எங்கும் ஒரே நிசப்தம். எல்லாரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

"ஆ! துர்கா! ஐயோ! துர்கா! துர்க்கா! ... து .. ர்க் .. கா ... !!" என்ற பிரளயம் போன்ற கூக்குரலைக்கேட்டு எல்லாரும் விழித்துக் கொண்டார்கள். சப்தம் வந்த திசையை நோக்கி அலறியடித்துக்கொண்டு ஓடிவந்தார்கள்.

சப்தம் பாதாள பிலத்திலிருந்து வந்தது. அதுவும் மணியும் கண்ணனும் இருந்த அறையிலிருந்து.

கண்ணன்தான் கத்திக் கொண்டிருக்கிறான் "ஆ! ஊ! என்று தலையை ஆட்டிக் கொண்டு. ஆ! துர்கா! ஐயோ! துர்கா!" என்று.

"ஐயோ! கண்ணு! என்னடா செய்வேன்! சொல்லுடா சமாசாரத்தை! ஐயோ! இங்கே யாருமில்லையா? என்ன செய்வேன்?" என்று மணி புலம்பிக்கொண்டிருக்கையில் எல்லாரும் அங்கே வந்து சேர்ந்தார்கள்.

"என்ன இது! ஏன் இப்படிக் கத்துகிறான்?" என்று கேட்டார் பெரிய மந்திரவாதி.

"ஐயோ! கண்ணனுக்கு 'சாமி' (ஆவேசம்) வந்திருக்கிறது!" என்று பதறினான் மணி.

"சாமியா? என்னது?" என்றார் பெரிய மந்திரவாதி ஆச்சரியத்துடன்.

"சாமிதான்! அவனுக்கு இப்படி வருஷத்தில் ஒன்று அல்லது இரண்டு முறை 'சாமி' வந்துவிடும். என்ன தெய்வ குற்றமோ? என்னமோ தெரியவில்லையே!" என்று பிரலாபித்தான்.

கண்ணனும் சும்மா இல்லை. "ஆ! ஊ! துர்கா! துர்கா! பொறுக்கமுடியவில்லையே! முதுகு போய்விடுகிறதே! ஐயோ! துர்கா! துர்கா!" என்று முதுகில் கையை வைத்துக்கொண்டு அமர்க்களமாய்க் கூச்சல் போடுகிறான்.

"என்னவாம்? சாமி என்ன சொல்கிறது, கேளேன்" என்றார் பெரிய மந்திரவாதி மணியை நோக்கி.

"முதலில் எலுமிச்சம்பழமாவது, ஒரு டம்ளர் ஜலமாவது கொண்டு வாருங்களேன். உம்! சீக்கிரம் கொண்டு வாருங்களேன்! தாள மாட்டான் போலிருக்கிறதே! ஐயோ! நான் என்ன செய்வேன்!" என்று மணி பதறினான்.

அங்கிருந்தவர்களுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. இருவர் சிட்டாய்ப் பறந்து இரண்டு எலுமிச்சம் பழங்களைக் கொண்டுவந்தார்கள். மற்றொருவன் டம்ளரில் ஜலம் கொண்டுவந்தான்.

"உம்! சீக்கிரம் பழத்தை நறுக்கி ஜலத்தில் பிழியுங்கள்", என்றான் மணி.

அடுத்த செகண்டே ஒருவன் பழத்தை நறுக்கி ஜலத்தில் பிழிந்தான்.

மணி அதைக் கண்ணனின் முதுகில் ஊற்றித் தேய்த்தான்.

"துர்கா! முதலில் அவனைத் துரத்துங்களேன்", என்றான் கண்ணன்.

எவனைத் துரத்துவது? ஒன்றும் புரியாமல் நின்று கொண்டிருந்தார்கள் அங்கிருந்தவர்கள்.

"என்ன இப்படிப் பேசாமல் நின்று கொண்டிருக்கிறீர்களே? ஐயோ, வந்து விட்டானே! சீக்கிரம்! உம்! அதோ வந்துவிட்டானே பாவி!" என்று கையையும் காலையும் ஆட்டி ஆகாத்தியம் செய்து ஓர்




நிலையில் நிற்காமல் புழு வாய்த் துடித்தான் கண்ணன்.

“யார் வந்து விட்டது? என்ன சமாசாரம்? அவன் சொல்வது ஒன்றும் புரியவில்லையே!” என்று விழித்தார் பெரிய மந்திரிவாதி.

“ஐயோ! இந்த சமயத்தில் இப்படிக்கூடக் கதைக் கேட்டுக்கொண்டு காலதாமதம் செய்கிறீர்களே! ஆயிற்று. வந்துவிடப் போகிறான். ஐயய்யோ! எவ்வளவு பெரிய கயிறு! ஆயிற்று! வந்துவிட்டான். கைகளைக் கட்டிவிடப் போகிறான். நர பலியை உட்கொண்டு விடப்போகிறான்!” என்று சொல்லிவிட்டு, “ஐயோ! வந்துவிட்டானே! என் பக்தர்களாகிய உங்களுக்கு நான் சொல்வது காதில் விழவில்லையா? அவன் வந்து என் கையைக்கட்டிப்போட்டு விட்டு நர பலியை உட்கொண்டு விடுவது! ஐயோ! வெட்கம்! வெட்கம்!!” என்றான் கண்ணன் ஆவேச மிகுதியால்.

கண்ணன் பண்ணுகிற அமர்க்களம், ஆகாத்தியம், அந்தக் கட்டிடமே அதிர்ந்து விழுந்துவிடும் போலிருந்தது.

பெரிய மந்திரவாதிக்கோ அவரைச் சேர்ந்தவர்களுக்கோ இன்னதென்று புரிந்துகொள்ள முடியவில்லை.

“ஒன்றும் புரியவில்லையே! என்ன செய்யச் சொல்கிறான்? கேளேன்!” என்றார் மணியை நோக்கிப் பெரிய மந்திரவாதி.

“யார் நீங்கள்! முதலில் தயவுசெய்து அதை எங்களுக்குத் தெரிவிக்கக்கூடாதா?” என்றான் மணி, கண்ணனை நோக்கி.

“நானா தெரியவில்லை உங்களுக்கு? நான்தான் காளி! காலையில் நீங்கள் படைக்கவிருக்கும் நர பலியை உட்கொள்ள எனது துவேஷி, அதோ மரத்தில் ஒளிந்து கொண்டிருக்கிறான்” என்றான் கண்ணன்.

“காளியா! அம்மணீ! மன்னியுங்கள்! இனி ஒரு நிமிஷமும் தாமதிக்கமாட்டோம், என்ன செய்யவேண்டும்? சொல்லுங்கள். காத்துக் கொண்டிருக்கிறோம்” என்றார் பெரிய மந்திரிவாதி, காளி ஆவேசத்தில் இருக்கும் கண்ணனை விழுந்து நமஸ்கரித்துவிட்டு.

“அதோ தெருவில். அந்தப் பெரிய புளிய மரத்தில் அவன் ஒளிந்து கொண்டிருப்பது உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா? என்றான் கண்ணன்.

“அம்மணீ! வந்து காட்டுங்கள். இதோ ஒரே நொடியில் பிடித்துத் துவம்சம் செய்துவிடுகிறோம்” என்று சொல்லிவிட்டு, “ஏய், சீக்கிரம் உங்கள் ஆயுதங்களை எடுத்துக் கொள்ளுங்கள்” என்றார் பெரிய மந்திரிவாதி அங்கிருந்தவர்களை நோக்கி.

அவ்வளவுதான். அவர் சொல்லி வாய் மூடினாரோ இல்லையோ, கயிறு, கம்பு, தடி, கத்தி, ஈட்டி, சகிதம் எல்லாம் ஆயுத பாணிகளாய் வந்து நின்றார்கள்.

அப்பொழுது அவர்கள் இருந்த ‘கோலத்தைப்’ பார்த்தால் நிஜமாகவே காளியே பயந்து போயிருப்பாள். அவ்வளவு பயங்கரமாய் இருந்தார்கள். கன்னங்கரேலென்ற நிறமும், உருட்டிவிட்ட மாதிரி தடி தடியாய்க் கைகளும் கால்களும், முறுக்கி விடப்பட்ட மீசைகளும், எமதூதர்கள் மாதிரிதான் இருந்தார்கள்.



அப்பொழுது கண்ணன் குறிப்பிட்ட அந்தப் பேர்வழி மட்டும் அவர்கள் கையில் அகப்பட்டுவிட்டால் ... அவ்வளவுதான் அவனுடைய இந்த ஜன்மம் தீர்ந்துவிட்டதென்று நிச்சயமாக சொல்லிவிடலாம். பேய், பிசாசு, என்று என்னமோ, எங்கேயோ இருப்பதாகச் சொல்கிறார்களே, அந்தப் பேயும் பிசாசும் இப்பொழுது இவர்களைப் பார்த்துவிட்டால் வீறிட்டுக் கொண்டு ஓடிவிடாதுகளா? அவ்வளவு பயங்கரமாய் இருந்தார்கள்!

ஒருசெகண்டுகூட வீணாக்காமல் பாதாளபிலத்திலிருந்து எல்லாரும் திபுதிபுவென்று தெருப்பக்கம் ஓடிவந்து கண்ணன் குறிப்பிட்ட அந்தப் பெரிய புளியமரத்தின் அடியில் வந்து நின்றார்கள்.

“இந்த மரம்தானே?” என்றார் பெரிய மந்திரிவாதி.

“ஆமாம்! இதே மரம்தான்” என்று சொல்லிவிட்டு, “ஆ! அதோ! அதோ உட்கார்ந்து கொண்டிருக்கிறான்!” என்று கூச்சலிட்டான் மரத்தை நோக்கியவாறு.

“எங்கே? எங்கே?” என்று எல்லோரும் ஒரே காலத்தில் கேட்டுவிட்டு, மரத்தைப் பார்த்தார்கள்.

“அதோ உட்கார்ந்துகொண்டிருக்கிறானே. அந்தக் கிளையில்! எவ்வளவு பெரிய உருவம்! கையில் எவ்வளவு பெரிய கயிறு! தோளில் கோணிப்பை! கழுத்தில் இரும்பு வளையம்! இன்னுமா தெரியவில்லை உங்களுக்கு! ஐயோ! வாயைத் திறக்கிறானே! அம்மம்ம! எவ்வளவு பயங்கரமான பற்கள்!” என்று சொல்லிக்கொண்டே மரத்தின் ஓர் கிளையின் நுனியைக் காண்பித்தான் கண்ணன்.

கண்ணன் சொன்ன மாதிரியில் அவர்களுக்கும் கொஞ்சம் பயமாகத்தானிருந்தது. இருந்தாலும் பயத்தை வெளிக்குக் காட்டாமல் அவன்காட்டிய இடத்தைக் கூர்ந்து நோக்கினார்கள்.

அதே சமயத்தில் அந்தக் கிளையில் உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு பெரிய வௌவால் ‘சடபட’வென்று தனது இறகுகளை அடித்துக் கொண்டு மேலே கிளம்பியது. திடீரென்று இந்த சைகையைக் கேட்டு, பெரிய மந்திரவாதி உள்பட எல்லாரும்நடுநடுங்கி விட்டார்கள். கண்ணனே நடுங்கி விட்டான். மணி வீறிட்டு அலறினான். அவன் கைகால்களெல்லாம் வெடவெடவென்று நடுங்கியது.

இருந்தாலும் கண்ணன் கொஞ்சம் சமாளித்துக் கொண்டு. “பார்த்தீர்களா? இதோ இந்தக் கிளையிலிருந்து அதோ அந்தக் கிளைக்குத் தாண்டிவிட்டான். சீக்கிரம் ஏறுங்கள். அவனைப் பிடித்து குண்டு கட்டாய்க் கட்டிவாருங்கள்” என்றான்.

யார் ஏறுவது முதலில்? சற்று தயங்கினார்கள்.

“குண்டா! என்ன நின்று கொண்டிருக்கிறாய்?” என்றார் பெரிய மந்திரவாதி குண்டன் என்பவனை நோக்கி. என்ன பெயர் பொருத்தம்! குண்டன் என்றால் குண்டனே தான்.

இதற்கு மேலும் சும்மா இருந்தால் நன்றாக இருக்குமா?

ஏறினான் குண்டன் மரத்தின்மீது.




இவன் மரத்தின் மீது ஏறுவதைக்கண்ட மற்ளுெரு வௌவால் 'சடசட'வென்று இறக்கையை அடித்துக் கொண்டு கிளம்பியது.

"பார்த்தீர்களா? மற்ளுெரு கிளைக்குத் தாவுகிருன். இன்னுெருவரும் ஏற வேண்டும்" என்ருன் கண்ணன்.

அடுத்தபடியாகக் காடன் என்பவனை நோக்கினர் மந்திரவாதி.

குறிப்பையறிந்து காடனும் ஏறினன் மரத்தின்மீது.

இவர்கள் ஏறிவருவதைக் கண்ட மீதியிருந்த வௌவால்களும் 'சடபுட' வென்று இறக்கைகளை அடித்துக்கொண்டு கிளம்பிவிட்டன.

பார்த்தீர்களா? கிளைக்குக் கிளை தாவுகிருன் நீங்கள் வருவதைப் பார்த்துவிட்டு, சீக்கிரம்! சீக்கிரம்!" என்ருன் கண்ணன்.

"அப்படியானல் ஆளுக்கொரு கிளையாக ஏறுவோம்" என்ருர் மந்திரவாதி.

உடனே எல்லாரும் மரத்தின்மீது ஏறி, ஆளுக்கொரு கிளையாகத் தேடினர்கள்.

"அதோ! அதோ! ஆ! இதோ! இதோ!!" என்று கூச்சல் போட்டுக் கொண்டிருந்தான் கண்ணன் கீழிருந்தவாறே.

"என்னை ஏமாற்றிவிடலாம் என்ரு பார்த்தாய்? என்னுடைய பக்தர்களை என்னவென்று நினைத்தாய்? நல்லபடியாக இறங்கி வருகிருயா? அல்லது அடிபட்டுச் சாகப் போகிருயா?" என்றுமேலும் விடாது கத்திவிட்டு, "அதோ அந்தப் பெரிய கிளையின் நுனியில் இருக்கிருன்" என்ருன் கண்ணன்.

இதற்குள் "ஓ" என்று உளறிக்கொண்டான் காடன்.

"நான்தானடா! பயப்படாதே!" என்ருன் குண்டன்.

குண்டன் ஒரு கிளையிலிருந்து மற்ளுெரு கிளைக்குத் தாவி, இருளில் அங்கே உட்கார்ந்து, மற்ளுெரு கிளையை பார்த்துக்கொண்டிருந்த காடனை, காளி குறிப்பிட்ட அந்தப் பேர்வழி என்று எண்ணி, ஓசைப்படாமல் சென்று, கெட்டியாகப் பிடித்துக்கொண்டுவிட்டான். காளி குறிப்பிட்ட பேர் வழிதான் தன்னைப் பிடித்துக்கொண்டு விட்டானென்று உளறிக் கொண்டான் காடன். பிறகு இருவர் முகத்திலும் அசடு சொட்டி வழிந்தது.

இந்த உளறலைக் கேட்டு விட்டு எல்லாரும் அந்தக் கிளையை நோக்கி விரைந்தார்கள். விஷயம் தெரிந்த பிறகு 'நல்ல சூரப்புலிகளடா!' என்ருர் பெரிய மந்திரவாதி.

மரத்தில் துளி இடம் பாக்கி இல்லை. 'பொட்டாய்ப் பிசைந்துவிட்டார்கள்' அந்தப் பேர்வழியைக் காணவே காணேம்.

"எல்லா கிளைகளிலும் தேடியாகிவிட்டது. காணேமே" என்ருர் மந்திரவாதி.

கீழே கண்ணனிடமிருந்து பதிலை எதிர்பார்த்தார். ஆனல் பதில் கிடைக்கவில்லை.

"உங்களைத்தான் தாயே!" என்ருர் மீண்டும்.

இதற்கும் பதில் கிடைக்கவில்லை.

"என்ன! பேசாமலிருக்கிருய் தாயே! அவனை எங்களால் பிடிக்கமுடியவில்லையே என்ற கோபமா?" என்ருர்.

இதற்கும் பதில் இல்லை.

உடனே மந்திரவாதி கீழே இறங்கிவந்தார்.

சுற்றுமுற்றும் பார்த்தார். அவருக்குக் கபீரென்றது.

"அடடேய்! மோசம் போய் விட்டோம்!" என்று கத்தினர்.

(தொடரும்)




புலியை பிடிக்க 11-நபர்கள் ஒளிந்துகொண்டிருக்கிருர்கள். கண்டு பிடியுங்கள்.

# சாரணர் உலகம்: சித்தார்த்தன்

ஒரு எழுத்தாளனுக்கு வேண்டிய முக்கியமான கருவி பேனா. பேனாவில் பலவிதங்கள் உண்டு. எதுவாயிருந்தாலும் தேவலே. எழுதுவதற்கு பேனாதான் தேவை. நல்ல ஒரு பாடகனுக்கு வேண்டியது இன்னிசை கொடுக்கும் குரல். பிறர் அவன் பாட்டை கேட்டு ஆனந்திக்க ரம்யமான குரல் வேண்டும். இதேபோல் அடுக்கிக்கொண்டே போகலாம். பிரபல கிரிக்கெட் ஆட்டக்காரனுக்கு வேண்டியது ஒரு நல்ல கிரிக்கெட் பாட். தொழிலிற்குஏற்ற கருவி தேவை. அதேபோல்முதற்சிகிச்சையாளர்களுக்கும் சில கருவிகள் தேவை. இவையில்லாவிட்டால் முதற் சிகிச்சை செய்வது மிகவும் கடினமாகும். ஆதலால் பக்கத்தில்அகப்படும் வஸ்துக்களைக்கூட தங்கள் கருவிகளாக செய்து கொள்ள நேரும்.

முதற்சிகிச்சைக்காரனுக்குமிகவும் முக்கியமாக வேண்டியது பாண்டேஜ் அல்லது கட்டு. பாண்டேஜ் என்றால் என்ன? அது எதனால் செய்யப்பட்டது. காயத்திற்கு மேல் கட்டுப்போடும் எந்த வஸ்துவையும் பாண்டேஜ் எனக் கூறலாம். இது சாதாரணமாகத் துணியினால்தான் செய்யப்பட்டிருக்கும்.




இதற்கு முக்கோண கட்டு என பெயர். 38 அங்குலத்தில் சதுரமான துணியை எடுத்துக்கொள்

## முதற் சிகிச்சை


★

### சில முக்கிய கருவிகள்

—

ளுங்கள். பின் படத்தைப்பார்த்தால் நான்கு மூலைகளுக்கும் ஏ, பி, ஸி, டி என்று பெயரிட்டிருப்பது தெரியும்

ஏ, டி. அல்லது ஸிபி. பிடித்துக் கொண்டு பாதியாக மடித்து கத்தரித்து விடுங்கள். இப்பொழுது இரு முக்கோண வடிவமுள்ளகட்டுவரும். இது எவ்வாறு அமையும் என்பது படம் 2-ஐப் பார்த்தால் தெரியும்.




படம் 2-ல் ஏ என்று காட்டியிருக்கும் பாகத்திற்கு முனை (பாயிண்ட்) என்று பெயர். பி. ஸி என்று காட்டியிருக்கும் பாகங்களுக்கு ஓரங்கள் என்று பெயர்.

இதன் உபயோகம் என்ன? முதற் சிகிச்சையின் போது அதிக உபயோகம் உண்டு. அடிபட்டவுடன் இதைத்தான் முதலில் கொண்டுவரச் சொல்வார்கள். இதற்கு பலவித உபயோகங்கள் உண்டு. சாதாரணமாகக் கையில் அடிபட்டால் அதைத் தூக்கவொட்டாமல் கட்டுவார்கள். இவ்வாறு செய்வதற்கு ஸ்லிங் எனப்படும். ஸ்லிங் செய்வதற்கு முக்கோண கட்டு மிகவும் முக்கியம் இதைப்பற்றி அடுத்த கட்டுரையில் அதிகமாக விஸ்தரிக்கப்படும்.

மேலும் கட்டுகள் போடுவது இரத்த நஷ்டத்தைக் குறைக்கும். அடியினால் ஏற்பட்ட இரத்த நஷ்டத்தைநிறுத்தகட்டுகள்தான் உபயோகப்படுத்துவார்கள்.இதோடல்லாமல் கட்டுபோடுவது வீக்கத்தைக் குறைக்கும். மிக முக்கியமானது, வீக்கத்தைஅதிகரிக்காமல் தடுக்கும். .

உபயோகங்கள் இவ்வளவுதானா? இன்னும் இருக்கிறது. சில சமயங்களில் சிம்புகள் வைத்துக் கட்ட நேரும். இந்த சமயங்களில் சிம்புகள் அசங்காமல் இருக்க மிகவும் உபயோகப்படும். அடிபட்டவனை தூக்க கட்டு மிகவும் உபயோகப்படும்.

சிம்புகள்: இதற்கு ஆங்கிலத்தில் ஸ்பிளின்ட் என்று பெயர். இது அதிகமாக எலும்பு முறியும் போதுதான் உபயோகப்படும். இது எலும்பு அசையாமல் இருக்க மிகவும் உதவும். இதை எந்த சமயங்களில் எப்படி உபயோகிக்க வேண்டுமென்பது சந்தர்ப்பத்திற்கேற்றவாறு விஸ்தாரிக்கப்படும்.

மேலும் கத்திரிக்கோல், பஞ்சு, மருந்துகள் இவைகள் முதற்சிகிச்சையின்போது தேவையாக இருக்கும்.எப்பொழுதும்எந்தசமயத்திலும் இவைகள் நம்மிடத்தில் இருக்காது. ஆதலால்தான் கட்டும், சிம்பும் முதற்சிகிச்சையின்போது அதிகமாக உபயோகப்படும்.



தையல் கலை

## ட்ரஸ்ஸிங் கவுன்

★

(ஏ. சுகுமார் டி எம்.டி.சி.ஏ.லண்டன்)

### அரசாங்க பரீட்சை பாடம் 9.

அளவுகள்:- -மார்பு சுற்றளவில் 39 அங்குலம் இயற்கை இடுப்பு நீளம் 17 அங்குலம், தோள் பாதி அளவு 7¾ அங்குலம், முழு நீளம் 48 அங்குலம் ஸ்கேல் மார்பு சுற்றளவில் பாதி 19½ அங்குலம்.

பின்பாகம்

ஓ—1—2—4 டேபிள் ஓரம்.

1—லிருந்து ஓ—ஸ்கேலில் பாதி அளவுடன் ½ அங்குலம் அதிகம் (10¼',)

2—லிருந்து ஓ—இயற்கை இடுப்பு நீள அளவுடன் ¼ அங்குலம் அதிகம் (17¼)

3—லிருந்து 2—க்கு 9 அங்குலம்.

4—லிருந்து ஓ—முழு நீள அளவுடன் ¼ அங்குல அதிகம்.

5—லிருந்து 2—க்கு ½ அங்குலம் மார்க் வைத்து பின்பாகத் துணியை மடித்து ஓ—6—க்கு இணைக்கவும்.

7—லிருந்து ஓ—ஸ்கேலில் 8—ல் ஒரு பாகம் வைத்து 7, 1 2, 3, 4—ல் நேர் கோடு வரைக.

8—லிருந்து ஓ—ஸ்கேல் 6—ல் ஒரு பாகத்துடன் ¼ அங்குலம் அதிகம்.

9—லிருந்து 8—க்கு ¾ அங்குலம் வைத்து ஓ—9 ஐ படத்தில் காணும் விதம் பின் கழுத்து வளைவு வரைக.

10—லிருந்து எ—க்குள்ள நேர்கோடில் தோள் பாதி அளவுடன் ½ அங்குலம் அதிகம் (8¼')

11—7 நேர்கோடில் 10—11 செங்குத்துக் கோடு வரைக.

11—லிருந்து 12—க்கு ½ அங்குலம்

11—லிருந்து 12—க்கு ½ அங்குலம்.

12—லிருந்து 13—க்கு ½ அங்குலம் வைத்து 13—9—ஐ படத்தில் காணும் விதம் தோள் சாய்வு அமைக்கவும்.

14—லிருந்து 10—க்கு 2 அங்குலம்.

15—லிருந்து 14—க்கு 1¼ அங்குலம் வைத்து இ—லிருந்து 11—க்கு 3 அங்குலம் கீழ்பாகமாக அடையாளம் செய்து 13—லிருந்து 15—க்குபின் 'ஸை'படத்தில் காணும் விதம் ஷேப்பு செய்யவும்.

16—லிருந்து 5—க்கு ஸ்கேலில் 3—ல் ஒரு பாகத்துடன் 2 அங்குலம் அதிகம்.

17—லிருந்து எல்—க்கு 5—லிருந்து 16—க்குள்ள அளவுடன் ¾ அங்குலம் அதிகம் வைத்து 18, 17, 16 15—ஐ படத்தில் காணும்விதம் ஷேப்பு செய்யவும்.


முன்பாகம்

19—லிருந்து எ—க்கு மார்பு சுற்றளவில் பாதி அளவுடன் 3 அங்குலம் அதிகம் (22½')

20—லிருந்து 19—க்கு ஸ்கேலின் பாதி அளவில் 1 அங்குலம் குறைவு. (8½)

21—லிருந்து 20—க்கு ஸ்கேலில் 6—ல் ஒரு பாகத்துடன் 1 அங்குலம் அதிகம் (4¼') வைத்து 21, 22—ஐ செங்குத்துக் கோடால் இணை.

22—லிருந்து 21—க்கு ஸ்கேலின் பாதி அளவுடன் ½ அங்குலம் அதிகம் (10¼)




வைத்து 11, 22—ஐ சாய்வு கோடால் இணைக்கவும்.

23—லிருந்து 22—க்கு பின்பாக தோள் சாய்வு எண் 13—லிருந்து 9—க்குள்ள அளவில் ¼ அங்குலம் குறைவு.

24—லிருந்து 20—க்கு 1 அங்குலம் வைத்து 24, 23—ஐ இணை.

25—லிருந்து 23—க்கு ½ அங்குலம் வைத்து முன் பாக தோள் சாய்வு 23—லிருந்து22—க்கு படத்தில் காணும் விதம் ஷேப்பு செய்யவும் தொடர்ச்சியாக 25—லிருந்து 24—க்கு சாய்வுக் கோடின் ½ அங்குலம் உள்பாகமாக முன் ஸை வளைவு 15 வரை இணைக்கவும்.

26—லிருந்து 19—க்கு செங்குத்துக் கோடு.

27—லிருந்து 16—க்கு நேர்கோடு.

28 லிருந்து 16—க்கு ½ அங்குலம்.

29—லிருந்து 17—க்கு 2½ அங்குலம் வைத்து 15, 28, 29 எம். வரை படத்தில் காட்டியபடி முன் ஸைடு வளைவு அமைக்கவும்.

30—லிருந்து 27—க்கு 2½ அங்குலம்.

31—லிருந்து 26—க்கு 2½ அங்குலம்

32—லிருந்து 33—க்கு 3 அங்குலம்.

34—லிருந்து 19—க்கு 3 அங்குலம் வைத்து முன் பாகம் கழுத்து முதலியவைகளின் வளைவு படத்தில் காணும் விதம் அமைக்கவும். தையல் தைக்கும் போது எச் என்ற பாகத்து ½ அங்குலம் டார்டு பிடித்துத் தைக்கவும்.

(காலர் கை அடுத்த இதழில் வெளிவரும்.)

# ஹிந்தி உலகம்
# हिन्दी जगत

பண்டிதஜீ

"पंडितजी"

मद्रास शहर में गत सितंबर के दूसरे सप्ताह में संपन्न सांस्कृतिक स्वतंत्रता सम्मेलन के कुछ विवरण और उस सम्मेलन में राजाजी के उद्घाटन-भाषण के कुछ हिस्से पिछले दो अंकों में प्रकाशित कर चुके हैं। उस महत्व-पूर्ण उद्घाटन-भाषण के कुछ और हिस्से अब नीचे प्रकाशित किये जा रहे हैं। राजाजी ने कहा:—

## सांस्कृतिक स्वतंत्रता—३

☆

"ईश्वर इस विश्व में सर्वव्यापी है। जीवन में कर्म अनिवार्य है। हम जो भी करें, चाहे वह बड़ा काम हो या छोटा, उसे ईश्वरार्पित समझकर करें। कर्म के फल पर आसक्त होना एक बुराई है; अनासक्त भाव से जो कार्य किया जाता है, वही सबके लिए कल्याणकारी हो सकता है। इस सचराचर संसार में सर्वव्याप्त सनातन आत्मा की मान्यता पर आधारित आत्म-नियंत्रण के इसी भाव से हमारी भारतीय संस्कृति संबद्ध है।

"प्रकृति तथा परिस्थितियों पर मनुष्य कैसे विजय प्राप्त करे, इसी आधार पर आधुनिक युग में सभ्यता का विकास हुआ है। अपने इस लक्ष्य की साधना में सभ्यता मानव-सुख की प्रमुख आवश्यकता—आत्म-नियंत्रण—को भूल बैठी है। प्रकृति को नियंत्रित करना हमने बहुत कुछ सीखा है; लेकिन अपनेको नियंत्रित कर लेना नहीं सीखा है। प्रकृति और प्राकृतिक परिस्थितियों पर विजय प्राप्त करने की यह प्रवृत्ति आजकल बेहद बढ़ गयी है; और नर-नारियों पर मनोवैज्ञानिक अधिकार प्राप्त करने के भयंकर क्षेत्र में भी बढ़ रही। नाज़िज़्म और कम्यूनिज़्म इसीके दो रूप हुए।

"अगर सभ्यता से हमारा मतलब सुख हो, तो इस प्रवृत्ति को एकदम रोक देना चाहिए। राष्ट्र के नैतिक मूल्य कुछ इने-गिने नेताओं की अजीब मनोवैज्ञानिक प्रणाली के खिलौने नहीं बन सकते।

"किसी जनता से स्वीकृत आनंदमय आत्म-नियंत्रण का प्रचलित प्रकार ही मुख्यतया उस जनता की संस्कृति माना जाता है। अगर यह संस्कृति की सही व्याख्या हो, तो सांस्कृतिक स्वतंत्रता का यही अर्थ हो सकता — राज्य द्वारा आरोपित बाह्य नियंत्रणों की जगह सत्य-दर्शन की समुन्नत भावना से प्रेरित आत्म-नियंत्रण का विकास। सत्य आखिर नैतिक मूल्यों का ही एक दूसरा नाम। अन्य लक्ष्यों की सिद्धि के लिए सत्य का बलिदान नहीं होना चाहिए।

"इसीको हम सांस्कृतिक स्वतंत्रता कह सकते हैं। स्वेच्छाचार या आत्म-नियंत्रण के अभाव को स्वतंत्रता नहीं कह सकते। नैतिक मूल्यों द्वारा प्रयुक्त नियंत्रणों से कोई भी व्यक्ति मुक्त नहीं हो सकता।

"आत्म-नियंत्रणों के विकास के लिए दैवी नियम में अचल आस्था होनी चाहिए। इसके बिना आत्म-नियंत्रण का विकास असंभव है। दैवी नियम पर अवलंबित आत्म-नियंत्रण ही आनंददायक हो सकता है। भारतीय संस्कृति का यही सर्वोच्च संदेश है।



सर्वव्यापी எல்லாவற்றிலும் நிறைந்த
कर्म (ஆ. பா.) கருமம், தொழில்
निवारण (ஆ. பா.) தடுப்பு
निवार्य தடுக்கக்கூடிய
अनिवार्य தடுக்க முடியாத
ईश्वरार्पित கடவுளுக்கு அர்ப்பணமான
आसक्ति (பெ. பா.) பற்றுதல்
आसक्त பற்றுள்ள
अनासक्त பற்றற்ற
कल्याणकारी நன்மைபயக்கும்
सनातन அழியாத, நிலையான
मान्यता (பெ. பா.) அங்கீகாரம், மதிப்பு
सभ्यता (பெ. பா.) நாகரிகம்
प्रकृति (பெ. பா.) இயற்கை
परिस्थिति (பெ. பா.) சூழ்நிலை
हद (பெ. பா.) எல்லை
बेहद எல்லையற்ற
एकदम ஒரே மூச்சில், ஒரேயடியாக
नैतिक मूल्य (ஆ. பா.) தார்மிக மதிப்பு
इने-गिने ஒருசில
मनोवैज्ञानिक மனோதத்துவ
प्रणाली (பெ. பா.) முறை
खिलौना (ஆ. பா.) பொம்மை, விளையாட்டுப் பொருள்
मुख्यतया முக்கியமாக
व्याख्या (பெ. பா.) உரை, கருத்து
आरोपित திணிக்கப்பட்ட, சுமத்தப்பட்ட
बाह्य வெளி
समुन्नत மிகவும் உன்னதமான
प्रेरित தூண்டப்பட்ட
स्वेच्छाचार (ஆ. பா.) தான்தோன்றித்தனம்
अभाव (ஆ. பா.) இல்லாமை
प्रयुक्त பிரயோகிக்கப்பட்ட
मुक्ति (பெ. பா.) விடுதலை
मुक्त விடுபட்ட
अचल அசைவற்ற
आस्था (பெ. பா.) நம்பிக்கை
अवलंबित பற்றிய
आनंददायक ஆனந்தமளிக்கவல்ல

जय हिन्द ! जय हिन्दी !

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம்: 1909 டெலிபோன் நெ. 57

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம். ★ பிராஞ்சு: மன்னார்குடி

டிரேட் மார்க்

சந்தனாதி தைலம்
அரைக்கீரை
விதைத் தைலம்
கோகுல் கூந்தல்தைலம்
கூந்தலுக்கு வளர்ச்சியையும் குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது
"கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய்,
கோகுல் வாசனைப்பாக்கு
முதலிய
இதர வாசனை
சாமான்களும்
கிடைக்கும்.

★

மதராஸ் ஸோல் ஏஜெண்டுகள்:—
ஸ்வராஜ் ஏஜென்ஸீஸ்,
87 ஜானி ஜான்கான் ரோடு.
ராயப்பேட்டை, சென்னை-14.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246. Vysyal St.
COIMBATORE.

# விளம்பரப் பெண்

☆

சுகி

பத்திரிகையைக் கொடுங்கள் சார். பார்த்துவிட்டுத் தருகிறேன்." ரயில் பெட்டிக்குள் இருந்த என்னிடம் எதிர் பெஞ்சிலிருந்த வாலிபன் கேட்டதும் எனக்குக்கோபம் வந்தது. வாங்க சக்தியுள்ளவர்கள் இரவல் படிப்புப் படிப்பதால் நஷ்டம் எத்தனையோ பேருக்கு ஏற்படுகிறது. ஆகவே கொடுக்கத் தயக்கம் கொண்டாலும், வாலிபன் அருகாக இருந்த இளம் பெண்ணின் மனமும் என் கையிலுள்ள பத்திரிகையில் விழுந்திருக்கவே மறுத்தமனம் இளகிற்று.

"ஏன் ஏதாவது உத்தியோக விளம்பரம் பார்க்கவா?" என்றேன்.

"தேவன் – மணப்பெண் – மணமகன் – பகுதியைப் பார்க்க" என்றான் அந்த வாலிபன். அருகாக மனைவியை வைத்துக்கொண்டு இம்மாதிரி தமாஷ் செய்வதை நான் ரசித்தேன்.

"பத்திரிகை மூலம் கலியாணம் நடப்பதை எப்படிச் சகிக்கமுடியும். அதென்ன வியாபாரப் பொருளா? அர்த்தமற்றமுறை திருமணத்தை 'தேவை'க்குள் போடுவது?" என்று முகத்தைச் சுளித்தேன்.

நண்பர் சிரிக்க, அவரது அருகாக இருந்த இளம் பெண் எதிரொலியாக நகைத்தாள். புன்முறுவல் மாறி மாறி பரிமாறிக் கொண்டார்கள். விளம்பரம்; திருமணம் முடிக்கிறதை நான் கேள்விப்பட்டதுகூட இல்லை.

வாலிபன் சிரித்துக்கொண்டே சொல்ல ஆரம்பித்தான்.

## 1

திடீர் பணக்காரர் சோமசுந்தரனார் தம்முடைய நிலையை மறந்தார். அவருடைய பையனுக்கு விவாக வயது; தமது பையன் மனசுப்படியும் நடக்கவில்லை [illegible]ார். தமது பணத்தோடு தோள் தட்டக் கூடிய இடத்தில் பெண் பார்த்து முடிவு செய்யும் பணியில் இருந்தார்.

ஆனால் சோமசுந்தரனார் இன்று பணத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் பிரபுவாக இருக்கலாம்; ஐந்தாண்டுகளுக்கு முன்னால் வறுமை முதலையின் வாய் பிளப்பில் சிக்கித் தவித்து, தம்முடைய தங்கையையும், அவள் புருஷனையும் தமது சாப்பாட்டுக்கு எதிர்பார்த்தார். அவர்கள் பாடே கஷ்ட நிலைமை. கஷ்டத்தில் இருப்பவனுக்குப் பிறர் கஷ்ட நிலையைப்பற்றியெண்ண நேரமேது? கோபித்துக்கொண்டு சோமசுந்தரனார் வேற்றூர் போனார். அங்கே அவர் எதிர்பாராதவிதமாக யோகம் பணத்தில் புரட்டி எடுத்தது. புது வெள்ளம் போல, பணச் செழிப்பு கொப்பளித்துக்கொண்டு அவரைச் செல்வனாக்கி வைத்தது. தமையன் பணக்காரன் ஆனதும், அவனை அண்டிப் பிழைக்கவும் முக்கியமாகத் தங்கள் பெண் வசந்தாவைக் கட்டிக்கொடுக்கவும் வந்தார்கள்.

உடன்பிறந்த தங்கையைப் பார்த்து, "ஏதோ நீங்கள் வயிறார வருஷக்கணக்காக உண்ணலாம். உடன் பிறந்த தோஷத்திற்காகப் போடுகிறேன். என்னை விரட்டியடித்த காரணத்தை எண்ணியெண்ணிப் பார்த்து உங்கள் மனம் புழுங்க, பாலும் நெய்யுமாகப் போடுகிறேன்: சாப்பிடுங்கள். ஆனால், நமக்குள் கொள்ளினை–கொடுப்புவினைவே[illegible]ாம். என் மகன் தியாகுவிற்கு வேறு பெண் நிச்சயம் செய்து கொள்வேன்" என்று முகத்தில் அறைந்த மாதிரிச் சொல்லிவிட்டார்.

தங்கையின் குடும்பத்தார்மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ளவே, சோமசுந்தரனார் வேறு பெண் தேடிக் கொண்டிருந்தார்.

"பிச்சைக்காரனுக்குக் கொடுத்தாலும் கொடுப்பேன்" என்று மகள் வசந்தாவை கூட்டிக் கொண்டுபோய்விட்டாள் சோமசுந்தரனாரின் தங்கை.

போகும்போது மாடியில் நின்ற சோக சித்திரம் தியாகுவின் கண்களும், துடிக்கும் இளமான் வசந்தாவின் விழிகளும் சந்தித்துக்கொண்டன. அவர்கள் காதலர்கள். ஒருவரையொருவர் மணக்க ஆசை கொண்டது வீணாயிற்று.

பாவம் நெடுமூச்செறிந்ததோடு பிரிந்தார்கள்.

## 2

"என்ன சொல்லுகிறாய்?"

"அப்பா நீங்கள் சொல்வதே சரி" என்றான் தியாகு.

"அப்படியானால், மாயவரம் பெண்ணை நிச்சயம் செய்துவிடலாமா?"

"எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது."

"உன் வாழ்க்கை சந்தோஷமாக இருக்கவேண்டும் என்ன சொல்? யோசனை என்ன?"

தியாகு சொன்னான். "அப்பா என் கல்யாணத்தைப் புது விதமாக நடத்தியதாக இருக்கட்டுமே. நாமாகப் போய்ப் பார்ப்பது புதிய பந்துக்களைத் தேடிச் செல்வது, அவர்கள் நம்மைத் தேடி வருவது இதையெல்லாம் செய்கிறது உலக இயல்பு. அல்லது பெற்றோர் பெண் பார்த்துத் திருமணம் முடித்துவிடுவதும் சகஜம். வம்பே இல்லாமல் விளம்பரம் செய்கிறது யார் தகுதியுடைய பெண்ணோ, அவளைத் தேடி மணப்பது என்று ஓர் ஆசை எனக்கிருக்கிறது."

"பேஷாக இருக்கட்டும். அந்த ஆசையின் ஒரு பகுதியைச் சொல்லுகிறேன். நம்முடைய இனத்துப் பெண்ணாக இருக்கட்டும். இதையும்..."

"விளம்பரத்திற்கு வரும் பதில்களில் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு உங்களுடையது தானே. ஆகவே இனப்பொறுப்பு உங்களையே சேரட்டும்."

"ஆமாம். அப்படியே விளம்பரம் செய்துவிடு" என்றார் சோமசுந்தரனார்.

தகப்பனாரிடம் தியாகு விளம்பரம் செய்யச்சொன்னதிற்கு முக்கிய காரணம் ஒன்றுண்டு. தந்தைக்குத் தெரியாமல் அத்தை மகள் வசந்தாவைக் காணத் தங்கள் காரில் போனான். வசந்தா, தன் அத்தானைக் காணத் துடிதுடித்தாள். அன்று அவள் ரோஸ் நிறத்தில் மெல்லிய வாயில் கட்டியிருந்தது பட்டுப் பூச்சி ரோஜா மலர் அருகாகப் பறப்பதை நினைப்பூட்டியது. கன்னங்குழிய கண்கள் வெறி கொள்ள 'அத்தான்' என்று ஆசை முழுவதும் கொட்டிக் கூப்பிட்டபடியே வந்தாள்.

அதே சமயம் தியாகுவின்முகத்தைக் கண்டதும் "யாரடா அவன்? போ வெளியே. உன் அப்பன் எங்களை அலட்சியம் செய்தபோது நான்மட்டும் உனக்கு மரியாதை கொடுப்பேனா? போ வெளியே!" என்று கத்தினாள், சாந்தாவின் தாய்.

கெஞ்சிக் கூத்தாடியும், வசந்தாவையும் காணமுடியாதபடி அத்தை மறைத்தாள். கழுத்தைப் பிடித்து தள்ளாத வண்ணம் அனுப்பியும் வைத்தாள்.

அத்தை காட்டிய வரவேற்பைத் தான் பட்ட அவமானத்தைத் தந்தைக்குச் சொல்லாமல் விளம்பரம் மூலம் திருமணம் செய்துமுடிக்க விருப்பங்கொண்டான் தியாகு.

மறுவாரம் முக்கிய தினசரிகளில் 'மணமகள் தேவை' என்ற பகுதியில் 'எனது மகன் இன்னாருக்கு' என்று தந்தை விளம்பரம் கொடுத்தார். தொடர்ந்து விளம்பரம் ஒருவாரம் வெளிவரவே, சோமசுந்தரனார் வீட்டுக்குத் தபால்காரன் தனி நபர் தலையிலேற்றி கட்டுக் கட்டாக கொண்டு வந்து போட்டான். அதிலே வந்த போட்டோக்கள் "உலக அழகிகள்" போட்டிக்கு போகாத–ஆனால் போயிருக்க வேண்டிய போட்டோக்கள்–வந்தன. எதைத் தேர்ந்து முடிவு கட்டுவது என்ற பரம சங்கடத்தில் தந்தையும் தனயனும் தவித்தார்கள்.

ஒரு மாதம் சென்றது. அதற்குப் பிறகு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் செல்லா.

புகைப்படம், படிப்பு, குலம், சுற்றம் சூழ்நிலை இவ்வாறு பல கோணங்களில் பரிசீலனை செய்து முடித்தார்கள். பத்திருபது சினிமா நடிகைகளே வயதைக் குறைத்து மனுப்போட்டிருந்தார்கள். இராப் பகலாகத் தர்க்கம், நியாயம், விவாதம் பேசி முடிவுக்கு வந்தபோது இருபது பெண்ணுக்குள் தேடி முடிப்பது என்ற தீர்ப்புக்குள் வந்தார்கள்.

ஒரு வாரம் ஓடிற்று. இருபது பெண்கள் பற்றிய குறிப்பிலிருந்து பெண்கள் எழலாயிற்று. ஒரு சில பெண்களின் தந்தைமார் தமது பெண் படத்தை யனுப்பாமல் நேரில் வரும்படியும் விண்ணப்பம் செய்திருந்தார்கள்.

ஒருசில பெண்கள் தங்கள் திறமையைப் பற்றியும் கடித வடிவில் குறிப்பிட்டிருந்தார்கள். கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாக எந்தக் காரணம் காட்டியும் தள்ள முடியாதபடி மூன்று கடிதங்கள் அகப்பட்டன. மூன்று பெண்களில் யாரை முடி போடுவது?

"டேய் தியாகு, முதற் கடிதத்தைப் படி."


தியாகு கனிவாகப் படித்தான். "சரி அந்தக் கடிதம், படம் இங்கே கொண்டு வா" என்று சோமசுந்தரனார் அவைகளை வாங்கி தமது பைலில் வைத்துக் கொண்டார்.

இரண்டாவது மனுப் படிக்கப் பெற்றது. அந்த விலாசத்தையும், படத்தையும் வாங்கி பைலுக்குள் அடக்கம் செய்தார்.

'மூன்றாவது மனுவைப் படி.'

அன்புடையீர்,

தாங்கள் வெளியிட்ட 'மணமகள் தேவை' விளம்பரத்தைக் கண்ணுற்றேன். அதில் குறிக்கப் பெற்றயோக்கியதாம்சங்கள் அனைத்தும் என்னிடம் இருக்கும்



என்ற நம்பிக்கையில் நான் எழுதுகிறேன். தவருயின்பெரிய மனசுடைய தாங்கள் மன்னிக்கும்படியும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

என் வாழ்வு பயங்கரமானது. நான் அழகி. பேரழகி என்று போற்றப்படுகிறவள். இருந்தாலும் ஏழை. ஏழை சொல் அம்பலமேருது என்பதைப் பல இடங்களில் அறிந்தேன். உத்தியோகம் தேடிப் போனுலும் நான் ஏழை என்பதற்காக மறுத்துவிடுகிருர்கள். கலியாணச் சந்தையிலும் இப்படியே; காதல் சந்தையிலும் இப்படியே. ஆனுல் விளம்பரப் பகுதியிலாவது விடிமோட்சம் எனக்கு ஏற்படவேண்டும்.

என் நிலைமையைச் சொன்னதோடு நான் நல்ல குலத்தைச் சேர்ந்தவள் என்பதையும் தங்களுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளுகிறேன்...”

“டேய் தியாகு பரிதாபமாக இருக்கிறது இந்தப் பெண் எழுதிய மனு. அவள் படத்தைக் கொடு...பார்க்கலாம்” என்றதும் தியாகு படத்தைத் தேட ஆரம்பித்தான். அந்தப் படம் கடிதங்கள் நிறைந்த பையில் எங்கோ மறைந்து விட்டது.

‘போனுல் போகிறது மேலே படி.’

‘என் நிலைமையைச் சொன்னதோடு நான் நல்ல குலத்தைச் சேர்ந்தவள் என்பதையும் தங்களுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளுகிறேன். மேலும் எங்கள் குலம், கோத்திரம் பெருமை அறியக்கூடுமானுல் மிராசுதார் ஸ்ரீமான் சோமசுந்தரம் முதலியார் அவர்களையும் கேட்டுக் கொள்ளலாம்.’

“அது யார் சோமசுந்தரம்? விலாசம் என்ன?”

“மிராசுதார் ஸ்ரீமான் சோமசுந்தர முதலியார் மேல ஆவணி மூல வீதி, மதுரை.”

“அடடே நம்ம விலாசந்தானே அப்போ இந்தப் பெண் யார்? ஒரு வேளை கோவில்பட்டிப் பெண்ணே? மேலே என்ன? படி.”

“ஸ்ரீமான் சோமசுந்தரம் முதலியார் அவர்கள் எங்கள் பந்து. என் யோக்கியதை, கண்ணியம் இதற்கு அவர்களே சாட்சியும் ஆகும்...”

‘எந்த ஊர்? என்ன பெயர்?’ என்ருர் பரபரப்பாக.

‘அடடே திருநெல்வேலி வசந்தா..’ என்ருன் தியாகு

‘என்ன வசந்தாவா? என் மருமகளா? இப்படி அவளா எழுதியிருக்கிருள்?’

‘ஆமாம் அப்பா வசந்தாதான். தன் நிலைமை யோக்கியதை உங்களிடம் கேட்டால் தெரியுமென்று எழுத எவ்வளவு துணிச்சல் அவளுக்கு? பார்த்தீர்களா வசந்தாவின் சாமர்த்தியத்தை?’

கோபத்தில் சோமசுந்தரனர் புருவம் நெற்றிக்குத் தாண்டியது. மறுகணம் அவர் முகத்தில் யோசனைக் குறிகள் மடிந்தன.

‘என்னப்பா வசந்தா படம் என் கண்ணில் படவேயில்லையே?’

‘போகிறது நீ என்ன சொல்லுகிருய்? இரண்டொருவர் மகளுக்காக தாங்களே எழுதியபடிஅவள் படம் இல்லையோ என்னமோ?’

‘சொல்ல என்ன இருக்கிறது. அவள் துயரத்தை தேவை விளம்பரத்தில் கூறிவிட்டாள். உங்களை விட்டால் வேறு கதி யார்?’ என்றும் எழுதியிருக்கிருள்.



ஒருவர்:—என்ன தம்பி! முன்னெல்லாம் எப்பவும் கறுப்பு சட்டையே போட்டு கிட்டு இருப்பே, இப்ப என்ன கறுப்பு சட்டையைக் காணேம்?

மற்றவர்:—இல்லீங்க இது கறுப்புச்சட்டை தான், ஆனுல் சாயம் வெளுத்துப் போச்சுங்க.

‘சரி பதில் எழுது’

தியாகு பதில் எழுதிக்கொண்டிருந்தான்.

‘கலியாணம் நடந்து விட்டதா கல்யாணம் எப்போது நடந்தது?’ என்று ஆசையுடன் எதிர் பெஞ்சு வாலிபரைக் கேட்டேன்.

வாலிபன் குறும்புத்தனமாக தன்னருகே வெட்கத்தால் குழி விழுந்து சிரிக்கும் பெண்ணின் நிலா முகத்தை பார்த்து புன்முறுவல் செய்தான். அவள் குறையும் சொல்லுங்கள் என்று வளை கலகலக்கக் கைதட்டினுள்.

‘அவ்வளவுதான் சுபம்!’ என்ருன் வாலிபன்.

அருகாகஇருந்தபெண்என்னைப் பார்த்து ‘நீங்கள் கேட்ட கதையில் ஒரு குறை. வசந்தாவின் படத்தை மாமனருக்கு அடையாளம் தெரியாதா? ஆகவே வசந்தாவின் கல்யாண மனுவோடு யாரோ ஒரு பெண்ணின் படம் இணைக்கப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தில் கூட போர்ஜரி.வசந்தா எழுதவே இல்லை அதை எழுதியவர்...’ என்று கடைக்கண்ணுல் பார்த்தாள். அந்தப் பார்வை வாலிபன் மீது சங்கமமாயிற்று.


அவள் கற்பனையால் கதாரஸனை ஒருபடி உயர்ந்தது. இதை நான் வெகுவாக ரசித்த சமயம் வண்டியும் நிற்க வேண்டிய ஸ்டேஷனை சமீபித்துக்கொண்டிருந்தது.


‘பேஷ். கடிதத்தை எழுதியவன் தியாகுவா?’ என்று நான் கேட்கும்போது, பெஞ்சுக்கடியிலிருந்த பெட்டி படுக்கைகளை இருவரும் இழுத்துக்கொண்டிருந்தார்கள். என் கேள்வி அவர்கள் காதில் விழவில்லை. ஆனுல் என் கண்ணில் இரண்டு பெட்டிகள் விழுந்தன.

ஒரு பெட்டியில் ‘சோ. தியாகராஜன்’ என்றும் மற்ருெரு பெட்டியின் மேல் ‘வசந்தா’ என்றும் எழுதப்பட்டிருந்ததைப் பார்த்தேன். கண்களை நம்ப முடியாதபடி விரைத்துப் பார்த்துக்கொண்டேயிருந்தேன்.

ரயில் நின்றது! அவர்கள் இறங்கிப் போய்விட்டார்கள்.





ஜெமினி பால ஔவை குசல குமாரி



‘அர்மா’னில் அழகி மதுபாலா



ஷியாமா நடிக்கும் ஆப்ஷூன் சீக்கிரம் வெளிவரும்

## தசாவதாரம்

சினிமாப் படங்களுக்கு வசூலைக் காணேம். ஆனுல் தேனும்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் நடக்கும் “தசாவதார” நாடகத்துக்கு ஜனங்கள் சாரி சாரியாகச் சாய்கிருர்கள். வாரக்கணக்கில்கூட படங்கள் ஓடவில்லை. நவாப் ராஜமாணிக்கத்தின் “தசாவதாரம்” மாதக்கணக்கில் நடக்கிறது. இதில் என்ன சூட்சுமம் இருக்கிறது என்று தெரிந்து கொள்ளத்தான் சென்ற வாரம் “தசாவதாரத்தை”ப் பார்த்தேன்.


நவாப் ராஜமாணிக்கத்தின் “தசாவதாரம்” சினிமாவைவிடப் பன்மடங்கு நன்ருயிருக்கிறது. காட்சி ஜோடனைகளில் அவரை யாரும்—ஏன் சினிமாக்காரர்கள்கூட—வெல்லமுடியாது என்று திட்டமாகச் சொல்லலாம். மத்ஸ்யாவதாரத்தின்போது பெரிய மீன் கடலில் நீஞ்சுவதையும் அது வெறும் அட்டை மீனுயில்லாமல் வாயைப் பிளந்து பிளந்து நீந்தி உயிருள்ள மீனைப்போல் வலம் வருவதையும் பார்க்க பிரமிப்பாயிருக்கிறது. கூர்மாவதாரம் அதைவிட ஒருபடி மேலாகி பெரிய ஆமை நடந்து வந்து அலையிலிருந்து எட்டியும் பார்க்கிறது. இப்படி ஒரு அவதாரத்தைவிட இன்னொரு அவதாரம் சிறப்பாய் காண்பிக்கப்படுவதோடு உள்ளத்தைக் கொள்ளும் வைகுண்ட சீனும், பார்க்கப் பயங்கரமாயிருக்கும் ஹிரண்ய தர்பாரும் பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தும்படியாக அமைந்திருக்கின்றன.

ஜனங்கள் அனுதி காலமாக அறிந்து, பக்தி செய்து, தலைமுறை தலைமுறையாய் அவர்கள் ரத்தத்தில் ஊறி வந்திருக்கும் புராணங்களின் தொகுப்பு தசாவதாரம். எத்தனை தடவை சுவைத்தாலும் திகட்டாத பகவத் லீலாவிநோதங்கள் கொண்ட இந்தப் புண்ய நாடகத்தை மிகுந்த பக்தி சிரத்தையுடனும் மிகுந்த கவர்ச்சியாயிருக்கும்படியாகவும் நடத்தியும் நடித்தும் வருகிருர் நவாப் ராஜமாணிக்கம்.

பகவத் கதை, ஒரு பக்திமானின் முயற்சி. இந்த இரண்டும் சேர்ந்தால் தான் “தசாவதாரம்” இன்று சினிமாக்



நவாப்பின் ஹிரண்ய கோலம்



‘பகல் காணு’ என்ற படத்தில் பாரத்பூஷன்



பம்பாய் டாக்கீஸ் தயாரிப்பு ‘பாத்பா’னில் மீனுகுமாரி—அசோக்குமார்

களையும் 'பூட்' அடித்து வெற்றிகரமாக ஓடுகிறது. இதுதான் சூஷ்மம். இந்த நாடகத்துக்கு இருக்கும் ஆதரவைப் பார்த்தால் இது இன்னும் மூன்று மாதங்கள் நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதை எல்லோரும் பார்க்கலாம். பார்ப்பதானால் மூன்றரை மணி சாவகாசம் நல்ல பொழுதாகப் போகும். இதற்குக் கொடுக்கப்படும் பணம் வியர்த்தமே இல்லை. இத்தகைய புண்ய நாடகத்தை ஏற்பாடு செய்திருக்கும் 'ஸ்டேஜ்' கம்பெனியாரையும், இதை நடத்திவரும் நவாபையும் மிகவும் பாராட்டுகிறேன்.

—சாண்டில்யன்.

## பம்பாய்க்கடிதம்

★

வங்காளத்தை விட்டு பம்பாயில் குடியேறிய ஸ்ரீ ஹெமன் குப்தா 'பெறி' என்று ஒரு படத்தைத் தயார் செய்திருக்கிறார். 'பெறி' என்றால் தமிழில் தோணித் துறை என்று சொல்லலாம். இப்படத்தைப் பற்றி இவ்வூர் சினிமா உலகத்தில் ஒரே பேச்சாக இருக்கிறது. எல்லோரும் இப்படம் வெளிவரும் நாளை ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதுவரையில் எடுக்கப்படாத படம் 'பெறி' என்று ஸ்ரீ ஹெமன் குப்தா சொல்கிறார். தாயற்ற ஒரு சிறுவனின் சோகக் கதையைத்தான் இப்படத்தில் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. பாடகரும் சங்கீத டைரக்டருமான ஸ்ரீ ஹேமந்தகுமாரின் ஐந்து வயது மகன் பாபு மேற்சொன்ன தாயற்ற குழந்தையாக நடிக்கிறான்.

நான் இது வரையில் புரட்சிகளைக் காண்பிக்கும் படங்களைத்தான் தயார் செய்திருக்கிறேன். இப்பொழுது மனித சுபாவங்களை தத்ரூபமாக 'பெறி'யில் சித்தரித்துக் காண்பித்திருக்கிறேன். என்னையும் அறியாமல் படம் நன்றாக அமைந்து விட்டது என்று என்னிடம் அன்றொரு நாள் தெரிவித்தார் ஹெமன் குப்தா.

ஸ்ரீ ஹெமன் குப்தா ஒரு பெரிய புரட்சிக்காரர். கல்கத்தாவில் 'பூலி நெய்' '42' என்று இரண்டு உயர்ந்த படங்களைத் தயாரித்து நல்ல பெயர் சம்பாதித்திருக்கிறார். அவர் ஒரு உயர்ந்த வங்காளக் குடும்பத்தில், டாக்காவில் 50 வருஷங்களுக்கு முன்னால் பிறந்தவர். அவர் எம். ஏ. படித்தவர். சிறு வயதிலேயே சுதந்திரத்திற்காக புரட்சி செய்து எவ்வளவோ தரம் ஜெயிலுக்குச் சென்றிருக்கிறார். அவர் ஜெயிலிலிருக்கும்போதுதான் ஒரு பட முதலாளியும் டைரக்டருமாக வேலை செய்ய வேண்டுமென்று தீர்மானித்தார்.



பஞ்சோலி சித்திரமான 'பாய் ஸாஹி'பில் ஸ்ரீமதி


ஜெயிலை விட்டு வெளியேறியதும் ஸ்ரீ ஹெமன் குப்தா முதலில் ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸின் காரியதரிசியாக வேலை செய்ய ஆரம்பித்தார். பிறகு நியூதியேட்டர்ஸாரின் அதிபதி ஸ்ரீ பி. என். சர்க்காரைக் கண்டு ஸ்ரீ ஹெமன் குப்தா அவர் கம்பெனியில் ஒரு உப டைரக்டராக வேலை செய்ய ஆரம்பித்தார். அவர் சுயமாக முதலில் டைரக்ட் செய்த படத்தின் பெயர் 'த்வந்தா'.

ஸ்ரீ ஹெமன் குப்தா இரண்டு வருஷங்களுக்கு முன்னால் பம்பாய்க்கு வந்து ஆனந்த மடம் என்றபடத்தை பிலிமிஸ்தானின் சார்பாக தயாரித்தார். இனி மேல் சினிமா படங்களைத் தயாரிக்கும் முறைகளிலும் புதுப்புது மாறுதல்களை ஏற்படுத்த வேண்டுமென்று ஸ்ரீ ஹெமன் குப்தா கருதுகிறார்.


* * *

சென்ற வாரம் மதுங்காவில் 'நாடோடி'யின் பெயர்பெற்ற 'பஜகோவிந்தம்' என்னும் நாடகத்தை கலாநிலையத்தார் வெகு விமரிசையாக நடத்தினர். அந் நாடகத்தில் நடித்த எல்லோரும் இங்கு அநேக தொழில்களில் வேலையாயிருக்கும் உத்தியோகஸ்தர்கள். ஆனால், ஒவ்வொருவரும் நாடகக் கலையில் மிகவும் பழகினவர்கள் போல் மிகவும் உருக்கமாக நடித்துஎல்லோருடைய மனதையும் கவர்ந்தனர்.


தி. மா. ராமச்சந்திரன்



விஜயா 'சந்திரஹார'த்தில் பட்டாபிஷேக கட்டம்



காஷ்மீரிலுள்ள பிரபல சுகாதாரப் பிரதேசம். அமரநாத் போகும் வழியில் இருக்கிறது



ஸ்ரீநகர் ஜீலம் நதியில் உள்ள படகு வீடுகள்

158826

Regd. No. 2514

... REGISTRAR ...
11 OCT 1958


# சுதேசமித்திரன் புத்தகசாலை

விக்டரி ஹவுஸ் :: மவுண்ட்ரோட் :: சென்னை.

அடியிற்கண்ட ரயில்வே பிளாட்பாரங்களில் எமது புத்தகசாலைகள் இருக்கின்றன.

## ரயில்வே ஸ்டால்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1. | பெங்களூர் க. மெண்ட் | 16. | ரெய்ச்சூர் |
| 2. | செங்கற்பட்டு ஜங். | 17. | தாம்பரம் |
| 3. | கோயமுத்தூர் ஜங். | 18. | தென்காசி ஜங். |
| 4. | கடலூர் என். டி. | 19. | திருநெல்வேலி ஜங். |
| 5. | திண்டுக்கல் ஜங். | 20. | திருப்பதி |
| 6. | ஈரோடு ஜங். | 21. | திருப்பூர் |
| 7. | கரூர் | 23 | திருத்துறைபூண்டி ஜங். |
| 8. | காசரகாட் | 23. | திருவாரூர் ஜங். |
| 9. | கும்பகோணம் | 24. | திருச்சி கோட்டை |
| 10. | மதராஸ் பீச் | 25. | திருச்சி ஜங். |
| 11. | மதுரை ஜங். | 26. | தூத்துகுடி |
| 12. | மாயூரம் ஜங். | 27. | விழுப்புரம் ஜங். |
| 13. | மாயவரம் ஜங். | 28. | விருதுநகர் ஜங். |
| 14. | ஓலவக்கோடு | 29. | விருத்தாசலம் ஜங். |
| 15. | பொள்ளாச்சி ஜங். | | |

மேற்படி இடங்களில் எல்லாவிதமான இங்கிலீஷ், தமிழ் புத்தகங்களும் தினசரி, வாரப் பத்திரிகைகளும், அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய இடங்களில் பிரசுரமாகும் வாரப் பத்திரிகைகளும், மாதப் பத்திரிகைகளும் கிடைக்கும்.

மானேஜர்

**சுதேசமித்திரன் புத்தகசாலை,**

விக்டரி ஹவுஸ், மவுண்ட் ரோட், சென்னை.


Printed and Published by N. RAJAGOPALAN at the "Swadesamitran" Press, "Victory House", Mount Road, Madras, Editor: C. R. SRINIVASAN, B. A.



| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|